
# தமிழரசு

ஆகஸ்ட் 16-31, 1999 ரூ.5









**நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.**

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.


அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98




# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2030
ஆடி—ஆவணி
ஆகஸ்ட் 16—31, 1999

மலர் : 31 இதழ் : 4

விலை ரூ. 5


## இந்த இதழில்...


★ சுதந்திரத் திருநாள்
– முதலமைச்சர் உரை **2**

★ பொன்விழா கிராம வேலைவாய்ப்புத் திட்டம் **5**

★ ஏன் வேண்டும் தமிழில் அர்ச்சனை? **46**


### முதல் பக்க அட்டையில்

சுதந்திரத் திருநாளான 15-8-1999 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னைக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைக்கிறார்.

### கடைசிப் பக்க அட்டையில்

**சுதந்திரத் திருநாள் :** முதலமைச்சர் அணிவகுப்பு மரியாதை ஏற்றல், ஊனமுற்றோர்க்கு இனிப்பு வழங்குதல்.



## திருக்குறள்

*எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்*
*கள்ளாமை காக்கதன் நெஞ்சு.*

எந்தப் பொருளையும் களவாடும் நினைவு தன் நெஞ்சை அணுகாமல் பார்த்துக் (காத்துக்) கொள்பவனே இகழ்ச்சிக்கு ஆட்படாமல் வாழ முடியும்.

— கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

# பெற்ற சுதந்திரத்தை பேணிக் காத்திடவும் - பெருமைமிகு நாடாக நம்நாட்டை அகிலத்தில் உயர்த்திடவும் சூளுரைக்கும் நாள்தான் இந்நாள்!

## சுதந்திரத் திருநாளில் முதலமைச்சர் கலைஞர் உரை

பேரன்பு கொண்ட பெரியோர்களே!

அருமைத் தாய்மார்களே!


என் உயிரினுமேலான உடன் பிறப்புக்களே!

ஆண்டுதோறும் சுதந்திர தின விழா கொண்டாடுகிறோம் - ஆண்டுதோறும் தேர்தல் திருவிழா கொண்டாடுகிற நிலைமைக்கும் ஆட்படுத்தப் பட்டுள்ளோம்.

அரும்பாடுபட்டு பெற்ற சுதந்திரம் - ஆயிரக்கணக் கானோர் சிறையில் வாடி - அடக்குமுறைகளை ஏற்று - கண்ணீர் கொட்டி - செந்நீர் சிந்தி - அந்நிய ஆதிக்கத்தை விரட்டி அடித்து இந்த மண்ணின் மைந்தர்கள் பெற்ற விடுதலை!

இதனைப் பேணிக் காத்திடவும் பெருமைமிகு நாடாக அகிலத்தில் உயர்த்திடவும் - ஓர் அங்குல நிலத்திலும் பகைவர் பாதம் பதிந்திடாது தடுத்து நிறுத்திக் காத்திடவும் - வலிவூட்ட்வும், பொலிவு சேர்க்கவும் தோள் தட்டிச் சூளுரைக்கும் நாள் தான் இந்நாள்.

இந்த ஆண்டு இந்நாளில் நாம் கார்கில் களம் கண்டு - களத்தில் வெற்றி கண்டு; மேலும் பகை, புகை போல் நுழையவும் இடம் தராமல் அணி வகுத்து நிற்கின்றோம். இப்பெரும் பணியில் தம் உயிர் மூச்சை இமயப் பனித் தொடரில் காணிக்கையாக்கிய இந்திய நாட்டுத் தீரர்குலத் தியாகத் திருவிளக்குகளுக்கு நம் வீரவணக்கத்தைக் கண் கலங்கக் காணிக்கையாக்குவோம்.



குறிப்பாகத் தமிழகத்திலிருந்து செருமுனை சென்று தாயகம் காத்திட இன்னுயிர் ஈந்த வீரப் பெருமக்களாம்

1. **திருச்சி, பீமநகர் மேஜர் எம். சரவணன்**
2. **தஞ்சை, நாயக் ஆர். காமராஜ்**
3. **திருவண்ணாமலை, காட்டுக்காநல்லூர் சாப்பர் ஜெயவேலு**
4. **பூசிமலைக்குப்பம் கன்னர் பழனி**
5. **தாம்பரம் லெப்டினென்ட் கர்னல் ராகவன்**
6. **தேனி கரியனம்பட்டி செந்தில்**
7. **திருச்சி பாஸ்கர்**
8. **காவேரிப்பட்டினம் அவில்தார் சுபியுல்லா**
9. **நீலகிரி குன்னூர் அப்துல் சத்தார்**
10. **சிவகங்கை கோட்டூர் முகிலன்**
11. **கன்னியாகுமரி பைங்குளம் பிரசாத்**

ஆகியோரைத் தலைதாழ்த்தித் தொழுதிடுவோம் - தமிழகத்துப் புதிய புறநானூற்று மறவர்கள் அவர்கள் !

அவர் போன்றோர்; நாமிருக்கிறோம், நாடு இருக்கிறது நம் குடும்பத்தைக் காப்பாற்ற எனும் நம்பிக்கையில் விட்டுச் சென்றுள்ள அவர்தம் வழித்தோன்றல்களை வாழவைக்கும் பொறுப்பினை மத்திய அரசும் மாநில அரசுகளும் ஏற்றுள்ளன.

வீரமரணம் எய்திய 11 தீரர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 5 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

இவர்களின் நேரடி வாரிசுகளில் ஒருவருக்கு 7 இலட்சம் ரூபாய் முதல் 11 இலட்சம் ரூபாய் வரை மதிப்புடைய உயர் வருவாய்ப் பிரிவு அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்று, அவர்கள் விரும்பும் இடத்தில் வழங்கப்படவும்,

இவர்களின் வாரிசுகளில் ஒருவருக்குக் கருணை அடிப்படையில் அரசுப்பணி அளிக்கப்படவும்,

இவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இக்குழந்தைகள், எதிர்காலத்தில் உரிய வயதில் கலைக்கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் சேர்ந்து பயில இட ஒதுக்கீடுகள் செய்து ஆணையிடப் பட்டுள்ளன.

மேலும், கார்கில் போராட்டத்தில் வீரமரணம் எய்தியோர் - காயமடைந்த வீரர்கள் ஆகியோரின் குடும்ப நிலைமைகளை நேரில் சென்று விசாரித்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை மத்திய, மாநில அரசுகளிடமிருந்து உடனடியாகப் பெற்று வழங்கிடவும், அக்குடும்பங்களுக்கு மேலும் தேவைப்படும் உதவிகள் குறித்து அவ்வப்போது அரசுக்கு அறிக்கைகள் வழங்கி ஆவன செய்திடவும், முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தின் சிறப்பு அலுவலராக ஒருவர் தமிழக அரசினால் நியமிக்கப்பட்டு உள்ளார்.

இந்தப் புனித காரியத்துக்காகத் திரட்டப்படும் கார்கில் போர்வீரர் குடும்ப நிவாரண நிதிக்கென பெருந்தொகை குவிந்துள்ளது.

அதிலும் குறிப்பாக அனைத்து இந்தியாவில் கார்கில் போர் வீரர் நிவாரண நிதி திரட்டுவதில் நமது தமிழகம் முன் நிற்கிறது - முன்னோடியாகவும் நிற்கிறது.

கடந்த ஜூன் மாத இறுதியில் தமிழக அரசின் சார்பில் விடுத்த வேண்டுகோளையேற்று தமிழ்நாட்டு மக்கள் வலுவில் வந்து வரிசையில் நின்று வாரி வாரி வழங்கியுள்ள நிதி இன்றுடன் ஐம்பது கோடி ரூபாயை தாண்டியுள்ளது என்பதைப் பெருமிதத் துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது 52 நாட்களில் 50 கோடியே 43 இலட்ச ரூபாய்.

இந்த எழுச்சி, தமிழ் மக்களின் தணியாத நாட்டுப் பற்றினைக் காட்டும் அடையாள மாகும்.

கார்கில் போர் நிதிக்காகத் திரட்டப்படும் தொகையில் இதுவரையில் 15 கோடி ரூபாயைத்



தமிழ் மக்கள் சார்பாக பிரதமர் வாஜ்பய் அவர்களிடம் வழங்கியுள்ளேன்.

மேலும் இந்நிதியிலிருந்து 25 கோடி ரூபாய் நாளைய தினம் டெல்லியில் பிரதமர் அவர்களிடம் வழங்க இருக்கிறேன்.

சுதந்திரத்தின் பயனாகப் பல சாதனைகளை நாடு கண்டிருக்கிறது - மேலும் பல சாதனைகளைக் காண வேண்டியுள்ளது.

இந்தக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றுகிற சுதந்திரத்தைக் கூட மாநில முதலமைச்சர்களுக்குப் பெற்றுத் தந்தது நாம்தான் என்பதை யாரும் மறந்து விட முடியாது!

சுதந்திர நாள் தான் இது - சுதந்திர நாடு தான் இது; என்ற போதிலும் - அரசின் சார்பில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் சாதனை களையும் இன்று விளக்குவதற்கோ அல்லது புதிய திட்டங்களை அறிவிப்பதற்கோ சுதந்திர நாளில் எமக்கு சுதந்திரமில்லை.

காரணம் தேர்தல் கமிஷனின் கட்டளை அப்படி - அடிக்கடி தேர்தல் வருவதால் ஏற்படும் கஷ்டங்கள் இப்படி!

அறிவித்த திட்டங்களைத் தொடங்கிடவும் - தொடங்கியுள்ள திட்டங்களை நிறைவேற்றி முடித்திடவும் - மத்தியில் நிலையான ஆட்சி அமைந்திட வேண்டும். மாநிலத்தில் நிம்மதியான ஆட்சி தொடர்ந்திட வேண்டும்.

அதற்காக இந்தச் சுதந்திர நாளில் சபதமேற்று - அதனைச் செய்து முடிப்போம்.

வெல்க இந்தியத் திருநாடு.

வாழ்க தமிழகம்.

வணக்கம்.

*— சுதந்திரத் திருநாளான 15–8–1999 அன்று கோட்டை கொத்தளத்தில், தேசிய கொடியினை ஏற்றிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*




மாநில அரசின் பங்குடன் செயல்படுத்தப்பட்ட மத்திய அரசு திட்டங்களான, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம், கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்கும் திட்டம், கங்கா கல்யாண் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம் ஆகிய திட்டங்களை **31.3.99**–லிருந்து நீக்கி, இத்திட்டங்களை இணைத்து **1.4.99** முதல் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய **பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் – 1999–2000**ஆம் நிதி ஆண்டில் செயல்படவுள்ளது.

இதற்கான அரசு ஆணை (நிலை) எண். 137 21–7–1999 ஊரக வளர்ச்சித்துறையால் வெளியிடப் பட்டுள்ளது.

**பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் - வழிகாட்டலும், நெறிமுறைகளும்**

மாநில அரசின் பங்குடன் செயல்படுத்தப்பட்ட மத்திய அரசு திட்டங்களான, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம், கிராமப்புற மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்கும் திட்டம், கங்கா கல்யாண் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டங்களை **31.3.99** அன்றிலிருந்து நீக்கி, இத்திட்டங்களை இணைத்து **1.4.99** முதல் மத்திய அரசு புதிய பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஊரகப் பகுதிகளில், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்கு, வணிகக்கடன் மற்றும் மானிய உதவி வழங்கி சொத்துக்களை உருவாக்கி, அத்தகு நிலையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் குறைந்தபட்சம் தலா **ரூ.2,000** மாத வருமானமாகப் பெற ஆவன மேற்கொள்ளப்படும் என்பதே இப்புதிய திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளில், ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தது 30 விழுக்காடு, இத்தகைய வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்**

★ வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ள ஊரக மக்கள் சுய வேலைவாய்ப்பில் அவர்களாகவே சுய உதவி குழுக்களாக அமைத்துக் கொண்டு, கட்டடங்கள் கட்டுதல், திட்டமிடுதல், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், தொழில் நுட்பத்தை மேம்படுத்துதல், கடன் வசதி மற்றும் பொருட்கள் விற்பனை போன்ற எல்லா அம்சங்களிலும் முன்னேற்றம் பெறுவதை இக்கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் உள்ளடக்கியதாக இருக்கும்.

★ ஒவ்வொரு மாவட்டமும், அம்மாவட்டத்தில் உள்ள ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்தி, வறுமை

ஒழிப்பிற்கான திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். இதனடிப்படையில் ஒவ்வொரு வட்டாரத்திலும் நான்கு அல்லது ஐந்து குழுக்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயலாக்கப்படும்.



★ ஒவ்வொரு மாவட்டமும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கான பல்வேறு நடவடிக்கைகளுக்காக ஒரு திட்ட அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். இந்த திட்ட அறிக்கையில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

★ இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், சுய உதவிக் குழுக்கள் தன்னிச்சையாக இயங்குவதற்கு வழிவகுப்பதாகும். ஒவ்வொரு சுய உதவிக் குழுவிலும் பெண் உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஒரு வட்டாரத்தில் உள்ள குழுக்களில் குறைந்தது 50 சதவிகிதம் பெண்களை மட்டுமே கொண்ட குழுக்களாக இருக்க வேண்டும்.

★ சுய உதவிக் குழுக்கள் இத்திட்டத்தின் கீழ் கடன் உதவி பெறுவதற்கு சில அடிப்படைத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

★ இத்திட்டத்தின்கீழ் சுய உதவி குழுக்களின் நடவடிக்கைகளுக்கே உதவி அளிக்கப்படும். இருந்தபோதிலும் மற்ற நடவடிக்கைகளுக்காக 25 சதவிகிதம் உதவி அளிக்கலாம்.

★ சுய உதவி குழுக்களை அமைத்துக் கொள்வது அந்தக் குழு உறுப்பினர்களின் ஒரு தன்னார்வ நடவடிக்கையே ஆகும். எனவே, இதில் தேர்வு முறையே இல்லை. தனி பயனாளிகளைப் பொறுத்த வரையில் கிராம சபை தேர்வு செய்யும். சரியான தனிநபர் பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கு வங்கிகளுடன் கலந்தாலோசிப்பதும் பொருத்தமாக இருக்கும்.

★ இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், திறமையை நல்ல பயிற்சியின் மூலம் வளர்ப்பதும், மேம்படுத்துவதும் ஆகும். கடனை சரியான முறையில் பயனளிக்கத் தக்க வகையில் பயன்படுத்துவதற்காக, கடன் வழங்குவதற்கு முன் இத்தகைய பயிற்சி அளிக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி நிலையங்கள், அனுபவம் வாய்ந்த கைவினைஞர்கள் போன்றவர்கள் மூலமாக இத்தகைய பயிற்சி அளிக்கப்படும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் இத்தகைய பயிற்சி அளிப்பதற்காக 10 சதவிகிதம் நிதியை ஒதுக்கி "கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் – பயிற்சி நிதி" என்ற தலைப்பின் கீழ் பராமரிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்குப் பயிற்சி அளிப்பதற்கு எந்த வசதியும் இல்லையெனில், இத்தகைய வசதிகளுக்காகவும் இந்த நிதியைப் பயன்படுத்தலாம்.

★ பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் பங்கு, வழங்கப்பட்ட கடனை திரும்பப் பெறுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை, வாங்கிய கடனை குறித்த காலத்தில் திருப்பி செலுத்துவதில் சுய உதவி குழுக்கள் காட்டும் அக்கரை ஆகியவற்றின் அடிப்படையில் இத்திட்டத்தின்கீழ் பயனாளிக்கு/பயனாளிகளுக்கு அளிக்கப்படும் கடன் வசதி, ஒரு தடவை மட்டுமே எடுக்கப்படும் நடவடிக்கையாக இல்லாமல், பயனாளிகள் மேலும் கடன் வசதி பெறுவதற்கு ஏற்றவாறு ஊக்கப்படுத்துவதாகவும் அமைய வேண்டும்.

★ மானிய உதவி தனிப்பட்ட பயனாளிகளைப் பொருத்த வரையில், திட்ட மதிப்பீட்டிற்காக 30 சதவிகிதமாகவும், (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவருக்கு 50 சதவிகிதம்) அதிகபட்சம் ரூ.7,500 (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவருக்கு ரூ.10,000 ஆகவும் இருக்கும்). குழு பயனாளிகளைப் பொருத்த வரையில், திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் வழங்குவது தொடரும். தனி நபர் அல்லது சமுதாய சிறுபாசனத் திட்டங்களைப் பொறுத்த வரை கங்கா கல்யாண் திட்டம் கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் இணைக்கப்பட்ட போதும் முன்பு இருந்ததைப் போலவே நிதிநிலையில் உச்சவரம்பற்ற நிலையே தொடரும். முதலீடுகளைப் பொறுத்த வரை எந்த வரையறையும் இல்லை.

★ அடிப்படை கட்டமைப்பு வசதிக்காக, இத்திட்டத்தின் கீழ், ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் மொத்த நிதியிலிருந்து அதிகபட்ச வரம்பான இருபது சதவிகிதத்திற்குள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் செலவிடலாம். இந்த செலவினத்தை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் "கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம், அடிப்படை கட்டமைப்பு நிதி" என்ற தலைப்பின் கீழ் பராமரிக்க வேண்டும். அடிப்படை கட்டமைப்பு வசதிகளின் தேவைகளுக்காக வங்கிகளுடன் இணைந்து திட்டமிடப்பட வேண்டும்.

★ தொழில் நுட்பத்தை மேம்படுத்துவது முக்கிய நோக்கமாகும். ஊரகப் பகுதிகளில் எரிசக்தி ஆதாரங்களைக் கண்டறிவதும், மலிவான மாற்று எரிசக்தி ஆதாரத்தை அளிப்பதும் இதில் அடங்கும்.

★ நிலத்தை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளான தோட்டக்கலை, பூச்செடிகள் வளர்த்தல் போன்றவற்றில் ஈடுபடும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சிறுபாசன வசதிகளை அளித்து இத்திட்டம் ஊக்கமளிக்கும். இத்திட்டம் திறந்த கிணறுகள் அமைப்பது மற்றும் நிலத்தடி நீரை முழுமையாகப் பயன்படுத்துவது ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும்.

★ இத்திட்டத்தின் முக்கியமான நோக்கம் கடன் வழங்குவதுதான், மானியம் அளிப்பது ஒரு சிறிய நடவடிக்கையே. எனவே, கடன் வழங்குவதற்கு முன்பு பயனாளிகளைத் தேர்வு செய்வதற்காகவும், வழங்கிய கடனை திரும்பப் பெறும் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காகவும் வங்கிகளுடன் இணைந்து திட்டமிட வேண்டும்.

★ வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் ஒவ்வொரு குடும்பத்தையும், இத்திட்டத்தின்கீழ் உதவி அளித்து மூன்று வருடங்களில் வறுமை நிலையிலிருந்து விடுவிப்பதே இத்திட்டத்தின் மிக முக்கிய நோக்கமாகும்.

★ இருக்கும் நிதியின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும், அடுத்த ஐந்து வருடங்களில் குறைந்தது 30 சதவிகிதம் குடும்பங்களுக்கு உதவி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

★ இத்திட்டத்தின் கீழ் வறுமையை ஒழிப்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகளில் மகளிரே மையமாக கருதப்படுவார்கள். மகளிருக்கான ஒதுக்கீட்டில் முன்பு இருந்ததில் எவ்வித மாற்றமும் இல்லை. முன்பு குறிப்பிட்டுள்ளதைப் போல் 50 சதவிகிதம் சுய உதவி குழுக்கள் முழுவதுமாக பெண்களைக் கொண்டதாக இருக்கும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், உடல் ஊனமுற்றோருக்கான ஏற்பாடுகளும் தொடரும்.

★ கிராமப்புற கைவினைஞர்கள் அவர்களுடைய இயல்பான திறமையை வெளிப்படுத்தி வறுமையிலிருந்து மீண்டு வருவதற்கு வகை செய்வதும் இத்திட்டத்தின் மற்றொரு முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் கிராமப்புற கைவினைஞர்கள் கருவிகள், மூலப் பொருட்கள், வாங்கி அவர்களது அன்றாடத் தொழில் மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஊக்குவிக்கப் படுவார்கள்.

★ இத்திட்டம், மாவட்டங்களில் உள்ள வங்கிகள், நிதி நிறுவனங்கள், கிராம ஊராட்சி அமைப்புகள், தன்னார்வமிக்க அமைப்புகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து ஊரக வளர்ச்சி முகமைகளால் செயல்படுத்தப்படும்.

★ இத்திட்டம், பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு முன்னுரிமை அளிக்கும்.

★ இத்திட்டத்திற்கானநிதியை மத்திய அரசும், மாநில அரசும் 75:25 என்ற சதவிகிதத்தில் பகிர்ந்து கொள்ளும்.

★ வறுமை நிலைகளின் அடிப்படையில் தற்போது உள்ள நடைமுறைப்படி இத்திட்டத்திற்கான நிதியை மத்திய அரசு அளிக்கும். இதற்காக சிறப்பு காரணங்களையும் மத்திய அரசு கவனத்தில் கொள்ளும்.

மத்திய அரசு இத்திட்டத்திற்காக இம்மாநிலத்திற்கு மொத்த நிதி ரூ.6132.52 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், இதில் மத்திய அரசின் பங்கு ரூ.4599.39 இலட்சம் (75%) என்றும், மாநில அரசின் பங்கு ரூ.1533.13 இலட்சம் (25%) என்றும் தெரிவித்துள்ளது. மேலும், இந்த ஒதுக்கீட்டுக்கு ஏற்றவாறு, மத்திய மாநில அரசுகளின் பங்கு விகிதம் 75:25 என்ற அடிப்படையில் மாநில அரசின் பங்காக விடுவிக்கப்பட வேண்டிய நிதிக்கு மாநில அரசின் வரவு செலவு திட்டத்தில் வகை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

மத்திய அரசு இத்திட்டத்தை 1999–2000ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக, மத்திய அரசின் நிதியில் முதல் தவணையாக ரூ.2299.695 இலட்சத்தை 28 மாவட்டங்களுக்கும் பகிர்ந்து விடுவித்துள்ளது. மாவட்டவாரியாக மத்திய அரசின் நிதிக்கு இணையாக, மாநில அரசின் பங்காக 25 சதவிகித நிதி ஊரக வளர்ச்சி இயக்குநரால் விடுவிக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தை 1999–2000ஆம் ஆண்டு முதல் செயல்படுத்துவதற்கான கருத்துரு ஊரக வளர்ச்சி இயக்குநரிடம் கேட்கப்பட்டது. ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பிய கருத்துருவை அரசு கவனமாக ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடுகிறது.

கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1999–2000 ஆண்டிற்காக மத்திய அரசு இம்மாநிலத்திற்காக ஒதுக்கியுள்ள மொத்த நிதியான ரூ.6132.52 இலட்சத்தில், மத்திய அரசு அதன் பங்கு 75 சதவிகிதம் ரூ.4599.39 இலட்சமும், மாநில அரசின் 25 சதவிகிதப் பங்கு ரூ.1533.13 இலட்சமும் ஆகும். மத்திய அரசின் பங்கான ரூ.4599.39 இலட்சத்தில் முதல்

தவணையாக ரூ.2299.695 இலட்சத்தை மத்திய அரசு விடுவித்துள்ளது. எனவே மேற்படி திட்டத்திற்காக மாநில அரசின் 25 சதவிகித பங்காக ரூ.1533.13 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் மாநில அரசின் 1999-2000 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மத்திய அரசால் இப்புதிய திட்டத்திற்காக ஒருங்கிணைக்கப்பட்டு 31-3-99லிருந்து நிறுத்தப்பட்டு விட்ட மாநில அரசின் வரவு செலவு திட்டத்தில் மொத்தமாக ரூ.5133.66 இலட்சம் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மொத்தமாக ஒருங்கிணைத்து, பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத் தலைப்பின்கீழ் செலவிடுவதற்கு ஏதுவாக வழிவகை செய்யப்பட்டு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**திட்ட விளக்கம்**

சென்ற ஆண்டுகளில் பலவித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் கிராமப்புறங்களில் ஏழ்மை, இந்தியாவில் தொடர்ந்து குறிப்பிடத்தக்க நிலையிலே உள்ளது. ஒவ்வொரு வருடத்திலும் தொடர்ச்சியாக வறுமையை ஒழிப்பதற்காக பல திட்டங்களுக்கு வலிமை ஊட்டப்பட்டபோதும், சதவிகித கணக்கில் 1973-74இல் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் வறுமைநிலை 56.44 சதவிகித அளவில் இருந்தது. 1993-94ஆம் ஆண்டில் 37.27 சதவிகிதமாக குறைக்கப்பட்டபோதும், கிராமப்புறங்களில் ஏழை மக்கள் ஏறக்குறைய வறுமை நிலையிலேயே உள்ளதாகவும் இவர்களது எண்ணிக்கை சுமாராக 244 மில்லியன் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வளவு அதிக அளவில் ஏழ்மை நிலையில் ஊரக மக்கள் இருப்பது வளர்ச்சித் திட்டங்களை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதை உணர்வது கடினமல்ல. இந்த நிலைமையை உடனடியாக சரிசெய்ய வேண்டும் என்பது மிகத் தெளிவானதாகும். இத்தகைய சூழ்நிலையில் சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. சுய வேலைவாய்ப்புத் திட்டங்களே ஊரக ஏழை மக்களுக்கு நிலையான வருவாயை பெறுவதற்கு அடிப்படையாக அமையும்.

முதலில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மட்டுமே ஒரே சுய வேலைவாய்ப்புத் திட்டமாக இருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பிற்காக பயிற்சி அளிக்கும் திட்டம் முதலில் தொடங்கப்பட்டாலும், தொடர்ந்த ஆண்டுகளில் ஊரகப் பகுதிகளில் வாழும் மகளிர் மற்றும் சிறார்களுக்கான திட்டம், கிராமப்புற கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்கும் திட்டம் மற்றும் கங்கா கல்யாண் திட்டம் போன்ற தொடர்புடைய திட்டங்களும் சேர்க்கப்பட்டன. பல திட்டங்கள், நிரந்தரமான வருவாயை உருவாக்கும் நோக்கத்துடன் அல்லாமல் ஒவ்வொன்றும் தனித்திட்டமாக கருதப்பட்டு, தனிமைப்படுத்தி அத்திட்டத்திற்கான இலக்கை அடைவதற்காக மட்டுமே செயல்படுத்தப்பட்டதால் ஒழுங்கான சமூக இணைப்புடன் செயலாக்கம், திட்டங்களை ஒருங்கிணைந்து செயலாக்குதல் போன்ற நோக்கங்கள் நிறைவேறவில்லை. இந்த நிலைமையை சரிசெய்வதற்காக மத்திய அரசு சுய உதவித் திட்டங்களை மாற்றி அமைப்பதற்கு முடிவு செய்துள்ளது. பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் என்ற புதிய திட்டம் 1-4-99 முதல் தொடங்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் வாழும் ஏழை மக்கள் சுய உதவிக் குழுக்களாக தாங்களாகவே முன்வந்து அமைத்துக்கொள்ளுதல், பயிற்சி, கடன் வழங்குதல், தொழில்நுட்ப வசதி, அடிப்படை கட்டமைப்பு வசதி, பொருட்களை விற்பனை செய்வதற்கான உதவி போன்ற சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் பல அம்சங்களை உள்ளடக்கி இப்புதிய பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் 75:25 என்ற சதவிகிதத்தில் நிதியைப் பகிர்ந்துகொள்ளும்.

பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுவதிலிருந்து முந்தைய திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பிற்காக பயிற்சி அளிக்கும் திட்டம், மகளிர் மற்றும் சிறார்களுக்கான திட்டம், கிராமப்புற கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்கும் திட்டம், கங்கா கல்யாண் திட்டம் மற்றும் மில்லியன் கிணறுகள் திட்டம் நடைமுறையில் இல்லை. 1-4-99 அன்று, மேற்குறிப்பிட்ட முந்தைய திட்டங்களில் செலவிடப்படாமல் மீதி உள்ள நிதி, பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கானக் கணக்குத் தலைப்பின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டு இப்புதிய திட்டத்தின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி பயன்படுத்தப்படும்.

**1. செயல் தொகுப்புகள் - திட்டமிடல் மற்றும் தேர்வு செய்தல்**

1.1. பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் நோக்கம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள தகுதி வாய்ந்த மற்றும் ஆர்வமுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் சிறு செயல்கள் துவங்க உதவியளித்து மூன்றாண்டுகளுக்குள் வறுமை கோட்டிற்கு மேல் கொண்டு வருவதாகும். ஒரு திட்ட காலத்தில் வறுமை கோட்டினை கடந்து வந்த நபர் மீண்டும் அடுத்த திட்ட காலத்தில் தன்னுடைய வருவாய் குறைந்து, வறுமைக் கோட்டின் கீழ் சென்றுள்ளதை நாம் காண்கிறோம். எட்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், வறுமை கோட்டிற்கான அளவுகோல் என்பது குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.11,000 என இருந்தது. பின்னர், ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒவ்வொரு மாநிலத்திற்குமான ஆண்டு வருமானத்தின் அளவுகள் வேறுபட்டுள்ளது. அதாவது, இந்த ஆண்டு வருமானம் ரூ.13,000 முதல் ரூ.19,650 வரை உள்ளது. அடுத்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வறுமைக் கோட்டிற்கான அளவு, ஆண்டு வருமானம் சுமார் ரூ.22,000 முதல் ரூ.24,000 என்ற அளவில் அமையலாம்.

எனவே, பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட பயனாளியின் குடும்ப வருமானம், அடுத்த

ஐந்தாண்டுத் திட்ட கால வறுமைக்கோட்டின் அளவையும் கடந்து, முன்னேறும் நிலையில் இருக்கவேண்டும் என்பது இத்திட்டத்தில் உறுதி செய்யப்பட வேண்டும். எனவே, பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட பயனாளி பெறக்கூடிய நிகர மாத வருமானம் ரூ.2,000–க்குக் குறைவில்லாமல் இருக்கும் வகையில் சுய செயல் வாய்ப்பு அக்குடும்பத்திற்கு அளிக்கப்பட வேண்டும். இதற்கான வருவாய் முதல் வருடத்திலேயே கிடைக்காமல் போகலாம். மேலே கூறியுள்ளது போல, பயன்பெறும் பயனாளியின் குடும்பம் மூன்றாண்டுகளுக்குள் வறுமைக்கோட்டினைக் கடக்க வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஆகவே, இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு வழங்கப்படும் செயல், அவருடைய மூலதனத்தினை விரிவாக்கிக் கொள்ளும் வகையிலோ அல்லது அவருடைய திறமையினை வளர்த்துக் கொள்வதின் மூலமோ, முதல் இரண்டு வருடங்களில் இல்லாவிட்டாலும், மூன்றாவது ஆண்டிலாவது மாத வருவாய் ரூ.2,000–க்கு மேல் ஈட்டித் தருவதாய் அமைய வேண்டும்.

**1.2.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம், தொகுப்பு நோக்கிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. அதாவது, ஒவ்வொரு வட்டாரத்திலும் பல்வேறு செயல்கள் மேற்கொள்ளப்பட்டு கவனச் சிதறல் ஏற்படுவதை தவிர்த்து, குறிப்பிட்ட சில முக்கிய செயல்களை மட்டும் தேர்ந்தெடுத்து அதற்கான அனைத்து வசதிகளையும் பயனாளிகளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் இத்திட்ட பயனாளிகளுக்குத் தங்கள் முதலீட்டிலிருந்து, நிரந்தரமான மற்றும் இலாபம் ஈட்டக்கூடிய வருமானம் கிடைக்கும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்கள் தொகுப்பான பகுதிகளில் செயல்படுத்தப்பட்டால் அவர்களுக்கு மூலப்பொருட்களை பெற்றுத் தருவதிலோ, அதே போல் உற்பத்திப் பொருள்களை விற்பனைக்கு எடுத்துச் செல்வதிலோ சரியான இணைப்புகளை ஏற்படுத்தித் தரமுடியும். இவ்வாறு தொகுப்பான பகுதிகளில் செயல்படுத்துவதினால், மேற்பார்வையிடுதல் எளிமையாவதுடன், பயனாளிகளுக்குத் தேவையான பல்வேறு உதவிகளையும் வழங்க இயலும்.

### முக்கிய செயல்களைத் தேர்ந்தெடுத்தல்

**1.3.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் வெற்றியின் முதல்படி, தேர்ந்தெடுக்கப்படும் செயல்களின் அடிப்படையிலேயே அமைகிறது. முக்கிய செயல்களைத் தேர்ந்தெடுக்கும் போது, உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்கள் மற்றும் ஒவ்வொரு தொகுப்பான பகுதிகளில் உள்ள பயனாளியின் விருப்பம், ஈடுபாடு மற்றும் திறமையினை கருத்தில் கொள்ள வேண்டும்.

**1.4** முக்கிய செயல்களைத் தேர்வு செய்யும்போது, அவசரப்பட்டு, சிந்திக்காமல் தேர்ந்தெடுக்கப்படுவதை தவிர்த்து, தீர ஆலோசனை செய்து தேர்வு செய்யவேண்டும். இதில் வட்டார அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புக் குழு முக்கிய பங்கு வகிக்கும். இத்திட்டத்தின் கீழ் அடுத்த ஐந்தாண்டுகளுக்கான செயல்களைத் தேர்ந்தெடுப்பதில் இத்திட்டப் பயனாளிகளின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற இக்குழு உறுதி செய்யவேண்டும். முதலில், ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழை மக்களில், 30 சதவிகிதமாவது, அடுத்த 5 ஆண்டு காலங்களுக்குள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற செய்வதற்கான முயற்சி எடுக்கவேண்டும். (ஆனால், இந்த குறியீடு, நிதி வசதியினைப் பொறுத்தே அமையும்) இருப்பினும், செயல் திட்டம் தயாரிக்கும் போது இந்த இலக்கை கருத்தில் கொள்ள வேண்டும். இத்திட்டம் தயாரிக்கும் போது, வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் கணக்கெடுப்பு அறிக்கையில் காணப்படும் விவரங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை மக்கள் சிலரிடம் நிலம் இருக்கலாம். அவர்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் உதவியளிக்கும் போது, அவர்களுடைய நிலத்திலிருந்து கூடுதல் வருவாய் கிடைக்கும் வகையில் கிணறுகள், விசைப்பம்புகள் மற்றும் இதர நீர்ப்பாசன வசதிகள் அளித்து வறுமைக் கோட்டிற்கு மேல்வரும் வகையில் கூடுதல் வருமானம் கிடைக்கச் செய்யலாம். வட்டார அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட குழு வேளாண்மை மூலம் கூடுதல் வருவாய் பெறக்கூடிய வகையில் சொத்துக்களை உருவாக்கும் வாய்ப்புகளைப் பரிசீலனை செய்து முடிவெடுக்கலாம். வேளாண் தொழிலுக்கு உதவி செய்யும்போது, பயனாளிகளுக்கு இடுபொருட்களும் மற்றும் குறைந்த கால கடன் அளிக்கும் வசதியும் கிடைக்க வகை செய்வதற்காக தக்க வகையில் கவனமாகத் திட்டமிட வேண்டும். இரண்டாவது பிரிவில் ஏற்கெனவே செயல் திறமை பெற்ற நபர்களுக்கு உதவுதல் குறித்த நடவடிக்கை அடங்கும். இவ்வாறு செயல் திறமை பெற்ற நபர்களில், கிராமங்களில் முக்கிய அங்கம் வகிப்பவர் கிராம கைவினைஞர்கள் ஆவர். அதற்கடுத்து வேலையில்லாத படித்த இளைஞர்கள் பிரிவை பரிசீலிக்கலாம். இவர்களில் பெரும்பாலானோர் ஏற்கெனவே கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களாக இருக்கலாம். இவ்வாறு பயிற்சி பெற்ற பயனாளிகளின் பட்டியல் தயாரித்து, அந்தந்தப் பகுதிகளுக்கு மிகப் பொருத்தமான செயலை தேர்வு செய்ய வேண்டும்.

**1.5.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட குழு, திட்டமிடும்போது, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, இதர வங்கிகள், தொழில் நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் தயாரித்துள்ள இதர புள்ளிவிவர கணக்கெடுப்புகளையும் கருத்தில் கொள்ளவேண்டும். மாவட்டத்திலுள்ள கதர் மற்றும் கிராம கைத்தொழில் அலுவலர்களையும், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் ஆகியோரையும் கலந்தாலோசிக்க வேண்டும்.

**1.6.** வட்டார பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட குழு, வட்டாரத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சித் தலைவர்கள், மேலும் கிராமத்தில் வாழும்

நிலமற்ற ஏழைகள், படித்த வேலைவாய்ப்பற்றவர்கள், நிலம் வைத்துள்ள ஏழை கிராம மக்கள் மற்றும் கிராம கைவினைஞர்கள் ஆகியோரையும் கலந்தாலோசிக்க வேண்டும். ஏற்கெனவே சுய உதவி குழுக்கள் உள்ள இடங்களில் அவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும். இவ்வாறு கலந்தாலோசிக்கும் போது, பல்வேறு வகையான செயல் வாய்ப்புகளுக்குத் தேவையான நிதி வசதி, தொழில்நுட்ப வசதி, திறன் மேம்பாட்டு வசதி மற்றும் விற்பனை வசதி ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஏழை மக்களை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டுவர, பல்வேறு வாய்ப்புகளை குழுவினர் தீர பரிசீலனை செய்யவேண்டும். இவ்வாறு கலந்தாலோசிக்கும் பொழுது, குறிப்பிட்ட பகுதியில் ஏற்கெனவே அரசு மூலமோ அல்லது இதர வகையில் செயல்படுத்தப்பட்ட தொழில்களின் செயல்பாடு குறித்த தகவல்களையும் பெறவேண்டும். இத்தகவல்கள் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட குழு, கிராம மக்களுடன் கலந்தாலோசனை செய்யும்போது அவர்களின் பாரம்பரிய செயல் குறித்த விவரங்களை அறிந்து கொள்ளவும், சரியான செயல்களைத் தேர்ந்தெடுக்கவும் உதவும். இம்முறை, கிராம ஏழை மக்களின் பாரம்பரியமான செயல் திறமைக்கு மதிப்பளிப்பதுடன், அதனை அடிப்படையாகக் கொண்டு மேலும் சிறந்த திட்டங்களைச் செயல்படுத்தவும் உதவுகிறது. இவ்வாறு கலந்தாலோசனை செய்வது என்பது பெயரளவிலின்றி உண்மையாகவும் நேர்மையாகவும் அமைவதை வட்டார குழு உறுதி செய்யவேண்டும்.

**1.7.** வேளாண் நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில் நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்துதல் முக்கியமானதாகும். திறந்தவெளி கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் குழாய்க் கிணறுகள், நீரிறைத்தல் மற்றும் தடுப்பு அணைகள் கட்டுதல் போன்ற வசதிகளை இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்யலாம். பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் நீர்பாசன வசதிகள் செய்யும்போது, அந்தத் திட்டத்தில் அதிக வருமானம் கிடைப்பதை உறுதி செய்யும் அளவில் அனைத்து வசதிகளையும் செய்யலாம். ஏழை கிராம மக்களின் பாசன வசதி இல்லாத நிலங்களை எவ்வளவு அதிகம் பாசன வசதி பெறும் நிலமாக மாற்றி அவர்களுக்குத் தொடர்ந்து நிரந்தரமான வருமானம் கிடைக்கச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு உதவி செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். சிறிய பாசன முதலீடு திட்டத்தில் கிணறுகள் தோண்டுவதற்கு, நீர் இறைப்பான் அமைக்க மற்றும் நில மேம்பாட்டிற்குத் தேவைப்படும் நிதி ஆகிய எல்லாவற்றையும் சேர்ந்து ஒட்டுமொத்தமான திட்டமாகத் தயாரிக்க வேண்டும். வேளாண்மை செய்வதற்கான மூலதன செலவையும் கூட இத்திட்டத்தின் கீழ் வழங்கலாம். ஆனால், அதற்கு மானியம் வழங்கக் கூடாது.

**1.8.** சிறுபாசனத் திட்டங்களுக்கு உதவும் பொழுது ஒரு குழுவிற்கோ அல்லது ஒரு நபர் பயன்படும் வகையிலோ திட்டமிடலாம். இம்மாதிரி திட்டங்களில் முதலீடு செய்யும்போது மொத்தமாகத் தேவைப்படும் இனங்களைச் சேர்த்து ஒரு திட்டம் தயார் செய்து செயல்படுத்த வேண்டும். இதற்கு மாறாக இங்கொன்றும் அங்கொன்றுமாக நிதியினை செலவிடக்கூடாது. சிறுபாசனத் திட்டம், இத்திட்டத்தின்கீழ் செயலுக்கு அடிப்படையாகவோ அல்லது சுயஉதவி குழுக்கள் அமைவதற்கும் அடிப்படையாகலாம்.



1.9. வேளாண்மை தொடர்பு இல்லாத செயல்களைத் தேர்வு செய்யும்போது எந்த செயல்கள் மூலம் உற்பத்தி ஆகும் பொருட்கள்/சேவைகள் உடனடியாக வருமானம் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு அத்தகைய செயல்களைத் தேர்வு செய்ய வேண்டும். இதற்கான வழிமுறைகள் பின்னர் வெளியிடப்படும்.

1.10. மேலே குறிப்பிட்ட பல்வேறு வகையான கலந்தாய்வுக்குப் பிறகு வட்டார அளவிலான குழு, 8 முதல் 10 செயல்களை முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தி தயாரிக்க வேண்டும். தயாரிக்கப்பட்ட இப்பட்டியலை ஊராட்சி ஒன்றியக் குழுவின் பொதுக்குழு கூட்டத்தில் வைக்கவேண்டும். இத்தகைய பரிந்துரைகள் பெறப்பட்டபின்பு, வட்டார வளர்ச்சி அலுவலர் மாவட்ட அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட குழுவின் ஒப்புதலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்களின் பட்டியலை அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்புவதற்கு முன்னர், வட்டார அளவிலான குழு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு செயலுக்கும் இத்திட்டத்தின் கீழ் உள்ள வழிமுறைகளின்படி ஒரு தனியான சுருக்க திட்ட அறிக்கையைத் தயார் செய்யவேண்டும்.

1.11. மாவட்ட அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக் குழு, வட்டாரங்களில் இருந்து பெறப்படும் கருத்துருக்களைப் பரிசீலனை செய்து சரி செய்ய வேண்டும். அவர்கள் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 4 அல்லது 5 செயல்களுக்கு மிகாமல் தேர்வு செய்து ஒப்புதல் அளிக்கவேண்டும். இவ்வாறு தேர்வு செய்யும்போது, மாவட்ட அளவிலான பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டக் குழு ஏற்கெனவே இருக்கும் உற்பத்தி/சேவை பயிற்சி மற்றும் உற்பத்தி பொருட்களை விற்பதற்கான கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தக்கூடிய செயல்களாக தேர்ந்தெடுக்க வேண்டும். பொருட்களின் உற்பத்தியிலிருந்து விற்பனை வரை கட்டமைப்பு வசதிகளைப் புதியதாக உருவாக்க வேண்டிய செயல்களைத் தேர்வு செய்யக் கூடாது. தேர்ந்தெடுக்கப்படும் செயல்களுக்கு ஏற்கெனவே இருக்கும் பொருளாதார வசதிகளைப் பயன்படுத்தக் கூடியதாகவும் எங்கெங்கு குறைபாடு காணப்படுகிறதோ, அதை மட்டும் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலுள்ள செயல்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். இரண்டாவதாக, மாவட்ட அளவிலான குழு, செயல்களை தேர்வு செய்யும்போது பயனாளிகள் செய்யும் செயல்கள் மூலம் வங்கிக் கடனை செலுத்தியது போக மாதம் ஒன்றிற்கு, குறைந்தது ரூ.2,000 வருமானம் கிடைக்கக்கூடிய செயல்களைத் தேர்வு செய்யவேண்டும். மேலும், செயல்களைத் தேர்வு செய்யும்போது துறை அலுவலர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு கிடைப்பதை இக்குழு உறுதி செய்யவேண்டும்.

1.12. மாவட்ட அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக் குழு, ஒவ்வொரு முக்கிய செயலுக்குமான கருத்துருவினை மேற்படி செயல் சம்பந்தப்பட்ட வல்லுநர்களையும் துறை அலுவலர்களையும் கலந்து பரிசீலிக்க வேண்டும். வேளாண் நடவடிக்கைக்கான திட்டங்களுக்கு நிதி வரம்பினை நிர்ணயிக்கும்போது, மண்டல அளவிலான தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிர்ணயிக்கும் உச்ச வரம்பினை அளவு கோலாக எடுத்துக் கொள்ளவேண்டும். சேவைச் செயல்களுக்குக் கடன் வழங்கும் போது, ஒவ்வொரு செயலுக்கும் நிதி உச்ச வரம்பு மற்றும் பொருளாதார நிபந்தனைகளை மாவட்ட அளவிலான குழுவே நிர்ணயிக்கும்.

1.13. ஒரு பகுதியில் ஏற்படுத்தப்பட வேண்டிய செயல்களைத் தேர்வு செய்வதென்பது ஒரே காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கையாகும். எனவே, இத்தகைய தேர்வினை மிகவும் கவனமாகவும், வழக்கமான மெத்தனத்துடன் தேர்வு செய்யாமல், கவனமான முறையில் தேர்வு செய்யவேண்டும். பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் 4 அல்லது 5 முக்கிய செயல்களை வழிகாட்டி முறையின்படி தேர்வு செய்ய நீண்ட நாட்கள் தேவைப்படும் என்பதால், 1999–2000ஆம் ஆண்டில் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறிப்பிட்ட 1 அல்லது 2 நடவடிக்கைகளைத் தற்காலிகமான முறையில் தேர்வு செய்து திட்டத்தினைச் செயல்படுத்தலாம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் வெற்றிகரமாக நடைபெற்ற செயல்களின் அடிப்படையில் இத்தகைய தேர்வினை எளிதாக செய்ய முடியும். இருப்பினும் இவ்வாறு 1 அல்லது 2 செயல்களைத் தேர்வு செய்வதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமே தவிர, அதிக செயல்களை இம்முறையில் தேர்வு செய்யக்கூடாது. உற்பத்தி ஆகும் பொருட்கள் உடனடியாக விற்பனை ஆகும் வாய்ப்புள்ளதா என்பதை கவனமாகப் பரிசீலனை செய்து செயல்களைத் தேர்வு செய்யவேண்டும். 3 மாத காலத்திற்குள் இறுதித் தேர்வு செய்து முடிக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் முக்கிய செயல்களைத் தேர்வு செய்வதற்காக ஒரு கால அட்டவணையும் மற்றும் மற்ற விவரப் பட்டியலையும் தயார் செய்து அவ்வட்டாரத்திலுள்ள மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும் வண்ணம் விரிவாக விளம்பரம் செய்யவேண்டும்.

1.14. இவ்வாறு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படும் செயல்கள் அடுத்து வரும் 5 ஆண்டிற்கு நடைமுறையில் இருக்கும். இருப்பினும் 2 ஆண்டு கால முடிவில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் மீண்டும் மறு ஆய்வு அல்லது மறுமதிப்பீடு செய்யலாம்.

### திட்ட அறிக்கைகள் தயாரித்தல்

1.15. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு முக்கிய செயலுக்கும் தேவைப்படும் பயிற்சி, கடன்வசதி, தொழில்நுட்பம், கட்டமைப்பு வசதி, விற்பனை வசதி ஆகியவைகளடங்கிய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய வேண்டும். ஒவ்வொரு திட்ட அறிக்கையிலும், ஒரு வட்டாரத்திலும் எவ்வளவு மக்களின் பொருளாதார



முன்னேற்றத்திற்காக இந்த முக்கிய செயல் பயன்படும் என்ற விவரம் குறிப்பிடப்படவேண்டும். ஒரே மாதிரியான செயல்களை அதிகமாக ஏற்படுத்தி, நிதியுதவி அளிப்பதை தவிர்க்க வேண்டும்.

**1.16.** திட்ட அறிக்கையில், ஏற்கெனவே இருக்கும் கட்டமைப்பு வசதிகள் தவிர, தேவைப்படும் புதிய கட்டமைப்பு வசதிகள் பற்றியும் அதை அமைப்பதற்காக ஏற்படும் செலவினத்தைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். மாவட்ட அளவிலான குழு, பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அடிப்படை கட்டமைப்பு வசதிக்காக பெறக்கூடிய நிதியின் வரம்பிற்குள்ளேயே இது இருக்குமாறு உறுதிசெய்ய வேண்டும். செயல்படுத்தும் துறைகளின் கட்டமைப்பு வசதிக்காக பெறக்கூடிய நிதியின் வரம்பிற்குள்ளேயே இது இருக்குமாறு உறுதிசெய்ய வேண்டும். செயல்படுத்தும் துறைகளின் வசதிக்காக கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதை தவிர்த்து, பயனாளிகள் பயன்பெறத்தக்க வகையிலே அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு புதிய கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும்போது, அதனால் இத்திட்டத்தின் பயனாளிகளுக்குக் கிடைக்கும் கூடுதல் நன்மைகளை மட்டுமே கருத்தில் கொள்ளவேண்டும். புதிய வசதிகளை ஏற்படுத்துவது, அவர்களுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு மிகவும் உபயோகமாக இருக்கவேண்டும். திட்ட அறிக்கையில் ஒவ்வொரு தனிப்பட்ட பயனாளி அல்லது குழு நடவடிக்கைக்குத் தேவைப்படும் நிதி முதலீட்டினைப் பற்றி விவரமாக தனி அத்தியாயமாக அறிக்கை தரவேண்டும். தனிப்பட்ட பயனாளிகள் திட்டமும், குழு நடவடிக்கை மூலம் பயன்பெறும் திட்டங்களின் பொருளாதார விவரங்களும் தனித்தனியாக கொடுக்கப்படவேண்டும். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு முக்கிய செயலுக்கும் அது தனிப்பட்ட பயனாளிக்காக இருந்தாலும் அல்லது குழுவிற்காக இருந்தாலும் தனித்தனியே திட்ட அறிக்கை தயார் செய்ய வேண்டும். திட்ட அறிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயல், தனிநபர் பயன்பெறக் கூடியதா அல்லது குழு பயன்பெறக் கூடியதா அல்லது இருவகையினரும் பயன் அடையக் கூடியதா என்பதை தெளிவுபடுத்த வேண்டும். ஒவ்வொரு செயலுக்கும் வரவு, செலவு மற்றும் இலாபம் பற்றிய பொருளாதாரக் கணக்கு தனித்தனியே குறிப்பிட வேண்டும். மேற்படி திட்ட அறிக்கையில் தேவைப்படும் நிதி முதலீட்டின் விவரங்கள், கிடைக்கக் கூடிய வருமானத்தின் விவரங்கள், வங்கிக் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான அட்டவணை, பயனாளிகளுக்குக் கிடைக்கக் கூடிய நிகர வருமானம் ஆகியவை பற்றி விளக்கமாகக் குறிப்பிட வேண்டும்.

**1.17.** மேலே குறிப்பிட்ட அறிவுரைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு மாவட்டக் குழு கவனமாகப் பரிசீலனை செய்து செயல்களைத் தேர்வு செய்யவேண்டும். வழக்கமான முறையில், விரிவாக ஆய்வு செய்யாமல், செயல்களை தேர்வு செய்யக்கூடாது. மேலே குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் செலவினம் முழுமையும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு நிருவாகச் செலவிற்காக "மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிருவாகம்" என்ற கணக்குத் தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**1.18.** இத்திட்டங்களைச் செயல்படுத்தவது மற்றும் கண்காணிப்பதில் தொடர்புடைய துறைகளுக்கு மிகவும் முக்கியமான பங்கு உண்டு. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் நன்கு செயல்படுத்துவதற்குச் செயல்படுத்தும் முகமைகளும், செயல்படுத்தும் துறைகளும் நன்கு இணைந்து செயல்பட வேண்டும். தற்போது நடைபெறும் திட்டங்களில் தேவைப்படும் அளவிற்கான ஒருங்கிணைப்பு இல்லை. இத்தகைய ஒருங்கிணைப்பு முக்கிய செயல்களைத் தேர்வு செய்வது, திட்ட அறிக்கை தயார் செய்வது, திட்டத்தை செயல்படுத்துவது ஆகிய எல்லா நிலைகளிலும் இருக்க வேண்டும். மேலும், தொடர்புடைய துறை அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்களுக்கு வங்கிகள் கடன் பெறுவதற்கு ஒப்பளித்தபிறகு வெற்றிகரமாக நடைபெறுவதற்குத் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு உறுதி செய்யவேண்டும். மேலும், வங்கியிலிருந்து கடன் அனுமதிக்கப்பட்ட பின்னர் இத்திட்டத்தின் பயனாளிகளுக்குத் தேவைப்படும் தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் வசதிகளை, தொடர்புடைய துறை அலுவலர்கள் செய்து கொடுக்க வேண்டும். இத்திட்டத்தின் கீழ் உள்ள பயனாளிகளிடம் செயலுக்குத் தேவைப்படும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். செயல் திறமை இருக்கிறதா என சரிபார்த்து, அவ்வாறு இல்லையெனில் அவர்களுக்கு வருவாய் பெறத்தக்க வகையில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் தரத்தினை ஆய்வு செய்து, உரிய முறையில் இருக்கிறதா என்பதை துறை அலுவலர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்குத் தேவைப்படும் பயிற்சியினைச் சிறந்த தொழில்நுட்ப நிறுவனங்களில் பெறுவதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு தொடர்புடைய துறை அலுவலர்கள் உதவி புரிய வேண்டும். மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள்,

திட்டத்தில் கூறப்பட்ட அளவிலான வருவாய் பெறக்கூடிய அளவிலே செயல்கள் நடைபெறுகின்றனவா என மேற்பார்வையிடும் பொறுப்பு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களைச் சார்ந்தது. ஒவ்வொரு தொடர்புடைய துறை அலுவலரும் சுயவேலைவாய்ப்பு செயல்களில் அவர்கள் துறை சம்பந்தப்பட்ட பணிகள் சிறப்பாகச் செயல்படுகிறதா என்பதனை கண்காணிக்க வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, உள்ளாட்சி நிறுவனங்கள்/வங்கிகள் மற்றும் ஒவ்வொரு துறையின் அலுவலர்கள், இப்பணிகள் சரிவர நடைபெறுகிறதா என்று மேற்பார்வையிடுவது அவர்களது நடவடிக்கைகளில் தினந்தோறும் செய்யப்பட வேண்டிய பணிகளில் ஒன்றாகக் கருதப்பட வேண்டும்.

1.19. மாவட்ட பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புக்குழு, வட்டாரம் வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய செயல்களையும் அதற்கான திட்ட அறிக்கைகளையும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆளுகை குழு முன் வைக்க வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இல்லையெனில் மாவட்ட பஞ்சாயத்தின் முன் வைக்கப்பட வேண்டும். இதற்கு ஒப்புதல் வழங்கியவுடன், ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் அந்த வட்டாரத்திலுள்ள வங்கிகளுக்கும், தொடர்புடைய துறை அலுவலர்களுக்கும் இது சுற்றனுப்பப்பட வேண்டும். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வங்கியும் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மாதிரி, தொழில் விவரங்களை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலுக்குத் தேவைப்படும் நிதியைவிட, குறைந்த அளவு நிதி வழங்குவதை அனுமதிக்கப்பட மாட்டாது. இதனை வட்டார அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக் குழு தொடர்ச்சியாக ஆய்வு செய்ய வேண்டும்.

1.20. பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் வழங்கப்படும் நிதியில் அதிகமான பங்கு முக்கிய செயல்களுக்கு வழங்க வேண்டும். வட்டார அளவிலான குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் கடனுதவிக்கான செயல்களைப் பரிந்துரை செய்வதில் குறைந்தது 75 சதவிகிதமாவது குழு முறையில் செயல்படுத்தும் திட்டங்கள் மற்றும் தனிநபர் பயனாளிகளுக்கான செயல்களாக இருக்கவேண்டும். எஞ்சியுள்ள நிதியில் வேறு திட்டங்களுக்கு உதவி செய்வதற்குத் தடையில்லை. சில சமயங்களில் ஒரு பயனாளி அவர் ஏற்கெனவே செய்யக்கூடிய செயலினால், மேலும் அதிகமாக வருவாய் கிடைக்கும் எனக் கருதி தொடர்ந்து அச்செயலையே செய்ய விரும்பினால் அச்செயல்களுக்கும் உதவி அளிக்கலாம். இத்திட்டத்தில் இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஒரு ஆண்டில் பயனாளிகளின் எண்ணிக்கையிலும், நிதியிலும் 25 சதவிகிதத்திற்கு மிகாமல் அனுமதி வழங்கலாம். மேலே குறிப்பிட்டுள்ள அனுமதி, விதி விலக்காகவே இருக்க வேண்டும். முக்கியமான செயலுக்கு நிதி உதவி வழங்குவதற்கு அதிகமான கவனம் செலுத்த வேண்டும். 25 சதவிகிதம் என்பது உச்ச வரம்பாக இருக்க வேண்டுமே தவிர, அது இத்திட்டத்தின் விதியாக இருக்கக் கூடாது.

**தொகுப்புகள்**

1.21. தேர்ந்தெடுக்கப்படும் முக்கியமான செயல்களை தொகுப்பு முறையில் செயல்படுத்த வேண்டும். இத்தகைய செயல்களைச் செயல்படுத்தும் போது, ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே செயல்படுத்த வேண்டும் என்றில்லாமல், எங்கெல்லாம் திறம்பட செயல் படுத்துவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளனவோ அப்பகுதிகளில் செயல்படுத்துவதற்குத் தேர்ந்தெடுக்கலாம். இதனால், தேர்ந்தெடுக்கப்படும் திட்டத்தின் முன்னேற்றத்தினை நல்ல முறையில் கண்காணிக்கவும், கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும், மூலதனப் பொருட்களை விநியோகிக்கவும், தொழில்நுட்ப ஆலோசனை வழங்கவும், தரத்தினை உறுதி செய்யவும் முடியும். ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்பு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்பது இல்லை. ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டமைப்பு வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தி அதிகமான வருவாய் பெறத்தக்க வாய்ப்பினை உருவாக்க வேண்டும். இதே நேரத்தில், அதிக அளவிலான கிராமங்களை ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட திட்டத் தொகுப்பில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.22. ஒவ்வொரு செயலுக்குமான தொகுப்புகளைத் தனியாகக் கண்டறிய வேண்டும். அதாவது நோக்கம் என்னவென்றால் ஒவ்வொரு ஆண்டிலும் சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து ஒரு குறிப்பிட்ட செயல் நடவடிக்கையைக் கவனமாக மேற்கொள்வதன் மூலம் இணைப்புகள் ஏற்படுத்துவதையும், மேற்பார்வை யிடுதலையும் எளிதாக்க இயலும். ஒரு ஆண்டில் தொகுப்பான கிராமங்களில் ஒரே செயலை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், அடுத்த ஆண்டில் அது கைவிடப்பட வேண்டும் என்பதில்லை, மேலும், அதிக பயனாளிகளை அச்செயலில் ஒவ்வொரு ஆண்டும் ஈடுபடுத்துவற்கான நடவடிக்கைகள் எடுக்கலாம். இருப்பினும், தேவையில்லாமல் ஒரு சில கிராமங்களில் மட்டுமே அதிக செயல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்ற நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

1.23. மாவட்ட அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புக் குழு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படும் முக்கிய செயல்களின் பட்டியலை அறிவித்து, பின்னர் வட்டார அளவிலான குழு ஒவ்வொரு செயலையும் எந்த கிராமங்களில் செயல்படுத்த வேண்டுமென்பதைத் தேர்வு செய்யும். ஒவ்வொரு நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கும் முன்னர், இத்தகைய நடவடிக்கை முடிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு செயலினையும் தொகுப்பான முறையிலே குறிப்பிட்ட பகுதிகளில் செயல்படுத்தக்கூடிய அளவில் கிராமங்களைத் தேர்வு செய்ய வேண்டும். இவ்வாறு தேர்வு செய்யப்படும் கிராமங்களின் பட்டியலை ஊராட்சி

ஒன்றிய கூட்டத்தில், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் தேர்வு மற்றும் இந்த தேர்விற்காகப் பின்பற்றப்பட்ட அடிப்படையையும் அறிந்து கொள்வதற்காக வைக்க வேண்டும். ஏற்கெனவே தெரிவித்தபடி, பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் நோக்கத்தின்படி, ஒரு வட்டாரத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழைக் குடும்பங்களில் 30 சதவிகிதமாவது சுயவேலை வாய்ப்பை பெறும் வகையில் நிதிஉதவி அளிக்க வேண்டும். எனவே, எல்லா கிராமங்களையும் தேர்வு செய்ய வேண்டுமென்பது அவசியமில்லை. இருப்பினும், கூடிய வரையில் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமான கிராமங்களை இத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள வரைமுறைப்படி தேர்ந்தெடுக்க முடியுமோ அந்த அளவில் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனாலும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரே செயலை செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையின்றி தேர்வு செய்ய வேண்டும். வட்டார அளவிலான குழு, இத்தகைய சூழ்நிலையில் மிகவும் சரியான முடிவினை எடுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட கிராமத்தில், ஒரு குறிப்பிட்ட தொழில்தான் தொடங்க வேண்டுமென்பதில்லை. அக்கிராமத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அங்குள்ள கட்டமைப்பு மற்றும் பொருளாதார வாய்ப்புகளுக்கு ஏற்ப, அந்த வட்டாரங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள முக்கியமான செயல்களின் பட்டியல்களிலிருந்து ஒரே கிராமத்தில் ஒன்று அல்லது ஐந்து முக்கிய செயல்களைத் துவங்கவும் நடவடிக்கை எடுக்கலாம். இருப்பினும், எல்லா கிராமங்களிலும் இத்திட்டத்தினை செயல்படுத்த வேண்டிய தேவை உள்ளது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். செயல்களைப் பரவலாகவும் மற்றும் திறமையாகவும் செயல்படுத்துவதற்கு வட்டாரக்குழு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செயல்கள் திறமையாக செயல்பட வேண்டும் என்ற கொள்கை ஒருபோதும் கைவிடப்படக் கூடாது.



## 2. திட்டத்திற்கான கட்டமைப்பு

**2.1.** புதிதாக ஆரம்பிக்கப்படும் சிறிய செயல்கள் வெற்றியடைய கட்டமைப்பு வசதிகள் மிகவும் தேவை. அவ்வாறு அமைக்கப்படும் கட்டமைப்பு வசதிகள் உற்பத்திக்காகவோ, உற்பத்திப் பொருட்களைப் பதப்படுத்தவோ, தரத்தினைச் சோதிக்கவோ, இருப்பில் வைக்கவோ மற்றும் அவற்றை விற்பனை செய்ய உதவக் கூடியதாகவோ இருக்கவேண்டும். இவற்றில் போதிய கவனம் செலுத்தாததே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் செயல்பாட்டில் ஒரு முக்கியமான குறைபாடாகும். பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் கட்டமைப்பு வசதிகள் அமைப்பதற்காக தனியாக நிதி ஒதுக்கீடு செய்திருந்தாலும், அத்தகைய ஒதுக்கீடு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் ஈடுபடும் பயனாளிகளின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு இருக்கவேண்டும் என்பதில்லை.

**2.2.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் பயனாளிகள் அவர்கள் தொடங்கும் புதிய செயல்களுக்கான முதலீட்டிலிருந்து அதிக அளவு வருமானம் கிடைக்கக்கூடிய அளவு மேற்படி செயல்களுக்குத் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை முழுமையாகச் செய்ய வேண்டும். இந்த மாதிரி கட்டமைப்பு வசதிகளை அப்பகுதியில் உள்ள வங்கியின் ஆலோசனையுடனும், ஒத்துழைப்புடனும், திட்டமிட வேண்டும். ஏற்கெனவே கூறியபடி, திட்ட அறிக்கையில் ஒவ்வொரு முக்கிய செயலுக்கும் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளில் ஏற்கெனவே இருக்கும் வசதிகளையும் புதிதாக அமைக்க வேண்டிய வசதிகளையும், தனித்தனியே கொடுக்கவேண்டும். அவ்வாறு புதியதாக செய்யப்படும் கூடுதல் கட்டமைப்பு வசதிகள் பயனுள்ளதாகவும், எங்கெங்குக் குறைபாடுகள் உள்ளதோ அதை பூர்த்தி செய்பவையாக மட்டுமே இருக்கவேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வங்கியினர் ஆலோசனையுடன் கட்டமைப்பு வசதிகளுக்குத் தேவைப்படும் கருத்துருக்களை தயார் செய்து, வட்டார மற்றும் மாவட்ட ஆண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

**2.3.** கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவது மாநில அரசின் பொறுப்பாகும். எனவே, மாநில அரசு ஒவ்வொரு துறையினரது திட்டங்களில், இம்மாதிரி கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அரசு துறையினரின் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இதற்குத் தேவையான நிதி இல்லை என்றால், ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்டம் அல்லது வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் இந்தப் பணியினைப் மேற்கொள்ளலாம். இதேபோல வேறு ஏதேனும் மாநில அல்லது மத்திய அரசு திட்டத்திலும் இந்த மாதிரி கட்டமைப்பு வசதிகளை அமைக்கலாம். பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் இருந்து, கட்டமைப்பு வசதிகளுக்காக நிதியைப் பயன்படுத்துவதை கடைசி வழியாகவே, அதாவது நிதி ஆதாரம் பெற இயலாத நிலையிலேயே முக்கிய செயல்களின் தேவைக்காகக் கருத வேண்டும்.

2.4. மாவட்ட அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக்குழு, தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை ஆய்வு செய்து, சிறு செயல்கள் தொகுப்பாக செய்யப்படும் பகுதிகளிலே இந்த மாதிரி வசதிகள் செய்ய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுவது பற்றியும், அவற்றை அமைக்கும் திட்டங்களையும் நேரடியாக கண்காணிக்க வேண்டும். முக்கியமாக, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆளுகைக்குழு அடிப்படை கட்டமைப்பு வசதி திட்டப்படி செயல்படுத்துவதை உறுதி செய்து, பொதுவான கட்டமைப்பு வசதி இல்லாத இடத்தில் மட்டுமே நிதி முதலீடு செய்ய வேண்டும்.

2.5. இத்திட்டத்தைச் செயல்படுத்தும்போது, எங்கெங்கு அவசியம் தேவை ஏற்படுகிறதோ அங்கு மட்டுமே கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்காக பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் கட்டமைப்பு வசதிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு பகுதியில் இதுவரை இல்லாத, ஆனால் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் செயல்களுக்குச் சம்பந்தமில்லாத புதிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த செலவழிக்கக் கூடாது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி, மாநில அரசால் பொதுவாக கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காகப் பயன்படுத்தக்கூடாது.

2.6. மிகவும் அவசியமாகத் தேவைப்படும் இடங்களில் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க, பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் இதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அது "பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட கட்டமைப்பு நிதி'' என்று அழைக்கப்படும். பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் ஒவ்வொரு மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டில் 20% இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் இதற்கென தனி கணக்கு பராமரிக்க வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் வேறு பல ஆதாரங்களில் இருந்தும் இந்த நிதிக்குக் கூடுதல் நிதி திரட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கட்டமைப்பு வசதிகளுக்கான கருத்துரு தயாரிக்கும் பொழுது, பின்வருவனவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அ) பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட பயனாளிகள் தங்களுடைய செயல்களுக்கான சொத்துக்களை முழுமையாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் கட்டமைப்பு வசதிகள் அமைய வேண்டும். விற்பனை வாய்ப்புகள் சம்பந்தப்பட்ட இனங்களுக்கு முக்கியத்துவம் தர வேண்டும்.

ஆ) இம்மாதிரியான கருத்துருக்கள், சுயவேலை வாய்ப்புத் திட்டப் பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் குறிப்பிட்ட செயல்களின் அடிப்படையில் உருவாக்க வேண்டும். எந்த இடத்தில் அவற்றை அமைப்பது என்பதனை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையும், வட்டார வளர்ச்சி அலுவலர்களும், வங்கியின் ஆலோசனை பெற்று முடிவு செய்ய வேண்டும்.

இ) கிராம அளவில் அல்லது வட்டார அளவில் அல்லது மாவட்ட அளவில் உள்ளூர் கட்டமைப்பு வசதி குறித்தே திட்டமிடவேண்டும். மாநில அளவிலோ, மண்டல அளவிலோ திட்டமிடக்கூடாது.

ஈ) பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட நிதியிலிருந்து கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கான ஆரம்ப திட்ட செலவு மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டுமேயல்லாது, ஆண்டுதோறும் அவற்றை நடத்துவதற்குத் தேவைப்படும் தொடரும் செலவுக்கு இந்த நிதியை பயன்படுத்தக் கூடாது. மாநில அரசோ அல்லது இந்த செயலினைச் செயல்படுத்தும் நிறுவனமோ வருடா வருடம் பணியாளர்களுக்கும் மற்றைய இனங்களுக்கும் தேவைப்படும் தொடரும் செலவினத்தை தாங்களே ஏற்றுக்கொள்கிறோம் என்று, எழுத்து மூலம் உறுதியளிக்க வேண்டும்.

உ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு இம்மாதிரி கட்டமைப்பு வசதிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யும்போது மேற்படி சங்கங்களில் குறைந்தது 50 சதவிகிதத்தினராவது சுய வேலைவாய்ப்புத் திட்டப் பயனாளிகளாக இருக்க வேண்டும்.

2.7. கருத்துருவானது, உத்தேசிக்கப்படும் கட்டமைப்பு வசதியை ஏற்படுத்தித்தர ஆகும் கால அளவு மற்றும் இவ்வசதியினால் குறிப்பாக சுயதொழில் புரிவோரது தொழிலிலும், பொதுவாக பொருளாதார நிலையிலும் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் பற்றி தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் முகமை பற்றிய விவரங்கள் பற்றி குறிப்பிட வேண்டும். திட்டமிட்ட காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்குள் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா என்பதனை கண்காணிக்கும் முறை பற்றியும் கருத்துருவில் குறிப்பிட வேண்டும். செயல்படுத்தும் முகமைக்கு, செயலின் முன்னேற்றத்தைப் பொறுத்து நிதியை முதற்கட்டம், இரண்டாவது கட்டம் என்று தேவைக்கு ஏற்ப பிரித்து வழங்க வேண்டும். இது பற்றி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை முடிவு செய்ய வேண்டும்.

### உள்கட்டமைப்பு வசதிகளின் கீழ் அனுமதிக்கக் கூடிய இதர செலவினங்கள்

(i) காப்பீட்டிற்கான தவணைகளையும் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய காப்பு நிதிக்கான செலவினங்களையும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளலாம்.

(ii) பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கான உள்ளூர் வளங்கள் மற்றும் திறனை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்களைத் தயாரிக்க ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்கு ஒரு மாவட்டத்திற்கு ரூ.50,000–க்கு மிகாமல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆளுகை

குழுவினால் ஒப்புதல் பெறப்பட்டு, இத்தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**உள்கட்டமைப்பு வசதி திட்டங்களுக்கான செலவினங்களை கண்காணிப்பு செய்தல்**


**2.8.** உள்கட்டமைப்புக்காக ஒதுக்கப்படும் நிதி, மிக அதிகமாக இருப்பதால், செலவினங்களைக் கண்காணிப்பு செய்வது அவசியமாகும். கண்காணிப்பு செய்வதற்கான சரியான படிவங்கள் வரையறுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு காலாண்டிலும் இந்தப் படிவங்களில் விவரங்களை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மாநில அரசுக்கு அனுப்ப வேண்டும். மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட மேற்படி புள்ளி விவரங்களை ஒருங்கிணைத்து மத்திய அரசுக்கு மாநில அரசு காலாண்டு அறிக்கையை அனுப்ப வேண்டும்.

## 3. சுயதொழில் புரிவோர்

**3.1.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகள் சுயதொழில்புரிவோர் என அழைக்கப்படுவர். இவர்கள் தனி நபராகவோ அல்லது குழுக்களாகவோ இருக்கலாம். பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக் குழு அணுகுமுறையையே வலியுறுத்துகிறது. இதன் கீழ், ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை பயனாளிகளை ஒருங்கிணைத்து சுய உதவி குழுக்களாக அமைக்க வேண்டும். கிராம சபையின் ஒப்புதல் பெறப்பட்ட, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள் கண்டறியப்படுவர். இதேபோல், சுய உதவி குழுக்களுக்கான உறுப்பினர்களும் தேர்வு செய்யப்படுவர். இந்த இயலில், சுயதொழில்புரிவோருக்கும் வங்கிகளுக்கும் உள்ள தொடர்பு பற்றி கூறப்படுகிறது. சுய உதவி குழுக்கள் பற்றி பகுதி 'அ'விலும், சுயதொழில் புரியும் தனிநபர்கள் பற்றி பகுதி 'ஆ'விலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அ. சுய உதவிக் குழுக்கள்

**3.2.** பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கம், ஊரகப் பகுதிகளில் அடிமட்டத்தில் உள்ள வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களை ஒன்றுதிரட்டி வறுமையினை வேரோடு களைவதாகும். ஊரகப் பகுதியில் வசிக்கும் ஏழை மக்களை ஒருங்கிணைப்பதான இத்திட்டத்தின் அணுகுமுறை பின்வரும் இரண்டு கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.



அதாவது, ஏழை மக்கள் அவர்களுக்குள்ளாக ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொள்வது மற்றும் அவர்கள் அபாரமான திறமை படைத்தவர்கள் என்ற நம்பிக்கையினை அவர்களுக்குள் ஏற்படுத்தி அவர்களை ஒருங்கிணைத்து, அவர்களது திறமையைப் பயன்படுத்துதல் என்பனவாகும். ஏழை மக்கள் தாங்களாகவே முன்வந்து, சுயஉதவி அமைப்புக்களை அமைத்து முழுமையாக அதில் ஈடுபட்டு ஏழ்மை நிலையை அகற்றுவது சம்பந்தமான அனைத்து செயல்களிலும் நேரடியாக முடிவுகள் எடுக்க இந்த சமூக கூட்டு முயற்சி வழிவகுக்கிறது. இதனுடன் சுய உதவி குழுக்கள் ஏழை மக்களுக்கு அவர்களது கடன்களைப் பெறவும் அல்லது தொழில்நுட்பம் அல்லது வியாபாரம் மற்றும் விற்பனை வசதிக்கான வழிகாட்டுதல் போன்ற முன் உதவிகளைத் துரிதமாகவும் செம்மையான முறையிலும் அவர்களைச் சென்றடைய உதவிபுரிகிறது.

**3.3.** சமூக ஒருங்கிணைப்பு என்பது தன்னிச்சையான செயல் அல்ல, இது ஒரு தூண்டப்பட வேண்டிய செயல், சுய–உதவி குழுக்களை அமைத்து, வளர்த்து மற்றும் அதனைச் செம்மைப்படுத்தி வறுமையினை ஒழிக்கச் செய்ய சமூக ஒருங்கிணைப்புச் செயல்முறைகளை ஆரம்பித்து அவை தொடர்ந்து செயல்பட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் ஏற்பாடு செய்ய வேண்டும். ஏழை மக்களைக் கொண்டு சுய உதவி குழுக்கள் அமைப்பதே வறுமை ஒழிப்பின் முதல் படியாக இருக்க வேண்டும். உள்ளூர் சூழ்நிலைகளைப் பொறுத்து பல்வேறு சுய உதவி குழுக்களுக்குப் பல்வேறு நுழைவாயில்கள் இருக்கும். சேமிப்பு மற்றும் கடன் வசதியுடன் ஆரம்பிக்கப்பட்ட குழுக்கள், பின்னர் அவர்கள் வருமானத்தைப் பெருக்கப் புதிய பொருளாதார முயற்சிகளில் அதிக கடன் பெற்றுப் பயனடைவர்.

★ சுயஉதவி குழுக்கள் பின்வரும் மூன்று நிலைகளில் உருவாகிறது

★ குழுக்கள் அமைத்தல் – அடிதளத்திலிருந்து குழுக்களை உருவாக்கி, சுயமாக மக்கள் நிருவகிக்கக் கூடிய அளவில் குழுக்களை அமைத்தல்

★ செயல்திறன் அடிப்படையில் சுழற்சி நிதி மற்றும் சுய தொழில் செய்ய முதலீடு உருவாக்குதல்

★ வருவாயைப் பெருக்கப் பொருளாதார நடவடிக்கைகள் எடுத்தல்

**சுயஉதவி குழுக்களை உருவாக்குதல்**

**3.4.** கிராமத்தில் உள்ள ஏழைகள் சுயமாக தங்களுக்குள்ளாகவே ஒரு குழுவினை ஏற்படுத்தி அவர்களின் வறுமையினைப் போக்கக் கூடிய அளவில் செயலாற்றும் குழுவே சுய உதவி குழுவாகும். அவர்கள் தொடர்ந்து சேமிக்கவும், அச்சேமிப்பினை குழுவின் பொது நிதியாக மாற்றவும் ஒப்புக் கொள்கிறார்கள். குழுவின் உறுப்பினர்கள், வரக்கூடிய நிதிகளை ஒரு பொதுவான நிருவாக அமைப்பின் மூலம் கையாள்வர். குழுக்கள் அமைக்கும் பொழுது, பின்வரும் வழிகாட்டி நெறிமுறைகளை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அ) பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உதவி பெறும் ஒரு சுயஉதவி குழு 10 முதல் 20 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். சிறுபாசனத் திட்டத்திற்கான குழு மற்றும் ஊனமுற்ற நபர்களாக இருப்பின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 5 (ஐந்து) ஆக இருக்கலாம்.

ஆ) குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். ஒரு குழுவில் ஒரு உறுப்பினருக்கு மேல் அதே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாகப் பங்கு பெற முடியாது. ஒரு நபர் ஒரு குழுவிற்கு மேல் உறுப்பினராக இருக்க முடியாது.

இ) குழு, தானே நடத்தை விதிகளை உருவாக்கி, அவ்விதிகளைப் பின்பற்ற வேண்டும். குழு நிருவாக முறைகளில் சுதந்திரமான முறையில் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் குழுவில் பங்கு கொள்ளும் உறுப்பினர்களின் முடிவுகளைச் செயலாக்கவும் தொடர்ந்து கூட்டங்களை வாரத்திற்கு ஒருமுறை (வாரம் அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறை) கூட்டப்பட வேண்டும்.

ஈ) இந்தக் குழு ஒவ்வொரு கூட்டத்திற்கும் பொருள் நிரல்கள் தயார் செய்து விவாதிக்க வேண்டும்.

உ) உறுப்பினர்கள் தொடர்ச்சியான சேமிப்பின் மூலம் நிதி உருவாக்க வேண்டும். உறுப்பினர்கள் தங்களுக்குள்ளேயே சேமிப்புத் தொகையின் அளவை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். அந்தக் குழு அனைத்து உறுப்பினர்களிடமிருந்தும் குறைந்தபட்ச சுயசேமிப்புத் தொகையை தொடர்ச்சியாக வசூலிக்க வேண்டும். அவ்வாறு வசூலித்த சேமிப்புத் தொகையே குழுவின் திரட்டு நிதியாகும்.

ஊ) உறுப்பினர்களுக்குக் கடன் வழங்க இந்தக் குழு திரட்டும் நிதியினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கடன் அனுமதி நடைமுறை, திருப்பிச் செலுத்துவதற்கான வழிமுறை மற்றும் வட்டி வீதம் நிருவாக விதிமுறைகளை அந்தக் குழுவே வகுத்துக் கொள்ளவேண்டும்.

எ) யாருக்குக் கடன் வழங்க வேண்டும் என்ற முடிவுகளை அந்தக் குழுக் கூட்டத்தில் பங்கு பெறும் உறுப்பினர்களே கலந்து ஆலோசித்து தீர்மானம் செய்ய வேண்டும்.

ஏ) குழு, கடன் வழங்குவதற்கான விண்ணப்பத்திற்கு முன்னுரிமை அளித்தல், கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அளவினை நிர்ணயம் செய்தல், வட்டி வீதம் நிர்ணயம் செய்தல் ஆகிய பணிகளோடு கடன் தவணைகளை திருப்பிச் செலுத்துவதையும் கண்காணிக்க வேண்டும்.

ஐ) ஒவ்வொரு குழுவும் ஒரு குழு கணக்கைத் துவக்கி, குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்பட்டது போக, மீதி உள்ள தொகையினை அதில் செலுத்த வேண்டும்.

ஒ) குழு கீழ்க்கண்ட பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும். அவைகளாவன: கூட்ட நடவடிக்கைப் பதிவேடு, வருகைப் பதிவேடு, கடன் பேரேடு, பொதுப் பேரேடு, ரொக்க புத்தகம், வங்கி பாஸ் புத்தகம் மற்றும் தனி நபர் பாஸ் புத்தகம்.

**3.5.** ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 50 சதவிகித குழுக்கள் மகளிர் குழுக்களாக இருக்க வேண்டும். ஊனமுற்றவர்களைப் பொறுத்த மட்டில் ஒரே மாதிரியான ஊனமுடையவர்களைக் கொண்டு ஒரு குழுவாக அமைக்க வேண்டும், ஒரே மாதிரியான ஊனமுற்றோர் போதிய அளவு இல்லாத போது, பலவிதமான உடல் ஊனமுற்றவர்கள் கொண்ட குழுவினையும் அமைக்கலாம்.

**3.6.** பொதுவாக இந்த சுய–உதவி குழுக்கள் பதிவு செய்யப்படாத குழுக்களாகும். அந்தக் குழுக்கள் தங்களை சங்கப் பதிவு சட்டம் அல்லது மாநில கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் அல்லது ஒரு பங்குதாரர்கள் நிறுவனமாக பதிவு செய்து கொள்ளலாம். சுய உதவி குழுக்கள் கிராம அளவில் சுய உதவி குழுக்கள் கட்டமைப்பை ஏற்படுத்தி பலன் பெறலாம். இதனால் தொடர்ச்சியாகக் கருத்துக்கள் மற்றும் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதுடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் இதர தொடர்புடைய துறைகளின் உதவிகளைப் பெற மிகவும் வசதியாக இருக்கும்.

**3.7.** சமூக ஒருமைப்பாடு மற்றும் சமுதாய அமைப்பு மூலம் திட்டம் செயல்படுவது அணுகு முறையில் இருந்து மாறுப்பட்ட ஒரு செயல் திட்ட அணுகுமுறையாகும். இக்குழுக்கள் அமைப்பதற்கு எந்தவித இலக்கும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால் தங்களுக்குள்ளேயே செயல் அணுகுமுறையினை வளர்த்துக் கொள்ள வேண்டும். சுயஉதவி குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் முழுவதுமாக சுய உதவி புரிந்து கொள்ளும் மனப்பாங்கு உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

முந்தைய காலங்களில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் அதிக எண்ணிக்கையில் மகளிர் மற்றும் குழந்தைகள் நல குழுக்கள் அமைக்கப்பட்டு உதவிகள் செய்யப்பட்டன. இதேபோன்று, அதிக எண்ணிக்கையிலான சுய உதவி குழுக்களைத் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, இதர வங்கிகள் மற்றும் தேசிய மகளிர் அமைப்பு ஆகியோர் அமைத்துள்ளனர். பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் முதல் ஆண்டில் ஏற்கெனவே இருக்கும் குழுக்களை இத்திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதே சமயம் புதிய குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தொண்டு நிறுவனங்களின் பங்கு

**3.8.** நாடு தழுவிய அனுபவங்களின் வாயிலாக குழு அமைத்தல் மற்றும் அதனுடைய வளர்ச்சி ஒரு தன்னிச்சையான செயல்பாடு இல்லை எனத் தெரிய வருகிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் அவர்களுக்கு அருகில் பணியாற்றக் கூடிய ஒருவர் குழு அமைக்கவும் மற்றும் அதன் வளர்ச்சிக்கும் முக்கியமான உதவி செய்ய முடியும். அந்த ஊக்குவிப்பவரின் திறனைப் பொறுத்தே அந்தக் குழுவின் தரம் இருக்க முடியும். அந்த ஊக்குவிப்பவர் ஒரு அலுவலராகவோ அல்லது அலுவலரல்லாதவராகவோ இருக்கலாம். சில இடங்களில் தொண்டு நிறுவனங்கள் ஊக்குவிப்பாளரை அறிமுகப்படுத்துவது அல்லது அவர்களது திறமையை அதிகரிக்கும் பணியைச் செய்யலாம். அரசு சாரா நிறுவனங்கள் அல்லது சமுதாய அடிப்படை அமைப்புகள் அல்லது முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் அரசு அலுவலர்கள் ஆகியோருடைய உதவிக்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆதரவாக இருக்கும்.

**3.9.** தொண்டு நிறுவனம் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையே சுயஉதவி குழுக்களை மேம்படுத்தும் நிறுவனங்களாக இருக்க முடியும். ஆனால் தொண்டு நிறுவனங்களுக்கு இதற்குரிய திறமையும், நிருவாக அமைப்பும் இருக்க வேண்டும். குழுக்கள் சீராகச் செயல்படவும் குழு உறுப்பினர்களின் திறமையை வளர்ப்பதிலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் பெரும் பங்கு வகிக்கும்.

## வங்கிகளுடன் இணைப்பை ஏற்படுத்துதல்

**3.10.** குழுக்கள் அமைக்கும் பொழுது உள்ளூர் வங்கிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். பின்வரும் இரு காரணங்களுக்காக நிதியாண்டிற்குள் மூன்றாவது அல்லது நான்காவது மாதத்தில் இதை ஆரம்பிக்கலாம். சுய உதவி குழுக்கள் வங்கிகளுடன் தொடர்பு கொள்வதற்கான சந்தர்ப்பங்களையும் முறைகளையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் வங்கி அலுவலர்களும் சுய உதவி குழு உறுப்பினர்களும் ஒருவருக்கொருவர் அறிமுகமாவர். இவ்வித அறிமுகம் ஆரம்ப கால கட்டத்திலேயே ஏற்படுமாயின் சுய உதவி குழுக்களுக்கும் வங்கிகளுக்கும் நல்ல பயன்களை அளிக்கும். வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வங்கியாளர்கள் சுயஉதவி குழுக்களை அடிக்கடி பார்வையிட்டு குழு உறுப்பினர்களிடம் சுயவேலை வாய்ப்பிற்கான வாய்ப்புகளை எடுத்துக் கூறவேண்டும். இதோடு மட்டுமல்லாமல் முழு அளவில் சுயவேலை வாய்ப்பு நடவடிக்கைகளை படிப்படியாகச் செயல்படுத்த அவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறவேண்டும்.

## சுய உதவி குழுக்களை வகைப்படுத்துதல்

**3.11.** சுய உதவி குழுக்கள் முறையாகச் செயல்பட 6 மாதங்கள் ஆகும். ஆறாவது மாத இறுதியில் ஒவ்வொரு சுய உதவி குழுவையும் பரிசோதித்து, அது ஒரு நல்ல குழு என தீர்மானம் செய்தால் அடுத்த நிலைக்கு அது செல்லத் தயாராக உள்ளது என மதிப்பிடலாம். இம் மதிப்பீட்டின் மூலம் குழுக்களை வகைப்படுத்த வேண்டும். இந்த மதிப்பீட்டின் நோக்கம் குழுக்களின் குறைபாடுகளைக் கண்டறிந்து அதிலிருந்து குழுவினை வெளிக்கொணர்ந்து நல்ல குழுவாக வளர்ச்சியடையச் செய்வதே ஆகும். இம்மதிப்பீட்டினால் நலிந்த குழுக்களின் மீது தனிக்கவனம் செலுத்தப்பட்டு அக்குழுக்களைப் படிப்படியாக நல்ல குழுக்களாக மாற்ற மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் உதவி புரிய முடியும். நல்ல குழுக்களை வங்கிகளுடன் இணைப்புகளை ஏற்படுத்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை துணை புரிய வேண்டும்.

**3.12.** குழுக்களை வகைப்படுத்துவதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் முக்கியமான பங்கு வகிக்க வேண்டும். இந்த ஆய்வினைத் தொழில்நுட்ப ரீதியாக எடுத்துச் செய்ய மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் திறமையினை அதிகரித்து கொள்ள வேண்டும். சுய உதவி குழுக்களை அமைப்பதில் அனுபவம் கொண்ட தொண்டு நிறுவனமே அக்குழுவின் வகைப்படுத்துதல் பணியினை மேற்கொள்ளலாம் அல்லது வேறு தொழில்நுட்ப நிறுவனத்திற்கு இவ்வாய்ப்பினை மேற்கொள்ள ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ஒரு தனிப்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் குழுக்களின் நிலையை ஆய்வு செய்வது விரும்பத்தக்கது. ஏனெனில், வங்கிகள் இத்தகைய ஆய்வின் முடிவையே ஏற்றுக்கொள்ளும்.

**3.13.** அரசு மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் நாட்டிலுள்ள பல்வேறு சுயஉதவி குழுக்களுடன் பணியாற்றி அவர்களை வகைப்படுத்த உரிய வழிமுறைகளை வகுத்துத் தந்துள்ளனர். சுய உதவி குழுக்கள் உறுதியாகவும், சுயமான நிருவாகமுடைய குழுக்களாகவும் இருக்கவேண்டும் என்றால், அவற்றை வகைப்படுத்தக்கூடிய விதிமுறைகள் தெளிவாக இருத்தல் வேண்டும். சிறந்த சுயஉதவி குழுக்களின் சிறப்பியல்புகளை, குழுக்களை வகைப்படுத்தவும், பயிற்சியின் பாடத் திட்டமாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

சுய உதவி குழுக்களை வகைப்படுத்தும்போது கீழ்க்கண்ட பல்வேறு நிலைகள் அடங்கும்.

1. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சிறந்த சுய உதவி குழுக்களுக்குரிய தகுதிகளை, சுயஉதவி குழுக்களைத் துவக்குவதிலும், தொடர்ந்து செயல்பட உதவும் அமைப்புகளோடு கலந்து ஆலோசனை செய்து முடிவு செய்யலாம்.

2. குழுக்களை வகைப்படுத்துவதற்கான தகுதியினை ஒவ்வொரு தகுதிக்கும் எவ்வளவு மதிப்பு கொடுக்க வேண்டும் என்ற முறையை நிர்ணயிக்கலாம்.

3. இம்மாதிரி குழுக்களை வகைப்படுத்துவதற்கு ஒரு அமைப்பையோ அல்லது நிறுவனத்தையோ தேர்ந்தெடுக்கலாம்.

4. ஒவ்வொரு குழுவினுடைய செயல்பாட்டினைத் திறனாய்வு செய்பவர்களுக்குத் தீவிரமான பயிற்சி அளிக்க வேண்டும். இந்தப் பயிற்சியினை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையோ அல்லது குழுவினை வகைப்படுத்த பொறுப்பு கொடுக்கப்பட்ட அமைப்போ/நிறுவனமோ வழங்கலாம்.

5. ஒவ்வொரு குழுவினையும் நேரடியாகப் பார்வையிட்டு அவர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்யும் வாய்ப்பினை இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பிற்கு வழங்க வேண்டும்.

6. சுயஉதவி குழுக்களின் முன்னேற்ற அறிக்கையினைப் பெற்று, முன்னேற்றத்தின் அடிப்படையில் அதற்கான காரணங்களுடன் வகைப்படுத்தலாம்.

7. ஒவ்வொரு குழு வாரியாக செயல் திட்டம் தயாரித்து, நலிந்த மற்றும் சராசரிக்கும் குறைவான நிலையில் இருக்கும் குழுக்கள் என்று கண்டறியப்பட்டவற்றை வலுப்படுத்த நடவடிக்கை வேண்டும்.

8. சிறந்த குழு என்று மதிப்பிடப்பட்ட குழுவிற்கு வங்கியினரிடம் தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தேவைப்படும் கடன் வசதியை வழங்க கடன் நடவடிக்கை எடுக்கலாம்.

3.14. இவ்வாறு குழுக்களை மதிப்பிடுவது வெறும் கேள்வித்தாளினை வழங்கி பதிலைப் பெறும் நடவடிக்கையாக இருக்கக்கூடாது. குழு உறுப்பினர்களே குழுவின் செயல்பாட்டினை அறிந்துகொள்ளும் வகையிலும் அவர்களையே தரத்தை மதிப்பிடுவதற்கான ஆய்வினில் பங்கு கொள்ளச் செய்யும் வகையிலும் திறனாய்வு செய்பவர் அவர்களுக்கு உறுதுணையாகச் செயல்பட வேண்டும்.

3.15. மாவட்ட ஊரக வளர்ச்சி நடத்தப்படும் இந்த குழுக்களின் மதிப்பீட்டு ஆய்வினில் வங்கியாளர்கள் முழு பங்கேற்பினை உறுதி செய்யவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கி (நபார்டு) மற்றும் உள்ளூர் வங்கிகளையும், குழுக்களைத் தரம் பிரிப்பதற்குரிய நிபந்தனைகளை வரையறை செய்வதிலிருந்து இறுதி மதிப்பீடு செய்வது வரை முழுமையாக ஈடுபடச் செய்யவேண்டும். மாவட்ட அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக் குழுவில் இவ்வாறு குழுக்களை வகைப்படுத்துவதற்கான நிபந்தனைகள்/முறைகள், அதனை செயல்படுத்தும் விவரங்கள் ஆகியவை விவாதிக்கப்பட வேண்டும்.

3.16. ஆரம்பத்திலிருந்தே சுயஉதவி குழுக்களின் செயல்பாட்டினையும் முன்னேற்றத்தினையும் கண்காணித்து, அவ்வப்போது தேவைப்படும் உதவி செய்வது முக்கியமாகும். எனவே, குழுக்களை வகைப்படுத்தும் போது, பல்வேறு நிலைகளில் அவற்றின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்ய வேண்டும். சுய உதவி குழுக்கள், முதல் ஆறு மாத காலத்தில் ஒற்றுமையுடன் செயல்பட்டு எந்த திட்டத்தையும் செயல்படுத்தக்கூடிய தகுதி வாய்ந்த குழுவாக உருவாக வேண்டும். ஆகவே, முதல் 6 மாத காலம் முடிந்தவுடன், குழுக்களை வகைப்படுத்தும் போது முதல் நிலையிலேயே சுயஉதவி குழுக்கள் எந்தெந்த குறியீடுகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் வகைப்படுத்த வேண்டும். இவ்வாறு வகைப்படுத்தும் முயற்சி ஒவ்வொரு குழுவும் நல்ல தரத்தினை அடையும் வகையில் ஒவ்வொரு காலாண்டிற்கு ஒருமுறையோ அல்லது இந்தக் குழுக்கள் நல்ல வகைப்படுத்தும் குறியீடு பெறும் வகையிலோ நடத்தப்பட வேண்டும்.

### சுயஉதவி குழுக்களின் செயல் திறனை வளர்த்தல்

3.17. ஆறு மாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்து திறமையுடன் செயல்பட்ட ஒவ்வொரு சுய உதவிக் குழுவும், 2ஆவது நிலை வளர்ச்சிக் கட்டத்தை அடையக்கூடிய தகுதி பெற்றதாக கருதப்படும். பின்னர், இக்குழுவிற்குச் சுழல்நிதி வழங்கி குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் மேலும் திறமையாக செயல்படுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் 10 சதவிகித நிதியிலிருந்து குழுக்களுக்கு சுழல் நிதி வழங்க நடவடிக்கை எடுக்கும். இந்த சுழல் நிதியைப் பயன்படுத்துவதற்கு பின்வரும் நிபந்தனைகளை குழுக்கள் பின்பற்ற வேண்டும்.

சுழல் நிதி ஏற்கெனவே குழு உறுப்பினர்களிடம் இருந்து மாதந்தோறும் சேமித்த பொது நிதியுடன் சேர்க்கப்பட்டு, ஒவ்வொரு உறுப்பினரும் பெற்ற சிறுகடன் அளவிலிருந்து அதிக கடன் தொகை பெறக் கூடிய வகையில் பயன்படுத்த வேண்டும்.

வழங்கப்பட்ட சுழல்நிதி குழுவினுடைய பொது நிதியுடன் சேர்க்கப்படுவதால், சேமிப்பு நிதியைப் பயன்படுத்துவதற்கான விதிமுறைகள் இதற்குப் பொருந்தும்.

குழு கூட்டத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் தேவைப்படும் கடன் தொகை பற்றி கலந்தாலோசனை

செய்து, அதில் சிலருக்குகுழுசேமிப்புநிதியிலிருந்து கிடைக்கும் வட்டி மற்றும் சுழல் நிதி ஆகிய கூட்டுத் தொகையிலிருந்து கடன் வழங்கி அந்தக் கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அட்டவணையையும் வட்டியினையும் நிர்ணயம் செய்யவேண்டும். இவ்வாறு குழு உறுப்பினர்களிடமிருந்து திரும்பப் பெறும் கடன் தொகையிலிருந்து மேலும் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கலாம்.

சுழல் நிதியைப் பயன்படுத்தி கடன் வழங்குவதனால் குழு உறுப்பினர்களிடையே நிதி கட்டுப்பாடும் நிதியை கையாள்வதற்கான அனுபவமும் கிடைக்கிறது. இதனால் வங்கி அலுவலர்களுடைய பார்வையில் இவர்கள் வங்கிக் கடன் பெறத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

சுழல் நிதி கிடைக்கப் பெற்றவுடன் சுய உதவிக்குழு அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றியும் அதை எந்த காரியத்திற்குப் பயன்படுத்தினால் பயன் உள்ளதாக இருக்கும் என்பது பற்றியும் முடிவு செய்யவேண்டும். இதனால், அந்தக் குழுவே வெளியிலிருந்து கிடைக்கும் நிதியினைப் பயன்படுத்தி வருவாயை அதிகரிக்கக் கூடிய ஒரு திறனை அடைய முடிகிறது. குழுவினர் இந்த சுழல் நிதியைக் கொண்டு அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக மூலப் பொருட்கள் வாங்கவும், விற்பனை வசதிகள் செய்யவும், கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் பயன்படுத்தலாம். குழு உறுப்பினர்களிடையே வாங்கிய கடனை குறிப்பிட்ட காலத்திலும் முழுமையாகவும் திரும்ப செலுத்தக்கூடிய பயிற்சியினை சுழல் நிதியினைப் பயன்படுத்துவதன் மூலம் அடைகிறார்கள்.

**3.18.** ஏற்கெனவே மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தின் மூலம் சுழல் நிதி பெற்ற குழுக்களுக்குப் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுழல் நிதி வழங்கக்கூடாது. இருப்பினும் அத்தகைய குழுக்கள் அவர்கள் திறம்பட செயல்படக் கூடிய குழுக்கள் என்ற நிலையில் இருந்தால் அவர்களுடைய உறுப்பினர்களின் பொருளாதார வளர்ச்சிக்கென கடனும் மானியமும் வழங்கத் தடை இல்லை.

சுழல்நிதி பெற்ற 6 மாத காலம் கழிந்த பின்னர், சுயஉதவி குழுவின் செயல்பாட்டினை மறுபடியும் திறனாய்வு செய்து, அங்கு அதிக முதலீட்டுடன் கூடிய பொருளாதார நடவடிக்கைகள் எடுப்பதற்குத் தகுதியுடையவர்களா என்பதனை ஆய்வு செய்ய வேண்டும். இத்தருணத்தில் குழுவினுடைய மதிப்பீடு சரியாக செய்யப்பட்டிருக்கிறது என்பதனை வங்கி அலுவலர்கள் ஒப்புக் கொள்ளக் கூடிய அளவில் மதிப்பீடு செய்ய வேண்டும். எனவே, தேர்ந்தெடுக்கும் நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் மூலம் மதிப்பீடு செய்யப்படுவதற்கான நெறிமுறைகள் வங்கியினரின் ஒப்புதலுடன் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இரண்டாவது நிலையின் முடிவில், சுயஉதவி குழு பின்வரும் தகுதிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

**1.** ஒவ்வொரு உறுப்பினரும் பயன்படுத்தக்கூடிய கடன் அளவு ஒவ்வொரு ஆண்டிலும் அதிகரிப்பதாக இருக்க வேண்டும்.

**2.** சாதாரண குடும்ப செலவுக்கென கடன் பெறும் நிலையிலிருந்து பொருட்கள் உற்பத்திக்கென கடன் பெறக்கூடிய நிலையை அடையவேண்டும்.

**3.** ஒவ்வொரு குழுவும் அவர்களுடைய உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் பயிற்சியினை முடிவு செய்து, பயிற்சியின் அவசியத்தினையும், நன்மையினையும் உணரச்செய்ய வேண்டும்.

**4.** குழு உறுப்பினர்கள் அவர்களுடைய வறுமைக்கான காரணங்களை ஆய்வு செய்து அவற்றைப் போக்குவதற்கான சந்தர்ப்பங்களையும் வழிமுறைகளையும் உருவாக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

**5.** ஒவ்வொரு குழுவும் அவர்களுடைய உறுப்பினர்களின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் தொழில் வாய்ப்புகளை முடிவு செய்து அதற்கான கடன் வசதி பெறுவதற்குத் தெளிவான செயல் திட்டத்தினை உருவாக்கும் நிலையில் இருக்கவேண்டும்.

**6.** உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை எல்லா உறுப்பினர்களும் இணைந்து நேரடியாகப் பார்வையிடும் நிலையை எய்த வேண்டும்.

**7.** சமுதாயத்திற்குத் தேவைப்படும் சில பொது திட்டங்களை அவர்களே செயல்படுத்தக்கூடிய தகுதியினைப் பெறவேண்டும்.

**8.** வெளியார் மற்றும் தனியார் நிறுவனங்கள் குழுவினுடைய நிதி மற்றும் இதர நிருவாக முறைகளில் உதவி செய்யும் நிலை குறைந்து, அவர்களே தங்களுடைய குழுவின் நிருவாகத்தினைத் தாங்களே மேற்கொள்ளக்கூடிய நிலைக்கு வளர்ச்சி அடையவேண்டும்.

**9.** குழுவிலுள்ள எல்லா உறுப்பினர்களும் செயல்படுத்தப்படும் பொருளாதார திட்டத்தைப் பற்றியும் அதனுடைய இலாப நட்டத்தைப் பற்றி முழுமையாகத் தெரிந்திருக்கவேண்டும்.

**10.** குழுவிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் குழுவினுடைய பொதுவான பொருளாதார நடவடிக்கையில் ஒவ்வொரு உறுப்பினர்க்கும் உள்ள பொறுப்பினையும் பங்கினையும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

**11.** குழு உறுப்பினர்கள் தங்களுக்கான பயிற்சியின் தேவையினை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

**12.** குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் பொருளாதார நடவடிக்கையில் ஒருவருக்கொருவர் இணைந்து செயல்படக்கூடிய முறையினை உருவாக்க வேண்டும்.

### பொருளாதார நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல்



**3.19.** சுயஉதவி குழு அதனுடைய வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாவது நிலையை தாண்டியவுடன் பொருளாதார நடவடிக்கையை மேற்கொள்ள நிதி பெறத் தகுதியுடைய நிலையை அடைகிறது. பொருளாதார நடவடிக்கை கடனும் மானியமும் இணைந்ததாக இருக்கும். சுயஉதவி குழு இரண்டு வழிகளில் இத்தகைய உதவியினைப் பெறலாம்.

1. தேர்ந்தெடுக்கப்பட்ட வருமானம் தரக்கூடிய நடவடிக்கைகளை, ஒரு சுயஉதவி குழுவிலுள்ள பயனாளிகளுக்கு, தனிநபர்கள் அடிப்படையில், வங்கிக் கடனும் மானியமும் பெற்று செயல்படுத்தலாம்.

2. குழுவிலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் குழுக்கடன் மற்றும் அதற்குரிய மானியத்தையும் பெறலாம்.

### குழுவின் உறுப்பினர்களுக்கு மானியத்துடன் கடன் வழங்குதல்

**3.20.** குழுவின் சில உறுப்பினர்கள் தனிநபர் முறையில் கடனும் மானியமும் பெற தேர்ந்தெடுக்கப்பட்டாலும், வங்கிக் கடனை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்துவதற்கு அந்தக் குழுவே பொறுப்பாக்கப்படும். அதே நேரத்தில், மேற்படி கடன் மூலம் பெற்ற சொத்துக்களையும் அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கண்காணிக்கும் பொறுப்பினையும் குழுவே ஏற்றுக் கொள்கிறது. குழுவின் உறுப்பினர்களுக்கு எதிர்பார்க்கும் வருமானம் கிடைப்பதற்குத் தொடர்புடைய அரசு துறை யினிடமிருந்து தேவைப்படும் உதவிகளை உறுப்பினர்கள் பெறுவதற்குக் குழு உதவி செய்கிறது. சுய உதவி குழுக்கள் அடிக்கடி வங்கி அலுவலர்களுடன் இணைந்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதால், சுய செயல்புரிவோருக்கு, தொடர்ந்து பல தவணைகளில் கடன்கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும். குழுவிலுள்ள உறுப்பினர்கள் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் பின்னளிப்பு மானிய முறையை ஏற்றுக் கொள்வதாயின், அம்முறையைப் பின்பற்றத் தடை இல்லை. இவ்வாறு சுயசெயல்புரிவோர் பல்வேறு வகைகளில் உதவிகள் பெறுவதால் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மானியத்தில் சிறிய தொகையை, குழுவின் பொது நிதிக்காக பெற்றுக் கொள்ளலாம். சுயதொழில் புரிவோருக்கு வழங்கப்பட்ட கடன் தொகையைப் பல தவணைகளில் வங்கிக்குத் திருப்பிச் செலுத்தும் வரை, அவருக்குரிய மானியப் பங்கினை குழுவே வைத்துப் பராமரிக்கலாம். இருப்பினும் குழுவே இதுபற்றி இறுதி முடிவு எடுக்க வேண்டும்.

### குழு நடவடிக்கைகளுக்கு மானியத்துடன் கடன் வழங்குதல்

**3.21.** குழுவாக இணைந்து செயல்படுத்துவதனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உடனே விற்பனை செய்வதற்கும், அதிக உற்பத்தி செய்வது போன்ற தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்க வாய்ப்புக்கள் உள்ளதால், குழு மூலம் செயல்படுத்தப்படும் திட்டம் அதிக வெற்றி அடைகின்றன. எனவே கிராம பொன்விழா சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் குழு நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. சுய உதவி குழுக்கள், இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குழுவும் வங்கிக் கடனும் மானியமும் பெறும் முன்னர், சுயஉதவி குழுவிடமிருந்தும் சாதாரணமாக எதிர்பார்க்கப்படும் திறமையை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் குழுக் கடன்களுக்கு, திட்டத்தின் மதிப்பீட்டில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

குழுக்களின் நிருவாகத் திறமையை மேம்படுத்தும் பொருட்டு, குழுக்களின் உறுப்பினர்களுக்கோ அல்லது இக்குழுக்களின் பிரதிநிதிகளுக்கோ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் பயிற்சிகள் நடத்த வேண்டும். குழுக்களை உருவாக்குதல் மற்றும் வளர்ப்பதற்கு ஆகும் செலவினை பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட சுழல் நிதிக் கணக்கிலிருந்து (10%) பத்து சதவிகிதமும் மேற்கொள்ளலாம். சுயஉதவி குழுக்களின் மேம்பாட்டில் ஈடுபாடுடைய தொண்டு நிறுவனங்களின் அனுபவத்தைக் கணக்கில் கொண்டு ஒரு குழுவிற்கு 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு முதலீட்டிற்காக ரூ.10,000

(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) தேவைப்படும் என அறியப்படுகிறது.

### ஆ. தனிப்பட்ட பயனாளிகளைக் கண்டறிதல் மற்றும் தேர்ந்தெடுத்தல்

**3.22.** பயனாளிகளைத் தேர்ந்தெடுக்க கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் வட்டார பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக் குழு, திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களை முடிவு செய்தவுடன், அதன் விவரத்தைச் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சித் தலைவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். தனி நபர் சுயசெயல் புரிவோரை கிராம சபையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சியில் வீறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களின் விவரங்கள் இல்லாமல் இருக்கலாம். எனவே வட்டார வளர்ச்சி அலுவலர் அல்லது அவரது பிரதிநிதி, வங்கி அலுவலர் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர் ஆகிய மூன்று பேர் குழு ஒரு கால அட்டவணை தயாரித்து அதன்படி கிராமங்களுக்குச் சென்று உண்மை விவரம் அறிய வேண்டும். கிராமங்களுக்குச் செல்லும் முன்னர் அங்குள்ள மக்கள் இவ்விவரத்தைத் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரப்படுத்த வேண்டும். இதன் பின்னர், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களிலிருந்து திறமைவாய்ந்த சுயசெயல் புரிவோரை உரிய முறையில் கவனமாக ஆராய்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும்.

**3.23.** சுயசெயல்புரிவோர்களை எல்லோர் முன்னிலையிலும், தெளிவாகவும் திறந்த முறையிலும் தேர்ந்தெடுக்க வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை மக்களுக்கு இத்திட்டத்தின்படி தகுதியுடையவர்களுக்குத் திட்டத்தின் பயன்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். வங்கி அல்லது வட்டார வளர்ச்சி அலுவலரிடம் இந்த திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளை விட அதிகமான பயனாளிகள் இருக்கக்கூடும். இம்மாதிரியான சூழ்நிலையில் இது தெரிவிக்கப்பட்டு இறுதி நாளில் தகுதிவாய்ந்த சிறந்த பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கு வகை செய்யப்பட வேண்டும். பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் ஏழைகளிலும், மிக வறிய நிலையில் உள்ள ஏழைகளுக்கான திட்டமில்லை என்றாலும், வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களில் பிற தகுதிகள் பெற்றிருப்பார்களானால் இத்தகைய மிக வறிய நிலையில் உள்ள ஏழைகளும் பயன்பெறத்தக்க வகையில் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

**3..24.** குழு, செயல்திறம் மிக்க பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்குவது குறித்து இறுதியான முடிவெடுக்க இயலவில்லை என்றால், அதிக எண்ணிக்கையில் பயனாளிகளின் பட்டியலை கடன் வழங்கும் வங்கிக்கு அளித்து, இறுதித் தேர்வு முடிவை அந்த வங்கிக்கே விட்டுவிடலாம். இம்முறையில் சுயசெயல்புரிவோரைத் தேர்ந்தெடுப்பதில் வங்கிகள் சுதந்திரமாகச் செயல்பட முடியும். இம்மாதிரியான தேர்வு திறந்த முறையில் செய்யப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**3.25.** சுயசெயல்புரிவோர் தேர்வு முடிந்த பின்னர், வட்டார வளர்ச்சி அலுவலர் தேர்வு செய்யப்பட்ட நபர்களின் விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்து பெற வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட சுயசெயல்புரிவோரில் பலரும் படிப்பறிவு அற்றவர் களாகவும் மிகவும் ஏழைகளாகவும் இருப்பர். எனவே விண்ணப்பங்கள் மிகவும் எளிமையாகவும் தேவையான விவரங்களைப் பெறும் வகையில் மட்டும் விண்ணப்பம் இருக்குமாறும் மேலும் சட்டப்படியாகவும் வங்கிகள் இவ்விண்ணப்பங்களை வரையறுக்க வேண்டும். விண்ணப்பங்கள் தமிழ் மொழியிலேயே இருக்க வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு வங்கிக் கடன் பெற வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் அனைத்து காலங்களையும் பூர்த்தி செய்வது குறித்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்.

**3.26.** வங்கிகள் கடனுக்கான விண்ணப்பங்களைப் பெற்றவுடன் சாதாரணமாக 15 நாட்களுக்குள் அல்லது எப்படி இருப்பினும் ஒரு மாதத்திற்கு மிகாமல் கடனுக்கு ஒப்பளிக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் இந்த கடன் வழங்கும் முறை வங்கிகளினால் ஜூலை மாதத்திற்குள்ளாகவே முடிக்கப்பட வேண்டும். இதுபற்றி மேலும் விரிவான விவரங்கள் இயல்–4ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**3.27.** பயனாளிகளின் இறுதித் தேர்வு பட்டியல் ஒரு ஆண்டிற்கு வட்டார வளர்ச்சி அலுவலரால் அச்சடிக்கப்பட்டு இதன் நகல்கள் கிராம ஊராட்சிக்கு வழங்கப்பட்டு உடனடியாக நடைபெறும் அடுத்த கிராம சபை கூட்டத்தின் முன் வைக்கப்பட வேண்டும். இந்த பட்டியல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கும் இதர வட்டார அலுவலர்களுக்கும், வங்கிகளுக்கும், மற்றும் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

## 4. முதலீட்டுக்கான நிதி–வங்கி கடன் மற்றும் மானியம்

**4.1.** பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், சுயதொழில் புரிவோருக்கு அளிக்கப்படும் நிதி உதவி, முறையே வங்கிக் கடன், மானியம் ஆகிய இரண்டு கூறுகளை உள்ளடக்கியது. பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் வங்கிக் கடனுடன் செயல்படுத்தப்படும் திட்டமாகும். வங்கிக் கடன் என்பது இதில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. மானியம் என்பது சிறிய பங்காக இத்திட்டத்தில் உள்ளது. முதலீட்டின் பெரும்பகுதி, நிதி நிறுவனங்களான தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள். கூட்டுறவு வங்கிகள் மற்றும் மண்டல கிராம வங்கிகள் வழங்கும் கடன்களை உள்ளடக்கியது. இந்த இயல் பல்வேறு நோக்கங்களுக்கு, சுயதொழில் புரிவோருக்கான கடன் மற்றும் மானியம் தொடர்பான விவரங்களைக் கொண்டுள்ளது.

**கடன் பெறுவதற்கான தகுதி**

**4.2.** திட்டத்திற்கான கடன் அளவு திட்டத்தின் இயல்பைப் பொருத்தது. இருப்பினும் வழங்கப்படும் கடன், செயலுக்குத் தேவையான மூலதனம் மற்றும் நடைமுறை செலவினை உள்ளடக்கியதாக இருக்கும். திட்டத்தில் ஏற்கெனவே ஒவ்வொரு செயலுக்கும் அனுமதிக்கப்பட்ட அலகு, திட்ட செலவினமின்றி மூதலீட்டிற்கு உச்ச வரம்பு ஏதும் இல்லை. சுயசெயல் புரிவோருக்குத் தேவைப்படும் கடன், அவர் தொடங்கும் செயலின் தேவையைப் பொருத்ததாகும். இதில் அவருக்கு வழங்கப்படும் மானியமும் சேர்ந்திருக்கும். பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் கடன்தொகைக்கு உரிய வட்டி விகிதம் இந்தியன் ரிசர்வ் வங்கி மற்றும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கியின் அவ்வப்போதைய அறிவிப்பிற்கு ஏற்ப இருக்கும்.

**பிணை தகுதிகள்:** பிணை தகுதி இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது நிர்ணயிப்பதற்கு ஏற்ப இருக்கும்.

**வங்கிகள் மூலம் கடன் ஒப்பளிப்பு**

**4.3.** இயல் 3 மற்றும் 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது போல, ஒவ்வொரு ஆண்டும், தேர்ந்தெடுக்கப்பட்ட செயலுக்குப் பொருத்தமான, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் கண்டறியப்பட வேண்டும். கடன் விண்ணப்பங்கள் வங்கிக்கு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்கு மிகாமல் கடன் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும். பின்னர், வங்கி இந்தப் பட்டியலை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் தொடர்புடைய துறைக்கும் அனுப்ப வேண்டும். கிராம ஊராட்சி, அடுத்து வரும் கிராமசபை கூட்டத்தில், இந்தப் பட்டியலை வைக்க வேண்டும்.

**4.4.** வங்கியானது, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களுக்கு கடன் வழங்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களின் பெயர்களை கிராம ஊராட்சிக்கும் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் நடவடிக்கைக்காகத் தெரிவிக்க வேண்டும்.

**4.5.** வங்கி மேலாளர் திட்டங்களுக்குத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள திட்ட செலவிற்கு ஏற்ப நிதி ஒப்பளிப்பு அளிக்கும்போது கடன் வழங்குவதற்கான நிபந்தனை மற்றும் கடன் திருப்பிச் செலுத்துவதற்கான அட்டவணை ஆகியவற்றைப் பரிசீலனை செய்து இவற்றின்படியே கடன் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இருப்பினும் திட்ட செயல்பாட்டின் தன்மையைப் பொறுத்து படிப்படியாகக் கடன் தொகையைப் பட்டுவாடா செய்யலாம். எந்தச் சூழ்நிலையிலும், பகுதியான கடன் வழங்குவதையோ, திட்டச் செயல்பாட்டிற்குத் தேவைப்படும் செலவினத்திற்குக் குறைவான நிதியுதவியோ வழங்கக் கூடாது.

**4.6.** தேர்வு முடிந்தவுடன் தேர்ந்தோர் பட்டியலை தொடர்புடைய துறைக்குத் தெரியப்படுத்தியவுடன், அவர்கள் சுயசெயல் புரிவோர் போதுமான திறமை உடையவரா, இல்லையா என்பதைப் பரிசோதிக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். (இயல்–6ஐ பார்க்கவும்)

**4.7.** இத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, பயன்பெறும் சுயசெயல்புரிவோர் அடிப்படைப் பயிற்சி அல்லது திறமை மேம்பாட்டுக்கான பயிற்சி பெற்று முடித்த பின் வங்கியில் இருந்து கடன் மற்றும் மானியம் பட்டுவாடா செய்யத் துவங்கலாம். பொருள் கொள்முதல் செய்வதற்கு அல்லது சொத்துக்களை உருவாக்குவதற்கு ஏதுவாக கடன் தொகையை உடனடியாகப் பட்டுவாடா செய்ய வேண்டும். அனுமதிக்கப்பட்ட தொகை தவணை முறையில் கொடுக்கப்பட வேண்டும் என வரையறுக்கப் பட்டிருந்தாலன்றி, முழுத் தொகையையும் பட்டுவாடா செய்ய வேண்டும். பின்னேற்பு மானியம் வங்கியால் அதற்கென உள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி விநியோகிக்கப்படும்.

**சுயசெயல்புரிவோர்**
**சொத்துக்களை உருவாக்குதல்**

**4.8.** சுயசெயல் புரிவோருக்கு முழுத்தொகையும் (கடன் மற்றும் மானியம்) வழங்கி அவர்கள் முழுமையான சுதந்திரத்துடன் சொத்துக்களை உருவாக்க அனுமதிக்கப்பட வேண்டும். வங்கியிலிருந்து கடன்தொகை விடுவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் சொத்துக்கள் உருவாக்கப்பட வேண்டும். சுயசெயல்புரிவோர் சொத்துக்களை உருவாக்கிய விவரத்தினை வட்டார வளர்ச்சி அலுவலருக்கும், வங்கிக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும். சுயசெயல்புரிவோர் வாங்கிய பொருளுக்கு உரிய இரசீதை வங்கிக்கு அளிக்க வேண்டும். உருவாக்கப்பட்டுள்ள சொத்து தரமானதாகவும், நியாயமான விலை உடையதாகவும் இருக்க வேண்டும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் வங்கிகள் சரியான கண்காணிப்பு மற்றும் சரிபார்ப்பதன் மூலம் உருவாக்கப்பட்ட சொத்தின் தரத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**4.9.** வேளாண்மை மற்றும் கால்நடை சாராத இதர செயல்களைச் செயல்படுத்தும் சுயசெயல்புரிவோர் எனில், திட்ட நிதியில் சில்லறை இனங்களுக்காக ரூ.10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வரை ரொக்கமாக வழங்கலாம். இதனை ஒரே தடவையிலோ அல்லது வாங்கும் நிலைகளுக்கு ஏற்ப படிப்படியாகவோ வழங்கலாம். இவ்வாறாகச் செய்வது, இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் சுயசெயல்புரிவோர் தேவையான சுதந்திரத்துடன் பொருள்களை நியாயமான விலையில் வாங்க இயலும். சொந்த விருப்பத்தில் பொருள்கள் வாங்கிய திருப்தியையும் பெறுவர். அனைத்து வகைகளிலும், பொருள் வாங்கியதற்கான ஆவணங்களை வங்கியாளர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். அதனைத் தொடர்ந்து, வங்கி கள அலுவலர்கள், பட்டுவாடா செய்யப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பார்வையிட்டு சரிபார்க்க வேண்டும்.


**4.10.** சுயசெயல்புரிவோர் பொருள் வாங்கியதற்கு உரிய அறிக்கையை வங்கிக்கு அளிக்காமல் இருந்தால், வங்கி அலுவலர்கள் அதனை அறியும் பொருட்டு வட்டார வளர்ச்சி அலுவலருக்குத் தெரிவிக்கலாம். வட்டார வளர்ச்சி அலுவலர் இவ்வாறு தெரிவிக்கப்பட்டவுடன் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். சுயசெயல்புரிவோர் கவனக்குறைவினால் பொருட்களைக் கொள்முதல் செய்ய புறக்கணித்திருப்பாரேயானால் வங்கியாளர் வட்டார வளர்ச்சி அலுவலருடன் கலந்தாலோசித்து பொருட்களைக் கொள்முதல் செய்ய சுயசெயல்புரிவோருக்கு, போதிய கால அவகாசம் அளிக்கலாம். அக்கால வரையறைக்குள் கொள்முதல் செய்யவில்லையெனில், அவருக்கு வழங்கப்பட்ட கடனை ரத்து செய்து, கடன் தொகையை வசூல் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம். இத்தருணங்களில் சுயசெயல்புரிவோர் மீது குடியுரிமை மற்றும் குற்றவியல் வழக்கு தொடரலாம். குழுக்கள் மூலம் கடன் பெற்று இருப்பின், அனைத்து உறுப்பினர்களும் இக்குறைபாட்டிற்குப் பொறுப்பாவர்.

**4.11.** இத்திட்டத்தின் கீழ் சொத்து உருவாக்கப்பட்ட தகவல், தொடர்புடைய துறை அலுவலருக்கும், வங்கி அலுவலருக்கும் கிடைக்கப்பெற்றவுடன், களமேற் பார்வையிட்டு சொத்துக்களைச் சரிபார்ப்பதுடன் அதன் தரம் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும். பின்னர் உருவாக்கப்பட்ட சொத்துக்களைத் தவறுதலாகப் பயன்படுத்தப்படாத வகையிலும், பிறருக்கு மாற்றப்படாத வகையிலும், அடையாளக் குறியிட வேண்டும். இவ்வாறு செய்வதால் சொத்துக்களை நேரடியாகச் சரிபார்ப்பதுடன் சொத்துக்களின் காப்பீட்டுத் தொகை தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் உதவியாக இருக்கும்.

**4.12.** பொன்விழா சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் கிராம ஊராட்சிக்கு முக்கிய பங்கு அளிக்கப் பட்டிருந்தாலும், சுயசெயல் புரிவோர்களை தேர்வு செய்வதற்கு வங்கியாளர்களுக்கு முழுசுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. வங்கிகளின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, ஆரம்பக் காலத்திலிருந்து கடைசி வரை எல்லா நடவடிக்கைகளிலும் வங்கியாளரின் முழு ஒத்துழைப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுயசெயல் புரிவோர்களுக்குக் கடன் வழங்குவதற்காக தேர்வு செய்யும் போது, தேர்ந்தெடுக்கப்பட்ட செயலில் அவர்களுக்குள்ள ஆர்வத்தையும், திறமையும் துல்லியமாக மதிப்பிட வேண்டும். மத்திய அமைச்சகத்தால் அவ்வப்போது தெரிவிக்கப்படும் மானியம் மற்றும் கடன் விகிதாச்சாரத்தை, குறைந்த பட்ச விகிதாசாரமாகக் கொண்டு, கடன் ஒப்பளிப்பதற்கு இதை உச்ச வரம்பாகக் கருதாமல் கூடுதல் கடனும் வங்கிகள் அனுமதிக்கலாம். உண்மையில், பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்பு, திட்ட வழிகாட்டுதலில் கடன்தொகைக்கு உச்சவரம்பு ஏதும் இல்லை. சுயசெயல்புரிவோரின் தேவை, அலகு அளவு மற்றும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் ஆகியவற்றின் அடிப்படையில், முதலீட்டிற்கான அளவை மதிப்பிட வேண்டும்.

## பல செயல்களுக்குக் கடன் அளித்தல் மற்றும் பல தவணைகளில் கடன் அளித்தல்

**4.13.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில், கடன் வழங்குவது நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. ஒரே தவணையாக கடன் வழங்குவது மட்டுமல்லாது ஒன்றுக்கும் மேற்பட்ட தவணைகளில் கடன்களை வழங்கி திட்டத்தை வளர்ச்சியடையச் செய்யலாம். ஒன்றுக்கு மேற்பட்ட தவணைகளில் கடன் வழங்குவது என்பது சுயசெயல் புரிவோர் குறிப்பிட்ட காலத்தில், இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட தவணைகளில் கடன் பெறுவதன் மூலம் அதிக அளவு கடன் பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளதாக இருக்கும். கடன் தொகையை முறையாகப் பயன்படுத்தி, சொத்துகளை உருவாக்கி கடனை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்துவதன் மூலம் சுயசெயல்புரிவோர் வங்கியின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமாகிறார். இதன் மூலம் மேலும் மானியத்துடனோ அல்லது/மானிய மில்லாமலோ கடன் பெற வாய்ப்புகள் அதிகமாகிறது. ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது போல, பொன்விழா



கிராம சுயவேலைவாய்ப்பு திட்டம், கடன் மற்றும் மானியத்துடன் கூடிய திட்டமாக இருப்பினும், கடன் வழங்கும் பகுதியே முக்கிய பங்கு வகிக்கிறது. மானியம் வழங்குவது திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்கும். சுயசெயல்புரிவோர் தங்களின் திறமையை மேலும் திறம்பட வளர்த்துக் கொள்ளும்பொழுது ஏற்கெனவே உள்ள செயலுக்கோ அல்லது புதிய செயல்களைத் துவங்குவதற்கோ கூடுதல் கடன்களைப் பெற அனுமதிக்கப்படுவர். முந்தைய கடன் நிலுவையில் இருந்தாலும், வங்கியாளருக்கு நிறைவு தரும் வகையில் செயல்படுபவர்களுக்கு அடுத்த தவணைக் கடன் வழங்கலாம். எல்லா செயல்களுக்கும் அந்த இனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட வரையறைக்குமேல் கடன் வழங்கலாம். ஆனால், மானியம் உச்ச வரம்பிற்கு மேல் வழங்கப்படக்கூடாது.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் போதுமான உதவி பெறாத பயனாளிகளுக்கு மேலும் கடன் வழங்குதல்

**4.14.** பொன் விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது போல பல தவணைகளில் கடன் வழங்கலாம். சுயசெயல்புரிவோரின் வருமானத்தைப் படிப்படியாக வளர்ச்சியடையச் செய்ய இது பெரிதும் உதவும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட பயனாளிகள் ஏற்கெனவே வழங்கப்பட்ட கடன் மூலம் அவர்களிடம் குறைபாடு ஏதும் இல்லாத நிலையில், வறுமைக்கோட்டினைக் கடக்க இயலாதிருந்தால் அவர்களுக்கு இரண்டாவது மற்றும் அடுத்த தவணை கடன் வழங்கலாம். இரண்டாவது மற்றும் அடுத்த கடனை, முதலில் கடன் பெற்ற வங்கியோ அல்லது வேறு வங்கியோ வழங்கலாம்.

### கடன் வழங்குவதற்கான விதிகளும் வழிமுறைகளும்

**4.15.** மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் இத்திட்டத்தின் கீழ் பெற்ற நிதியை சேமிப்பு வங்கி கணக்கில் வைக்க வேண்டும். இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் முக்கிய வங்கிகளின் கிளைகளில் சேமிப்புக் கணக்குகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை துவக்கும். வங்கி சேமிப்புக் கணக்கில் உள்ள தொகை, சுயசெயல் புரிவோருக்கு வழங்கப்படும்வரை உள்ள காலத்திற்கு, வழக்கமான விகிதத்தில் வட்டி கணக்கிடப்படும். சுயசெயல் புரிவோருக்குக் கடன் வழங்கிய பிறகு, பங்கேற்கும் வங்கி, சுயசெயல்புரிவோர் பற்றிய விவரங்கள், கடன்தொகை மற்றும் ஈடு செய்யப்பட்ட மானியத்தொகை ஆகிய விவரங்களை வட்டார வளர்ச்சி அலுவலருக்கும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கும் அளிக்க வேண்டும். மானியம் ஈடுசெய்யப்பட்டதற்கான வங்கிகளின் மாதாந்திர அறிக்கைகளை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்ப வேண்டும். முன்பணம் மற்றும் வசூல் செய்ய வேண்டிய தொகையைக் கணிக்கும் பொழுது, வங்கிகள் பெற்ற மானியத்தொகை விவரங்களை நீக்கப்பட வேண்டும். இதுவே உண்மை நிலையை பிரதிபலிப்பதாக இருக்கும். பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் கடன் வசூல் செய்யப்பட்டதற்கான தனி அறிக்கையை வங்கிகள் அளிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கணக்குகள், வங்கி கணக்குகளுடன் மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஒத்திசைவு செய்யப்பட வேண்டும். இது தொடர்பான பட்டயக் கணக்காயரின் சான்று ஆண்டு இறுதியில் பெறப்பட வேண்டும்.

### மானியம்

**4.16.** பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியம் ஒரே சீராக திட்ட மதிப்பில் 30 சதவிகிதத்திற்கும் மிகாமல் அதிகபட்சமாக ரூ.7500 (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) வரை இருக்கலாம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரைப் பொருத்த வரையில் திட்ட மதிப்பில் 50 சதவிகிதமாகவோ அல்லது அதிகபட்சமாக ரூ.10,000 (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வரை இருக்கும். சுயசெயல்புரிவோர் குழுக்களுக்கு மானியமானது திட்ட செலவில் 50 சதவிகிதம் அல்லது ரூ.1.25 இலட்சத்துக்கு (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தைந்து ஆயிரம் மட்டும்) மிகாமல் இருக்கும். நீர்ப்பாசன திட்டங்களைப் பொறுத்தவரை மானியம் வழங்க உச்ச வரம்பு ஏதுமில்லை.

### பின்னளிப்பு மானியம்

**4.17.** மானியம் இறுதியில்தான் வழங்கப்படும். மானியம் உட்பட முழு திட்டச் செலவும் சுயசெயல் புரிவோருக்கு வங்கிகள் கடனாகப் பட்டுவாடா செய்யப்படும். திட்ட செயல்பாட்டிற்கான மூலதனத்தை ரொக்க வரவாகப் பயன்படுத்திக் கொள்ள முன்வரும் சுயசெயல்புரிவோர்களுக்கு மானியம் அளிப்பதின் முழுபயன்களும் கிடைக்கும். வங்கிகளால் மானியம் நிருவகிக்கும் முறை பின்வருமாறு இருக்கும்.

அ) பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுயசெயல் புரிவோருக்குத் தகுதியுடைய மானியம், வங்கிகளில் அவருடைய நிரந்தர வைப்புத் தொகைக் கணக்கில் வைக்கப்படாமல் மானிய காப்பு நிதி கணக்கில் வைக்கப்படும். காப்பு நிதி கணக்கில் உள்ள மானிய தொகைக்கு வங்கி வட்டி அளிக்கப்படமாட்டாது. மானியம் நீங்கலாக கடன் தொகைக்கு மட்டும் வட்டி கணக்கிடப்படும். மானிய காப்பு நிதி கணக்கில் மீதியாக உள்ள தொகை கேட்புக்காலத்தில் ஏற்படும் கடன் பொறுப்புகளுக்காகக் கருதப்படமாட்டாது.

ஆ) செயல் துவங்குவதற்கு மூலதனத்தை உருவாக்குவதற்கு முன்பணங்கள் வழங்கும்போது, மானியத்தொகையை காப்பு நிதி கணக்கில் மேலே குறிப்பிட்டுள்ளது போல, வட்டியின்றி இருக்கலாம். எனினும் இக்கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகை 5

(ஐந்து) ஆண்டுகளுக்குப் பிறகு சுயசெயல்புரிவோரின் கணக்கில் ரொக்கமாக வரவு வைக்கப்படும்.

**4.18.** இறுதியில் ஒரு சில தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகையைக் கணக்கிட்டு கடன் தொகையை மானிய காப்புத்தொகையில் உள்ள தொகையைக் கொண்டு அதனை சரிகட்டும் அளவில் திருப்பிச் செலுத்துவதற்கான கால அட்டவணை நிர்ணயிக்கப்படும். செயல்களைப் பொருத்து கடன் திருப்பிச் செலுத்துவதற்கு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி தேசிய வங்கி நிர்ணயித்துள்ள காலத்திற்கு முன்பே முழு கடன் தொகையை செலுத்தினாலும், சுயசெயல் புரிவோருக்கு வழங்கப்பட்ட மானியத்தின் பயனை அனுபவிக்க இயலாது. கடன் தொகையைச் சரியான முறையில் பயன்படுத்துவதும், குறித்த காலத்தில் கடனைத் திருப்பி செலுத்துவதும் மற்றும் சொத்துக்கள் நல்ல நிலையில் பராமரிப்பதன் மூலம் சுயசெயல் புரிவோர்கள் மானியத்தின் பயன்களை அனுபவிக்க முடியும்.

**4.19.** ஒவ்வொரு சுயசெயல்புரிவோருக்கும் பாஸ் புத்தகத்தை வங்கிகள் அளிக்கும். இந்த கடன் புத்தகத்தில் மற்றவற்றிற்கு இடையில், கடன் அனுமதிக்கப்பட்ட தேதி, அனுமதிக்கப்பட்ட கடன் தொகை, திருப்பி செலுத்தும் காலம், இறுதி தவணையில் ஈடு செய்யப்பட வேண்டிய மானியம், வட்டி விகிதம், ஒவ்வொரு தவணைக்கும் உரிய தவணைத் தொகை, தவணைக்கு உரிய தேதி மற்றும் பிற விவரங்கள் அடங்கியிருக்கும். சுயசெயல் புரிவோர்களது வட்டார மொழியிலேயே கடன் புத்தகம் இருக்கும். பற்று வரவு புத்தகம் அளிக்கப்படுவதன் நோக்கம் தோல்வியடையாமல் இருக்க, கிளை மேலாளர்கள் பற்று வரவு புத்தகத்தின் அனைத்து காலங்களையும் பூர்த்தி செய்வதை வங்கியாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

### கடனை திருப்பிச் செலுத்துதல்

**4.20.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் வழங்கப்படும் கடன்கள், குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளில் திருப்பி செலுத்தத்தக்க நடுத்தர கால கடன்கள் ஆகும். வேளாண்மை மற்றும் ஊரக தேசிய வங்கி (நபார்டு)/மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு குழு அனுமதித்துள்ள அலகு விலையின்படி கடன் தவணைகள் நிர்ணயம் செய்யப்படும். கடனை திருப்பிச் செலுத்துவதில், உரிய காலத்தில் செலுத்துவதற்கான ஒழுங்குமுறை இருக்க வேண்டும். கடனைத் திருப்பி செலுத்தும் தவணைத் தொகை, திட்டத்திலிருந்து எதிர்பார்க்கக்கூடிய உயர்ந்தபட்ச நிகர வருமானத்தில் 50 சதவிகிதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். கடன் தொகை, மற்றும் வட்டி மேலே கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் தவணைகளின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

**4.21.** குறித்த காலத்திற்கு முன்பே கடன் தொகையை முழுவதுமாக திருப்பி செலுத்தப்பட்டிருப்பினும், சுயசெயல் புரிவோரால் முடக்கப்பட்ட காலம் முடியும் வரை மானியப் பயன் அனுபவிக்க இயலாது. பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலம் செயல்களின் அடிப்படையில் 5 அல்லது 7 அல்லது 9 ஆண்டுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் முடக்கப்பட்ட காலமும் நிர்ணயிக்கப்படும். முடக்கப்பட்ட காலம், மேற்படி கடன் திருப்பி செலுத்தப்படும் காலத்திற்கு ஏற்ப முறையே 3 அல்லது 4 அல்லது 5 ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உரிய காலத்திற்கு முன்னரே கடன் தொகை முழுவதும் செலுத்தப்பட்டிருந்தால் அதன் அடிப்படையில் குறைவான மானியம் கணக்கிடப்பட்டு சுயசெயல்புரிவோருக்கு வழங்கப்படும்.

### முறையான கடன் வசூலுக்கான வழிமுறைகள்

**4.22.** பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் முக்கியமான நோக்கம் கால முறையிலான கடன்வசூல் மற்றும் கட்டுப்பாட்டை உறுதி செய்வதாகும். எனவே, இத்திட்டத்தில் தொடர்புடைய அலுவலர்கள் அனைவரும் நூறு சதவிகித கடன் வசூலை உறுதி செய்ய வேண்டும். இதனை உறுதி செய்யும் பொருட்டு பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

**4.23.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட வட்டார குழு, ஒவ்வொரு மாதமும் சுயசெயல் புரிவோர் முன்னேற்றத்தைக் கண்காணிக்க வேண்டும். இதில் குறிப்பாக செயல் துவக்கப்பட்டதா? எதிர்பார்க்கப்பட்ட வருவாய் கிடைக்கப்பெற்றதா? கடன் தொகை முறையாகத் திருப்பி செலுத்தப்படுகிறதா? ஆகியவற்றை கவனிக்க வேண்டும். இத்திட்டத்தில், கடனை சரியாகச் செலுத்தத் தவறியவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு மாதமும் கடனை திருப்பி செலுத்தாதவர்களின் பட்டியலை வங்கியாளர் அளிக்க வேண்டும். வட்டார பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக்குழு அதற்கான காரணங்களை ஆய்வு செய்ய வேண்டும். தொடர்புள்ள துறைகளும், வட்டார வளர்ச்சி அலுவலரும் சுயசெயல் புரிவோரை நேரில் அணுகி தேவையான நிவர்த்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். குழுக்களைப் பொருத்தமட்டில் சுயஉதவி குழுக்களின் கூட்டத்தினை, அடிக்கடி நடத்துகின்றனரா என்பதைக் கண்காணிக்க வேண்டும். மேலும் கடனை செலுத்தத் தவறிய சுயசெயல்புரிவோர் பட்டியலை கிராம ஊராட்சிக்கு அளித்து, கடன் தொகையை திருப்பி செலுத்தப்படுவதை கண்காணிக்கப் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, கேட்டுக்கொள்ளலாம். அதிக அளவில் கடனை திருப்பிச் செலுத்தாதவர்கள் உள்ள ஊராட்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகியோர்கள் உதவியுடன் கடன் வசூல் முகாம் நடத்த ஏற்பாடு செய்யலாம்.

கடன் வசூல் நிலைமையைப் பொறுத்து ஒவ்வொரு ஊராட்சியையும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூர்ந்து கண்காணிக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் கடன் வசூலிப்பதில் வங்கிகளுக்கு அதற்கென உள்ள சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட நிருவாகம் உதவியளிக்கலாம். தேவைப்படின், கடன் வசூலுக்குச் சிறப்பு அலுவலர் நியமிக்கலாம். தள்வார் குழு பரிந்துரையின்படி, இயற்றப்பட்ட மாதிரி சட்டமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்தலாம்.



**4.24.** வங்கிகள் கொடுத்த கடன் தொகைகளை திரும்பப் பெறத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உதாரணமாக வங்கிகள் தனிப்பட்ட முறையில் கடனாளிகளைச் சந்தித்தல், மாவட்ட நிருவாக பிரதிநிதிகளுடன் இணைந்து கடன்களை வசூலிக்க முகாம்களை ஏற்படுத்துதல், சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுத்தல் என பல்வேறு நிலைகளில் கடன்களை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுத்தும் கடன் வசூல் ஆகவில்லையென்றால், சுயசெயல் புரிவோர்களுக்கு வழங்கப்பட்ட மானியத்தைப் பறிமுதல் செய்யும் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். முதலில் மானியத்தை ஏன் பறிமுதல் செய்யக்கூடாது என்பதற்கான விளக்கத்தினைக் கேட்டு அறிவிப்பு அனுப்பப்படும். இதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட வங்கிகள் மாவட்ட பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக் குழுவின் முன்பு எந்தவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் மற்றும் மானியத்தினைப் பறிமுதல் செய்வதற்கான மற்றும் ஈடுசெய்வதற்கான கருத்துருவின் முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்கும். மேற்படி குழுவின் ஒப்புதல் பெற்றபின், சம்பந்தப்பட்ட வங்கிகள் மானியத்தைச் சுயசெயல்புரிவோர் செலுத்த வேண்டிய கடன் தொகையுடன் வரவு வைக்கப்பட்ட பின்னர், சுயதொழில் புரிவோரிடமிருந்து பெறப்பட்டால் மானியத் தொகை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்குத் திருப்பியளிக்கப் படும்.

**4.25.** கடன் தொகையைத் திரும்பப்பெறுவதை உறுதி செய்யும் பொருட்டு, ஒவ்வொரு சுயசெயல்புரிவோரின் செயலைப்பற்றிய முழு விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். வங்கிகளில் பணியாளர்கள் குறைவாக இருப்பதால், (அரசு ஊழியர் அல்லாத) தனி நபர்களையோ அல்லது அரசு சாரா நிறுவனங்களின் சேவையையோ அல்லது தனிப்பட்ட குழுக்களையோ இத்திட்டத்தினைக் கண்காணிக்கவும் மற்றும் கடன் தொகைகளை திரும்பப் பெறுவதற்கும் தரகு அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்காகும் செலவுக்காக சுயசெயல்புரிவோரின் கடன் தொகையில் 0.5 சதவிகிதத்தைப் பரிசீலனை மற்றும் கண்காணிப்புக் கட்டணமாக வசூலிக்கலாம்.

**4.26.** முறையாக கடனை திருப்பிச் செலுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு, 1–1–2001 முதல், எந்த கிராம ஊராட்சியில் கடன் வசூல் 80 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ளதோ, அந்த கிராம ஊராட்சி பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயன்பெறத் தகுதியற்றதாக கருதப்படும். இதேபோன்று 80 சதவிகிதத்திற்குக் குறைவாக வசூல் செய்யும் எந்த ஊராட்சி ஒன்றியமும், தொடர்ந்து இத்திட்டத்தில் பங்குபெற தகுதியற்றதாகப் பதிவு செய்யப்படும்.

**4.27.** மேற்கூறிய சூழ்நிலை ஏற்படாத வகையில் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். வட்டார அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக்குழுவின் அறிக்கையை வட்டார வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றிய கூட்டத்தின் முன்பாக சமர்ப்பிப்பார். மாவட்ட பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக்குழு இதே போன்று மாதந்தோறும் வசூலிக்கப்பட்ட கடன் தொகைகளின் விவரங்களை ஆய்வு செய்து மேலும் அதிக அளவில் கடன் தொகையை வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

**கடன் வசூலிப்பதில் மேற்கொள்ளப்படும் ஊக்குவிப்பு (Incentive) மற்றும் ஊக்கத்தடை (Disincentive) நடவடிக்கைகள்**

4.28. கடன் தொகைகளைத் திரும்பப் பெறுவதற்கான ஊக்குவிப்பும் மற்ற ஊக்கத்தடைகளும் இத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சுயசெயல் புரிவோரிடையே முறையாக கடனை திருப்பிச் செலுத்தும் பழக்கத்தை ஏற்படுத்தவும், சமுதாயத்தினரிடையே ஒரு பொறுப்புணர்ச்சியை உருவாக்கவும் கீழ்க்கண்டவாறு ஊக்கமும் ஊக்கத்தடைகளும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

அ) சுயசெயல்புரிவோர் உரிய நேரத்தில் கடன் தொகைகளைத் திரும்ப செலுத்தும் பட்சத்தில், அவர்களிடம் 0.5 சதவிகிதம் செயல்முறை மற்றும் கண்காணிப்புக் கட்டணம் (Processing and Monitoring Fee) வசூலிப்பது கைவிடப்படும்.

ஆ) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் – 80 சதவிகிதம் அளவில் கடன் தொகைகளைத் திரும்பப் பெறுவதை கிராம ஊராட்சியும் மற்றும் ஊராட்சி ஒன்றியமும் உறுதி செய்ய வேண்டும். மேற்கூறிய அளவில் கடன் தொகைகளைத் திரும்ப வசூலிக்காத கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் அடுத்து வரக்கூடிய வருடத்தில், இத்திட்டத்தின்கீழ் நிதியினைப் பெறத் தகுதியற்றவைகளாகக் கருதப்படும்.

**வங்கிப் பணி அல்லாத நாள் நிர்ணயம் செய்தல்**

4.29. வங்கிகள் வாரத்தில் ஒருநாள், வங்கி பணியாற்றும் நாளாக அறிவித்து, அதன் அலுவலர்களைக் களத்திற்கு அனுப்பி சுயசெயல் புரிவோரின் பிரச்சினைகளை நீக்க உதவ வேண்டும்.

**நுகர் கடனுக்கான காப்புநிதி**

4.30. சமூகத்தில் உள்ள நலிந்த பிரிவினரின் அடிப்படை நுகர் தேவைகளைப் பூர்த்தி செய்ய, மாவட்ட அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட நிதியில் 1 சதவிகிதம், நுகர்வு கடனுக்கான காப்பு நிதி என்னும் பெயரில் உருவாக்கப்படும். சமூகத்தில் நலிவடைந்த சுயசெயல் புரிவோருக்கு ரூ.2,000–க்கு (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மிகாமல் நுகர்வு கடன்களைத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் வழங்குவதற்காக இத்திட்டம் அமைக்கப் பட்டுள்ளது. சமுதாயத்தில் அங்கம் வகிக்கும் சுயசெயல்புரிவோர் சிறு விவசாயிகள், நிலமற்ற விவசாயக் கூலிகள், கிராமக் கைவினைஞர்கள் மற்றும் தச்சர்கள், முடிதிருத்துபவர்கள், சலவைத் தொழிலாளர்கள் அனைவரும் நலிவடைந்த பிரிவினர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வங்கிகள் வழங்கும் கடன்களில் மொத்தத்தில் 10 சதவிகிதம் காப்பு நிதியாக ஒரு வருடத்தில் மேற்குறிப்பிட்டுள்ள குழுக்களுக்கு வழங்குவதில் அடங்கும்.

**பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டக் கடன்களுக்கு மறுநிதி பெறுவது**

4.31. வணிக வங்கிகள்,(மண்டல ஊரக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள்) தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் இருந்து, கடன்களாக இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட நிதிக்கு மறுநிதி பெற தகுதியுடையன. இது வங்கிகள் வசூல் செய்யும் கடன் தொகையைப் பொறுத்ததாகும். வணிக மற்றும் மண்டல ஊரக வங்கிகளுக்கு காப்பீட்டுத் தொகையை கடன் உறுதி கழகத்தின் மூலம் பெறலாம்.

**சேவைப் பகுதி அணுகுமுறை**

4.32. இந்தியன் ரிசர்வ் வங்கி, சேவைப்பகுதி அணுகுமுறையை 1–4–1989 முதற்கொண்டு அமல்படுத்தியுள்ளது. இம்முறை ஊரக மற்றும் நகரத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் கிளைகளைக் கொண்டுள்ள வணிக மற்றும் மண்டல ஊரக வங்கிகளுக்குப் பொருந்தும். இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வங்கி கிளையும் ஒரு குறிப்பிட்ட பகுதியை சேவைப் பகுதியாக கண்டறிந்து அதனுடைய செயல் திட்டங்களை அமல்படுத்தும், இந்தப் பகுதிகள் எந்த வங்கியின் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றனவோ, அந்த வங்கிக் கிளைகளின் மூலம் கடன்கள் வழங்கப்படும்.

4.33 சில மண்டல ஊரக வங்கிகள் நிதி பற்றாக்குறை மற்றும் குறைந்த பணியாளர்கள் காரணமாகக் கடன் வழங்க இயலவில்லை எனில், அப்பகுதியிலுள்ள வணிக வங்கி கிளை, நிதி உதவி அளிக்க வேண்டும் என இந்திய ரிசர்வ் வங்கி தெளிவுபடுத்தியுள்ளது.

## காப்பீடு

**சொத்துக்களுக்கு அடையாளமிடுதல்**

4.34. சொத்துக்களைத் தவறான முறையில் மாற்றுதல் மற்றும் தவறான முறையில் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, சொத்துக்களுக்கு அடையாள மிடவேண்டும். சொத்துக்களின் பேரில் காப்பீட்டு பணத்தைப் பெறுதல், சொத்துக்களை நேரடியாகச் சரிபார்த்தல் போன்றவற்றிற்காக அடையாளமிடுதல் அவசியமாகிறது.

### பல்வேறு சொத்துக்களுக்கான காப்பீட்டுத் திட்டம்

**4.35.** தற்போது கால்நடைகளுக்கு மட்டும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் (தற்பொழுது பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்)கீழ் காப்பீடு செய்ய வசதி உள்ளது. முதன்மை கொள்கை மற்றும் நீண்டகாலக் கடன் ஒப்பந்த உடன்பாட்டின்படி பொது காப்பீட்டுக்கழகமும், அரசும், ஒப்பந்தம் செய்துள்ளபடி காப்பீட்டு வசதிகளைச் செய்து தர பொது காப்பீட்டுக் கழகம் உடன்பட்டுள்ளது.

### (அ) கால்நடைகளுக்கான காப்பீட்டுத் திட்டம்

முதன்மைக் கொள்கை ஒப்பந்த உடன்படிக்கைப்படி கால்நடைகளுக்குக் காப்பீட்டு கால அளவும், பிரிமிய தொகையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

### (ஆ) காப்பீட்டிற்கான நோக்கம்

கால்நடைகளுக்கான காப்பீட்டுத் திட்டத்தில் பிராணிகள் அல்லது பறவைகள் விபத்து, தீ, மின்னல், கலவரம், வேலைநிறுத்தம், வெள்ளம், பூகம்பம், புயல், வறட்சி அல்லது திடீரென ஏற்படுகின்ற நோய்களினால் காப்பீட்டுக் காலத்தில் இறந்தால் சில விதிவிலக்குகளுடன் நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது.

### (இ) காப்பீட்டுத்தொகை

எந்த அளவுக்குக் காப்பீடு செய்யப்பட்டதோ அந்த அளவுக்கு சொத்தின் மதிப்பு கணிக்கப்படும். நிரந்தர வருமானம் ஈட்ட முடியாது என்ற திட்டத்தின்கீழ், காப்பீடு செய்யப்பட்டிருப்பின் காப்பீட்டுத் தொகையில் 75 சதவிகித தொகை வழங்கப்படும்.

### (ஈ) காப்பீட்டுத் தொகையைக்கோரும் முறைகள்

காப்பீட்டுத் தொகையினை மிக விரைவில் பெறுவதற்குக் கோரிக்கைகள் சமர்ப்பிக்கும் முறை எளிமையாக்கப்பட்டுள்ளன. வங்கியோ/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையோ கால்நடைகள்/பறவைகள் இறந்த 30 நாட்களுக்குள் கீழ்க்காணும் ஏதேனும் இரண்டு நபரிடம் இறுப்பு சான்றிதழைப் பெற்று காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும்.

1. கிராம ஊராட்சித் தலைவர்/துணைத்தலைவர்
2. தலைவர் அல்லது கூட்டுறவுக் கடன் வங்கியின் அலுவலர்
3. பால் சேகரிப்பு மைய அலுவலர் அல்லது அரசு கால்நடை மருத்துவர்/ கால்நடை உதவியாளர்
4. கூட்டுறவு மத்திய வங்கியின் மேற்பார்வையாளர்/ ஆய்வாளர்
5. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்
6. ஊராட்சி செயலர்
7. கிராம நிருவாக அலுவலர்
8. கிராம கணக்கர்
9. ஆரம்பப் பள்ளியின் தலைமை ஆசிரியர்

### (உ) காப்பீட்டுத் தொகையை வரவு வைத்தல்

கால்நடைகள் மூலம் பெறக்கூடிய காப்பீட்டுத் தொகையை வரவு வைத்தல் கீழ்க்கண்டவாறு இருக்கும்

1. கடன் தொகை பெற்றவர் கடன் தொகையை முறையாக வட்டியுடன் திரும்ப செலுத்துபவராக இருந்து, அவர் இறந்த கால்நடைக்குப் பதிலாக வேறு புதிய கால்நடை வாங்க விரும்பினால், காப்பீட்டுத் தொகையை புதிய கால்நடை வாங்க உபயோகப்படுத்தலாம்.

2. எந்த ஒரு பயனாளியும் வேண்டுமென்றே கடனையும் வட்டியையும், வங்கிக்குத் திரும்ப செலுத்தாதவராக இருப்பாராயின், காப்பீட்டுத் தொகையை அவர் வாங்கிய கடனுக்கும் வட்டிக்கும் சரிகட்டப்பட்டு, எஞ்சியுள்ள தொகை ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கப்படும். ஆனால், அவர் வேண்டுமென்றே அவ்வாறு செய்யாதவர் எனில், காப்பீட்டுத் தொகையைக் கொண்டு மீண்டும் கால்நடை வாங்க அனுமதிக்கலாம்.

3. எந்த ஒரு பயனாளியும் கடன் தொகை மற்றும் வட்டியை ஒழுங்காக செலுத்துபவராக இருந்து, அவர் புதிய கால்நடை வாங்க விருப்பமின்றி வேறு செயலில் ஈடுபட விரும்பினால், அவர் விரும்புகின்ற செயலுக்கு நிதிஉதவி செய்யப்படும் அல்லது அந்தப் பயனாளி இன்னொரு முறை கடன் பெற விரும்பவில்லையென்றால், காப்பீட்டுத் தொகையில் (Claim money) வங்கிக்கு செலுத்த வேண்டிய நிலுவைக்கடன் தொகைக்கு ஈடான பிடித்தம் செய்து, நிலுவைத்தொகைக்கு ஈடான மானியத்தை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அளித்த பின்னர், எஞ்சிய தொகை ஏதேனும் இருப்பின் அதனை அந்தப் பயனாளிக்கு வழங்க வேண்டும். சுயசெயல்புரிவோர் கால்நடை இறக்கும் வரையில் கடன் தொகையை முறையாகச் செலுத்தி இருப்பின், திட்டத்தின் நோக்கத்தினை முழுமையாக நிறைவேற்றிய, அவர் காப்பீட்டு உரிமைத் தொகையில் வங்கியில் செலுத்திய அளவு பணத்தைப் பெறத் தகுதி உடையவர் ஆகிறார்.

### (ஊ) இதர வசதிகள்

எந்தவொரு பயனீட்டாளரும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் (தற்பொழுது பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத்திட்டம்) கீழ் கடன் மற்றும் மானியம் பெறாமல் கால்நடைகள் வாங்கியிருப்பின் அவைகளையும் இந்திய பொது காப்பீட்டுக்கழகம் (GIC) மூலம் காப்பீட்டுத் திட்டத்தில் சலுகை முறையிலான

பிரிமியத்தை செலுத்தி (அதாவது ஆண்டு ஒன்றுக்கு **2.25%** பிரிமியம் அல்லது மூன்று ஆண்டுகளுக்கு **1.69%** பிரிமியம்) காப்பீடு செய்து கொள்ள முடியும். பயனீட்டாளர்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (தற்பொழுது பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம்) பெற்ற கடன் தொகையை முழுமையாகத் திருப்பிச் செலுத்தி, அவர்கள் கடனை முடித்திருந்தால், அவர்களது கால்நடைகளுக்குச் சலுகை முறையிலான பிரிமியம் செலுத்தி மேலும் மூன்று ஆண்டுகளுக்கு காப்பீடு செய்து கொள்ளலாம். இதற்குக் கால்நடைகள் காப்பீட்டு திட்டத்தில், கால்நடைகளுக்காக வரையறுக்கப்பட்டுள்ள வயது, வரம்பை கடந்திருக்கக் கூடாது.

### (எ) பிரிமியத் தொகைக்கான பங்களிப்பு

பிரிமியத் தொகையை, அரசு வங்கி மற்றும் பயனீட்டாளர் ஆகிய மூவரும் கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ள வேண்டும்.

| | திட்டத்தில் வங்கி பங்கேற்காத நிலையில் | திட்டத்தில் வங்கி பங்கேற்கும் நிலையில் |
|---|---|---|
| பயன்பெறுபவர் | 1.25% | 1.00% |
| அரசு | 1.00% | 0.75% |
| வங்கி | – | 0.50% |

அரசு ஏற்கும் செலவினத் தொகையை மாநில மற்றும் மைய அரசு முறையே **75:25** என்ற விகிதத்தில் ஏற்றுக் கொள்ளும். இந்தச் செலவினம், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இது சுயசெயல்புரிவோருக்கு அளிக்கப்படும் மானியத் தொகையில் சேராது.

### (ஏ) குழு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

**4.36.** குழு ஆயுள் காப்பீட்டுத்திட்டம் **18** வயதுக்கு மேற்பட்ட மற்றும் **60** வயதுக்குட்பட்ட சுயசெயல் புரிவோர்க்கென **1–4–88** முதற்கொண்டு அமலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சுயசெயல்புரிவோர் சொத்துக்களைப் பெற்ற நாள் முதல் **60** வயது முடிக்கும் வரையிலோ அல்லது காப்பீட்டுத் திட்டம் அவருக்கு தொடங்கும் நாளிலிருந்து **5** வருடங்கள் வரையிலோ, இதில் எது முந்தையதோ, இதுவே உரிய காலமாகக் கருதப்படும். இயற்கையான முறையில் மரணமடைந்தால், ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ.**5000**–ஐ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) இறந்தவரின் வாரிசுதாரருக்கு வழங்கும். விபத்தில் மரணமடைந்தால் ரூ.**10,000** (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ஆயுள் காப்பீட்டுக்கழகம் வழங்கும்.

## 5. திறன் மேம்பாடு

**5.1.** சுயவேலைவாய்ப்பு முயற்சிகள் நிலைத்த வெற்றி தர, தேர்ந்தெடுக்கப்பட்ட செயலில் சுயசெயல் புரிவோருக்கு உள்ள திறமை முக்கிய அடிப்படைத் தேவையாகும். வெற்றிபெற பணியில் ஆர்வமும், திறமையுமே முக்கிய காரணங்களாகும். தனிப்பட்ட நபர் மற்றும் குழு உறுப்பினர்கள் தங்களுடைய பணித்திறமையை வளர்த்துக் கொள்ள பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் பல்வேறு வழிமுறைகள் உள்ளன.

**5.2** தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய செயல்களுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பொழுதே மாவட்ட பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக்குழு சம்பந்தப்பட்ட தொழில்நுட்பப் பணியாளர்களின் ஆலோசனைப்படி, குழு உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச சுயசெயல் திறனை தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மைக்காக நிர்ணயம் செய்யும். உதவிபெறும் தனிநபர் அல்லது குழுக்கள் உதவி பெறுவதற்காகத் தேர்வு செய்யப்பட்டவுடன், மேற்கூறிய குறைந்தபட்ச திறமையைக் கணக்கில் கொண்டு அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்படும். இதில் பயனாளிக்கான தொழில்நுட்பத் திறமை குறித்து தொடர்புடைய துறைகளும், நிருவாகத்திறமை குறித்து சம்பந்தப்பட்ட வங்கிகளும் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யும் போது முடிவு செய்யும். இதன் மூலம் குறைந்தபட்சம் தேவைப்படும் தொழில்நுட்பத் திறமை பெற்றிருப்பவர்கள் அறியப்படுவதால், அடிப்படை பயிற்சி மட்டும் தேவைப்படும் பயனாளிகளையும் தொழில்நுட்பப் பயிற்சி தேவைப்படும் பயனாளிகளையும், கண்டறிய ஏதுவாகும். இதன்படி, இத்திட்டத்தின் கீழ் இரண்டு விதமான பயிற்சி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

### அடிப்படை பயிற்சித் திட்டம்

**5.3.** தேவையான திறமையுடைய பயனாளிகளுக்கு வங்கிக் கடன் வழங்க அனுமதி கிடைத்தவுடன், ஆனால், கடன் வழங்க ஒப்பளிக்கப்படுவதற்கு முன்னர் அடிப்படை பயிற்சி அளிக்கப்படும். இந்தப் பயிற்சியைப் பயனாளிகளின் வட்டார தலைமையிடத்தில் நடத்த வேண்டும். இந்த அடிப்படை பயிற்சி, பயனாளிகளுக்குப் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் நோக்கங்களையும், அவர்களது பொறுப்புகளையும், அவர்கள் அனுசரிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் அறிந்து கொள்ள உதவும். சம்பந்தப்பட்ட தொழில் துறையில் வெற்றி பெற்றவர்களது முன்னுதாரணங்களைப் பற்றி தெரிந்து கொள்வதன் மூலம், பயனாளிகள் தன்னம்பிக்கை பெறுவதுடன் தங்களுக்கு ஏற்படக்கூடும் இடர்ப்பாடுகள் பற்றியும் அறிந்து அதற்கேற்றாற்போல் திட்டமிட இயலும். மேலும் கணக்குகள் பராமரிக்கும் முறை, விற்பனை செய்வதற்கான விவரங்கள், உற்பத்திப் பொருட்களை மதிப்பிடுதல் மற்றும் அவற்றிற்கு விலை நிர்ணயம் செய்தல், வங்கிகள் நிதி உதவி மற்றும் சில அடிப்படை திறமைகள் ஆகியவை இப்பயிற்சித் திட்டத்தில்

இடம்பெறும். இப்பயிற்சிக்கான கால அளவு குறைவாக அதாவது சாதாரணமாக 2 நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வங்கியாளர்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் பயிற்றுநர்களாகச் செயல்படுவர். பயிற்சிக்கான கருவிகள், பயிற்சி அளிப்பவர்களுக்கான மதிப்பூதியம், பயணப்படி மற்றும் உணவு போன்றவற்றிற்காகவும் மற்றும் பயனாளிகளுக்குப் பயிற்சி பெறும் காலத்தில் பயணம் மற்றும் உணவிற்காகவும் ஆகும் செலவினம் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் பயிற்சிக்கான நிதியிலிருந்து ஏற்கப்படும். பயிற்சி பெறுவோருக்கு எவ்விதமான பயிற்சிக்கால உதவித்தொகையும் வழங்கப்படமாட்டாது.

**திறன் வளர் பயிற்சி**

**5.4.** தேர்ந்தெடுக்கப்பட்ட செயலில், பயனாளிகளுக்குத் தேவையான திறமையை வளர்த்துக் கொள்ளவும்/மேம்படுத்திக் கொள்வதற்கான பொருத்தமான பயிற்சி அளிக்கப்படும். பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் மூலம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். சுயசெயல்புரிவோருக்குத் தேவைப்படும் குறைந்தபட்ச தொழில்நுட்ப திறமையை வளர்ப்பதற்கான பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சியின் நோக்கம், பயனாளிகள் அடிப்படை திறனைச் செயலுக்காகப் பெறவேண்டும் என்பதாகும். இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து இத்தகைய அடிப்படை திறன்பெற்ற பயனாளிகளுக்கு மட்டுமே நிதி உதவி வழங்கப்படும்.

**5.5.** மேற்படி பயிற்சியின் காலம் சாதாரணமாக ஒரு வாரத்திற்கு மேல் இருக்கக் கூடாது. ஒரு வார காலத்திற்கு மேல் பயிற்சி பயனாளிகளுக்கு நீட்டிக்கப்படுமானால், அத்தகைய பயனாளிகள் நிதிஉதவி பெறத் தகுதியுடையவர்கள். இத்தகைய நிதியுதவி உள்ளூர் நிலவரத்திற்கேற்ப நிர்ணயிக்கப்படும். இந்த நிதியை இத்திட்டத்தின் பயனாளிக்கு, வங்கி, சாதாரண கடனாக அளிக்கும்.

**பயிற்சி நிலையங்களைக் கண்டறிதல்**

**5.6** வட்டார அளவிலும்/மாவட்ட அளவிலும் உள்ள தற்போதைய பயிற்சி, கட்டமைப்பு வசதிகள் குறித்த தகவல்களைச் சேகரிக்க வேண்டும். இதில் தொழிற் பயிற்சி நிலையங்கள், தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள், வேளாண் அறிவியல் மையங்கள், காதி மற்றும் கதர் தொழில் வாரியம், மாநில ஊரக வளர்ச்சிப் பயிற்சி நிறுவனம், ஊரக விரிவாக்கப் பயிற்சி மையங்கள், சிறந்த அரசுச் சாரா நிறுவனங்கள், துறையில் உள்ள வசதிகள் மற்றும் தனியார் பயிற்சி நிலையங்கள் உள்ளிட்ட அமைப்புகள் அடங்கும். சாதாரணமாக தனியார் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிப்பதை தவிர்க்க வேண்டும். இருந்த போதிலும் சிறந்த கட்டமைப்பு வசதிகளை உடைய தனியார் துறை தொழில் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கலாம். தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சி நிலையங்கள் தேவையான பயிற்றுநர்கள் மற்றும் கட்டட வசதி போன்றவைகளைப் பெற்றிருக்க வேண்டும். பயிற்சி நிலையங்களுக்குப் பயிற்சி தொடர்பான செலவினமாக ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.15–க்கு (ரூபாய் பதினைந்து மட்டும்) மிகாமல் வழங்கலாம். இச்செலவினம், பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட பயிற்சி நிதியிலிருந்து வழங்கப்படும்.

**பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட பயிற்சி நிதி**

**5.7.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட நிதியில் 10% வரை அடிப்படை மற்றும் தொழில்நுட்ப பயிற்சிக்கு என மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஒதுக்கீடு செய்யப்படும். இதற்கென தனித்தலைப்பில் கணக்கு தொடங்க வேண்டும்.

## 6. தொழில்நுட்பம்

**6.1.** கிராமப்புறங்களில் நிலையான சிறுசெயல் அமைப்புகளை ஏற்படுத்துவதே பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், சுயவேலை வாய்ப்பு பெறுவோருக்கு கூடுதலான வருமானத்தை அளிக்க வேண்டும் என்ற வழக்கமான நிலையிலிருந்து மாறுபட்டு, உதவி பெறும் குடும்பங்கள், குறிப்பிட்ட கால வரையறைக்குள், குறிப்பிட்ட உற்பத்தித் திறனை அடைவதற்கும், போதிய வருமானம் பெற்று வறுமைக் கோட்டிற்கு மேல் வருவதற்கும் இலக்கு நிர்ணயிக்கப்படும். பொருத்தமான தொழில் நுட்பத்தினை கையாள்வதைப் பொறுத்தே ஒரு செயல் வெற்றிகரமாக நடைபெறும்.

தொழில்நுட்ப மேலாண்மையை கையாள்வதில் கீழ்க்கண்டவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்

(அ) எவ்விதமான தொழில்நுட்பம் தேவைப்படுகிறது?

(ஆ) தொழில்நுட்ப மாற்றம், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்திக் கொள்ளும் முறை ஆகியவை உள்ளிட்ட தொழில்நுட்ப மேலாண்மைக்குப் பொறுப்பானவர் யார்?

**6.2.** தேர்வு செய்யப்படும் தொழில் நுட்பமானது, இத்திட்டத்தின் கீழ் சுயசெயல் மேற்கொள்பவரால் எளிதில் கையாளக் கூடியதாகவும் அதே சமயம் பொருள்களின் உற்பத்தி மற்றும் வழங்கப்படும் சேவையின் தரத்தை உயர்த்துவதாகவும் இருக்க வேண்டும். மேலும் இத்தொழில் நுட்பமானது கள அளவில் பயன்படும் பொருட்டு நன்கு பரிசோதிக்கப்பட்டதாக இருக்கவேண்டும் என்பது மிக முக்கியமானதாகும். ஏனெனில், ஊரகப் பகுதிகளில் சில தொழில்நுட்பங்கள் வர்த்தக ரீதியில் இலாபகரமாக இல்லாமல் இருக்க வாய்ப்புள்ளது. இவ்விதம் பரிசோதிக்கப்படாத தொழில்நுட்பத்தை இத்திட்டத்தின் கீழ் சுயவேலை வாய்ப்பு பெறுவோருக்கு வழங்குவதைத் தவிர்க்க வேண்டும். ஏனென்றால், இத்தகைய இழப்பினை

சுயசெயல் புரிவோரால் ஏற்க இயலாது. தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு செயலுக்கும் எந்தவித அளவில் செயல்நுட்பம் உகந்ததாக இருக்கும் எனக் கண்டறிந்து எந்த நிலையில் அச்செயல் நுட்பத்தைப் பயன்படுத்தினால், உற்பத்திச் செலவினைக் கணிசமாக குறைக்க இயலுமோ, அச்சூழ்நிலைகளில் மட்டும் புதிய செயல்நுட்பத்தை பயன்படுத்தினால் போதுமானதாகும். மற்ற சூழ்நிலைகளில், மேம்படுத்தப்பட்ட செயல்நுட்பத்தினைப் பொருளாதார ரீதியில் நல்ல பலனை அளிக்கக்கூடியவாறு பயன்படுத்தலாம். எவ்வாறாயினும் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிமுகப்படுத்தப்படும் செயல் நுட்பம்/மற்றும் மேம்படுத்தப்பட்ட செயல்நுட்பம் ஊரகப் பகுதியில் வாழும் ஏழைகள் எளிதில் மேற்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

**6.3.** முக்கிய செயல்களைத் தேர்ந்தெடுக்கப்படும் பொழுதே அச்செயல்களில் உபயோகப்படுத்தும் தொழில்நுட்பங்களையும் கண்டறிய வேண்டும். தேர்வு செய்யப்படும் தொழில்நுட்பத்திற்கு ஆதார வசதிகளும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளும் போதுமான அளவில் இருக்கவேண்டும். தேர்வு செய்யப்படும் தொழில்நுட்பத்தின் தற்போதைய நிலை, அதனை வர்த்தக ரீதியில் இலாபகரமாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் அதனை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து திட்ட அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கீழ்க்கண்ட நிலைகளில் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது குறித்து பரிசீலிக்கலாம்.

★ உற்பத்தி முறை, உற்பத்திப் பொருளின் தரத்தை உயர்த்துதல் மற்றும் உற்பத்திப் பொருள்களை கண்கவர் முறையில் உறையிடுதல்

★ வேளாண்மை மற்றும் கால்நடை விரிவாக்கப் பணிகளுடன் தொடர்புபடுத்துதல்

★ உற்பத்திப் பெருக்கம், திறன்மேம்பாடு, செலவினச் சிக்கனம், வேலையின் பளுவினைக் குறைத்தல் முதலியன.

**6.4** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், உதவி அளிக்கப்படும் குடும்பங்கள் மூன்றாண்டு காலத்தில் வறுமைக் கோட்டினைக் கடக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இம்மூன்றாண்டு காலங்களில் சுயசெயல் மேற்கொள்வோரின் செயல்பாட்டினைக் கூர்ந்து கண்காணித்தல் மிகவும் அவசியமாகும். முன்பிருந்த சுயவேலை வாய்ப்பு திட்டங்களில் போதிய கண்காணிப்பு இல்லை என்ற குறை இருந்தது. ஒரு ஆண்டில் ஒவ்வொரு வட்டாரத்திலும், குறைந்தது 300–600 ஏழை மக்களுக்கு உதவி அளிக்கப்பட வேண்டும். வேறுவகையில் இதை குறிப்பிட்டால், எந்த ஒரு கால கட்டத்திலும் 900–1800 குடும்பங்கள் பயன் அளிக்கப்படும் நிலையில் இருக்க வேண்டும். பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில், குழு அணுகு முறைக்கு முக்கியத்துவம் அளிப்பதனால் மிக அதிகமான குழுக்கள் அமைக்கும் நிலையைத் தவிர்க்க வேண்டும். மேலும் இத்திட்டத்தின் கீழ், சுயவேலைவாய்ப்பு பெறுவோர், தனி நபரானாலும் சரி, குழுவாக இருப்பினும் சரி, அவ்வட்டாரத்தில் மேற்கொள்ளப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட 4 அல்லது 5 செயல்களில் மட்டுமே ஈடுபடுத்தப்படுவர். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலின் செயல்பாட்டில் தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தவும் திறமையை மேம்படுத்துவதற்காகவும் உற்பத்தியாகும் பொருட்களின் தரம் உயர்ந்ததாக இருக்கவும், கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்துவதை உறுதி செய்யவும் ஒரு நிறுவனம் அல்லது துறை இருப்பது சாலச் சிறந்ததாகும். இத்தகைய அமைப்புகளைத் தேர்வு செய்வது உள்ளூர் நிலவரத்தினைப் பொறுத்து மாறுபடலாம். இந்த அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலுக்குத் தேவையான அனைத்து உதவிகளை வழங்கும் திறனுடைய அரசு துறையாகவோ, பொறியியல் கல்லூரி/பாலிடெக்னிக்குகள், அரசு தொழில் நுட்ப நிறுவனமாகவோ அல்லது வேறு ஏதேனும் தொழில்நுட்ப நிறுவனமாகவோ இருக்கலாம். மேலும் ஆராய்ச்சி நிறுவனங்கள், வேளாண் அறிவியல் மையங்கள் அல்லது தனியார் துறை சேர்ந்த பெரிய நிறுவனங்கள், சமுதாய தொழில் நுட்ப நிறுவனங்கள் மற்றும் அவற்றின் விரிவாக்க மையங்கள் ஆகியவற்றை ஈடுபடுத்தலாம். ஒவ்வொரு வட்டாரம்/மாவட்டத்திலுள்ள அனைத்து நிறுவனங்களும் நன்கு பரிசீலித்து அவற்றுள் மிகச் சிறந்த நிறுவனங்களையே இப்பணிக்காகத் தேர்ந்தெடுக்க வேண்டும். நாடெங்கிலும் ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்பு வசதிகளைப் பெருக்கும் நோக்கத்துடன் சமுதாய பாலிடெக்னிக்குகள் (442) உள்ளன. இத்தகைய ஒவ்வொரு பாலிடெக்னிக்குக்கும் ஐந்து விரிவாக்க மையங்கள் உள்ளன. இதைப்போன்றே கபார்ட் (CAPART)டினால் நிறுவப்பட்டுள்ள 14 (பதினான்கு) தொழில்நுட்ப ஆதார மையங்களும் உள்ளன. தேசிய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் குழுமம் (NRDC) 52 தொழில்நுட்ப செயல்பாடு மற்றும் பயிற்சி நிறுவனங்களை அமைத்துள்ளது. ஊரக இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு பயிற்சி அளிப்புத் திட்டத்தின்கீழ், பல தனியான பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காதி மற்றும் கிராம தொழில் வாரியத்தின் கீழ் உள்ள பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், வேளாண் அறிவியல் மையங்கள், விவசாய பயிற்சி மையங்கள், வேளாண் பல்கலைக் கழகங்களின் வட்டார மையங்கள் உள்ளன. எனவே, மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்படும் செயல்களுக்கான முழு விவரங்கள் முன்பே உள்ளன. இந்நிலையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், மாவட்டத்திலிருக்கும் தொழில்நுட்ப மற்றும் பயிற்சி நிலையங்களின் விவரங்களைக் கொண்டு முக்கிய செயல்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் அச்செயல்களுக்கு வியாபார ரீதியில் இலாபகரமாக செயல்படத் தேவைப்படும் தொழில்நுட்பத் திறனை வழங்குவதற்கும் எளிதாக நடவடிக்கை எடுக்க இயலும்.

**6.5.** புதிய தொழில் நுட்பத்தினை அறிமுகப்படுத்தும்போதும், ஏற்கெனவே உள்ள தொழில்

நுட்பத்தினை மேம்படுத்தும் போதும், அந்த தொழில் நுட்பத்தினைப் பரப்பும் முறை/அறிமுகப்படுத்தும் முறை பயனாளிகள் எளிதில் புரிந்துகொள்ளும்படி செய்யப்பட வேண்டியது மிக முக்கியமானதாகும். இத்திட்டத்தின் கீழ் சுயசெயல் புரிவோர் தொடர்புடைய தொழில் நுட்பம் பற்றி முழுமையாகத் தெரிந்திருக்க வேண்டும். திறமையை மேம்படுத்தும் பொருட்டு பயிற்சி அளிப்பதற்கு ஏற்கெனவே ஒதுக்கீடு இருப்பதால், தொழில்நுட்பம் கண்டறிதல் தொடர்பான செலவினங்களைப் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட பயிற்சி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். தொழில்நுட்ப பயிற்சி அளிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்படும் உதவியானது பெயரளவில் மட்டும் இருக்க வேண்டுமே தவிர, அது அந்த நிறுவனத்திற்கு உதவும் முக்கிய நிதி ஆதாரமாக இருக்கக் கூடாது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செலவினமும் சுயசெயல் புரிவோருக்கு மட்டுமே பயன் அளிப்பதாக இருக்க வேண்டும்.

## 7. சந்தை வசதி

7.1 உற்பத்தியான எப்பொருளுக்கும் அல்லது வழங்கப்படும் சேவைக்கும், அதற்கேற்ற சந்தை அமைவது அவசியமாகும். முன்பிருந்த சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள் யாவும் பயனாளிக்குத் தேவையான இடு பொருட்களை வழங்குவதிலேயே கவனம் செலுத்தின. ஆனால், மூலப் பொருட்களை உற்பத்தி செய்வதிலோ அல்லது அவற்றிற்கு நல்ல ஒரு சந்தையை ஏற்படுத்தித் தருவதிலோ கவனம் செலுத்தவில்லை. மேலும் பொருட்கள் விற்பனை குறித்த எந்த ஒரு அம்சமும் இல்லாத உற்பத்தி அணுகுமுறை பரவலாகக் காணப்பட்டது. உற்பத்தி செய்த பொருளை விற்பனை செய்வதற்குத் தேவையான எந்த ஒரு ஆய்வறிக்கையும் இன்றி தொழில்கள் பரிந்துரைக்கப்படுவதை நடைமுறையில் பெருமளவில் காணலாம். கிராமப்புற ஏழைகளுக்கான சுய வேலைவாய்ப்புகளில் சந்தை குறித்த ஆய்வு அவசியமில்லை என்ற தவறான கருத்தும் நிலவுகிறது. சந்தை குறித்த திட்டமின்றி மேற்கொள்ளப்படும் தொழில் முயற்சியால் ஏற்படும் இழப்பினை, ஏழை பயனாளிகளால் தாங்க இயலாது. எனவே, ஒரு செயல் துவங்குவதிலுள்ள ஏனைய அம்சங்களைப் போல சந்தையும் மிக முக்கியமான அம்சமாகும். சுயசெயல் புரியும் ஏழை சந்தைக்கான வசதி இல்லாமல் குறைந்த காலத்தில் ஏற்படும் இழப்பைத் தாங்க இயலாது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு செயலின்கீழும், பயன்பெறுவோர் ஈட்டக்கூடிய வருவாய் குறித்த முன்னறிக்கை தயாரிக்கும்போது, சந்தை என்கிற காரணியும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். வருவாய் கணக்கீடு, உறுதியான சந்தை அடிப்படையில் மட்டுமே அமைய வேண்டும். ஆகவே, சந்தை என்பது, ஒரு செயலை தேர்ந்தெடுப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

7.2 இப்பணி மிக்க மலைப்பு தருவதாக இருந்தபோதிலும், நிலைமை இவ்வாறு இல்லை. அதன் காரணமாக களப்பணியாளர்கள் அவர்களால் செய்ய இயலாது எனவும் கருதலாம். ஆனால், அது தவறான கருத்தாகும். மேலோட்டமாக அவ்விதம் தோன்றிய போதிலும், உண்மையில் வியாபாரச் சந்தை என்பது எந்தெந்த பொருட்கள் விற்பனையாகும், எவை விற்பனையாகாது என்பதைக் கண்டறிவதிலேயே உள்ளது. நாள்தோறும் நாட்டின் பல்வேறு பகுதியிலும், பொருட்களை விற்பதும் வாங்குவதுமான சந்தை நடவடிக்கைகள் இடைவிடாது நடைபெறுகின்றன. தேவையானது என்னவென்றால், உள்ளூர் சந்தைகளில் எவை விற்பனையாகும் என்பதைக் கண்டறிவதுதான். சில ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதில் கிராமப்புற சந்தைகள் முக்கிய பங்கு வகிப்பது கண்டறியப்பட்டது. எனவே, இச்சந்தை நிலவரங்களை ஆய்வு செய்தால், உற்பத்திப் பொருட்களை விற்பதற்கான வாய்ப்புகள் புலப்படும். இரண்டாவதாக, ஒவ்வொரு கிராமத்திலும் மக்களின் அன்றாட அத்தியாவசியமான தேவைகளுக்காகவோ அல்லது வேளாண்மைக்காகவோ தேவைப்படும் பொருட்களைக் கணக்கிட்டு அவற்றை உள்ளூரிலேயே உற்பத்தி செய்து தர இயலுமா என்பது குறித்துப் பரிசீலிப்பது, நல்ல விளைவுகளுக்கு வழிவகுக்கும். சில சமயங்களில் இத்தேவைகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

7.3 சந்தை குறித்த ஆய்வானது, கிராம மக்கள் வாங்கக்கூடிய நுகர்பொருட்களை உள்ளூரிலேயே உற்பத்தி செய்ய இயலுமா என்பதற்கான சாத்தியக் கூறுகளுக்கு வழிவகுக்கும். இந்த வாய்ப்புகள் முற்றிலுமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். அதே சமயம், அனைத்துப் பகுதிகளிலும் தேவைப்படக்கூடிய அனைத்துப் பொருட்களையும் உற்பத்தி செய்வது என்பது சாத்தியமுமல்ல, விரும்பத் தக்கதுமல்ல என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே, தேர்வு செய்ய வேண்டிய செயலானது, ஒரு பகுதியில் கிடைக்கக்கூடிய இயற்கை வளம், தொழில்நுட்பங்கள் மற்றும் அத்தொழில்நுட்பத்தைக் கற்றோர் எண்ணிக்கை, உற்பத்தி செய்த பொருட்களின் விற்பனை செய்வதற்குரிய வாய்ப்புகள் ஆகிய பல்வேறு அம்சங்களைச் சார்ந்தே அமையும். எனவே, தொழில்நுட்பங்களை வளர்ப்பது அல்லது உரிய சந்தைகளை ஏற்படுத்துவதற்குக் காலமும், முயற்சியும் தேவை.

7.4. அடுத்து, நகர்ப்புறங்களிலுள்ள சந்தை வாய்ப்புகள் குறித்து கவனிக்க வேண்டும். பெருகிவரும் நகர்மயமாகும் போக்கானது, நுகர்வோர் தேவைகளிலும், ரசனையிலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. நகர்புற மக்களின் தேவைகள் முதன்மைப் பிரிவைச் சார்ந்தவையாகவோ அல்லது மற்ற பிரிவைச் சேர்ந்தவையாகவோ இருக்கலாம். நகர்ப்புறச் சந்தை பற்றிய ஆய்வானது நுகர்வோரின் முன்னுரிமைகளையும், அவற்றைப் பூர்த்தி செய்வதில் கிராமங்களில் செயல்

முனைவோர்க்கான சந்தை வாய்ப்புகளையும் நன்கு தெரியப்படுத்தக்கூடும். சுத்தமாக்கப்பட்டு, டின்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகள், பதப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள் போன்ற கூடுதல் விற்பனை பலன் அளிக்கக்கூடிய பொருள்களை விற்பனை செய்ய நல்ல வாய்ப்புள்ளது. உருவாகிவரும் நகர்ப்புற சந்தைகள் ஊரக உற்பத்திப் பொருள்களுக்கு அதிக அளவில் வாடிக்கையாளர்களைப் பெற்றுத்தரும். விற்பனைச் சந்தை தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது கிராமப்புற ஏழைகளுக்கு நல்ல விற்பனை வாய்ப்பையும், அவர்களது உற்பத்திப் பொருள்களுக்கு நன்மதிப்பையும் பெற்றுத்தரும். பொன் விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெறும் சுய உதவி குழுக்கள், இத்தகைய சந்தை வாய்ப்புகளை முயற்சித்துப் பார்க்க ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம், அவர்களுடைய விற்பனை நுணுக்கங்களை வளர்த்துக்கொள்ளவும் ஏதுவாகும். இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் தனிநபர் உற்பத்தி செய்யும் பொருட்களையும் மேற்படி சுயஉதவி குழுக்கள் விற்பதில் ஈடுபடலாம். சந்தை உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொடர்புடைய பிற வாய்ப்பு வசதிகளை வலுப்படுத்த உள்கட்டமைப்பு நிதியைப் பயன்படுத்தலாம்.

**7.5.** உற்பத்திப் பொருட்களைப் பிற மாவட்டங்களில் விற்பனை செய்வதற்கு ஒரு தனிப்பட்ட அமைப்பு தேவை. இது அரசு சார்ந்த அமைப்பாகவோ அல்லது அரசு சாரா அமைப்பாகவோ அல்லது தனியார் அமைப்பாகவோ இருக்கலாம். இந்த அமைப்பின் நிலைத்த தன்மை மற்றும் ஊரக சிறுசெயல் முனைவோருக்கு உரிய இலாபம் கிடைக்கச் செய்வதில் இந்த அமைப்புக்கு உள்ள திறமை மற்றும் தகுதி ஆகியவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு தேர்வு செய்யப்படும் அமைப்பானது ஏழை உற்பத்தியாளர்களை சுரண்டக்கூடியதாக இல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்களில் நன்கு நிலைபெற்ற நிறுவனமாக இருக்க வேண்டும். இந்நிறுவனங்கள் உற்பத்திப் பொருட்களை உள்நாடு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**7.6.** சில மாநில அரசுகள், மூலப் பொருட்கள் வாங்குதல் அல்லது பெறுதல், பொருட்கள் விற்பனை செய்தல் போன்றவற்றிற்கென மாவட்ட வழங்குதல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் (DSMS) ஏற்படுத்தியுள்ளன. நல்ல முறையில் பணியாற்றும் இதுபோன்ற சங்கங்களைச் சரியான முறையில் வலுப்படுத்தலாம். ஒரிசா மற்றும் கேரளா போன்ற மாநிலங்களில், மாநில அளவில் விற்பனைச் சங்கங்கள் செயல்படுகின்றன. இச்சங்கங்களின் திறனையும், இவை கையாளும் பொருட்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்து வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளலாம். இருப்பினும் இதற்கென புதிய முகமைகள் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆனால், அது மிகவும் அவசியம் என கருதப்பட்டால் தற்போதுள்ள உள்கட்டமைப்பு குறித்து நன்கு பரிசீலித்து சந்தை வசதியை ஏற்படுத்தித்தரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இத்திட்டத்தின்கீழ் புதிய முகமைகளை உருவாக்கலாம்.

**7.7.** கைவினைப்பொருள்கள், வாரியங்கள் மற்றும் கைத்தறி கழகங்கள் மற்றும் காதி கிராமத்தொழில் கழகங்கள்/வாரியங்கள் போன்றவை பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் வளர்ச்சியடைவதில் முக்கிய பங்காற்றலாம். காதி கிராமத் தொழில்கள் கழகம்/வாரியத்தின் விற்பனை நிலையங்களைப் பொன்விழா கிராம சுயவேலை திட்டப் பொருள்களை நிலையாக விற்பதற்கு உபயோகப்படுத்தலாம். சந்தை நிலவரங்களை மனதில் கொண்டு உயர்மட்ட அமைப்புகளுடனான தொடர்புகள் இலாபகரமான விலைகளுடன் சந்தை நிலவரத்தில் நிலைத் தன்மையை உறுதிப்படுத்தும். இத்தகைய தொடர்பு, பொருள்களின் தர உயர்விற்கு வழி கோலுவதுடன், ஏழை உற்பத்தியாளர்களின் விற்பனைச் சரிவையும் குறைக்கும். வங்கிகளும் இத்தகைய முயற்சிகளை ஆதரிக்க வேண்டும். இந்த சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கான கடன் வசூலும், இந்த தொடர்பு முறையில் பின்னப்பட்டிருப்பதால் வங்கிகளும் கடன் வழங்கும் முறையை எளிமைப்படுத்துதலை ஊக்குவிக்கலாம். கிராமிய கைவினைஞர்களின் உற்பத்திப் பொருள்களின் விற்பனையில் நாட்டின் பல இடங்களில் அரசு சாரா அமைப்பு மற்றும் மற்ற சுயேச்சையான நிறுவனங்கள் ஈடுபட்டிருக்கின்றன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் அதுபோன்ற நிறுவனங்களுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

**7.8** சுயசெயல்புரிவோரால் உருவாக்கப்படும் பொருட்களை விளம்பரப்படுத்தும் பொருட்டு மாநிலங்கள் விழாக்களை நடத்தியுள்ளன. சுய வேலை வாய்ப்பாளர்களை பிராந்திய அளவிலான சந்தைகளுடன் இணைப்பதற்கு இது போன்ற முயற்சிகளுக்கும் ஆர்வமும் ஊக்குவிப்பும் தேவைப்படுகிறது. நகரப்பகுதிகளில் காலமுறையாக பொருட்காட்சிகள் நடத்தப்படுவது பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட சுயவேலை வாய்ப்பாளர் தயாரிக்கும் பொருட்களுக்கு மேம்பட்ட விலை கிடைக்க உதவியாக இருக்கும். மேலும் சந்தைகளில் நிலவும் தேவைகள் குறித்து பொன்விழா கிராம சுயவேலை குழுக்கள் அறிவதற்கும் மேற்படி பொருட்காட்சிகள் உதவும். மாநில அளவிலான அமைப்புகள் மற்றும் வாரியங்கள் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் அமைக்கப்படும் குழுக்களுடன் உயிரோட்டமான உறவை ஏற்படுத்தி வலுவான மற்றும் இக்குழுக்களுக்கு அவசியமான இணைப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மேற்படி செயல் ரீதியான அமைப்புகள் ஏழை மக்களுக்கு பொருட்களின் தர உத்திரவாதத்திற்கும் மற்றும் அவைகளின் வடிவமைப்பிற்கும் வழிகாட்ட வேண்டும். மாநிலத்தின் முக்கிய நகரப்பகுதிகளில் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட பொருட்களை விளம்பரப்படுத்தவும், விற்பனை செய்யவும் மாநில அளவிலான விற்பனை நிலையங்களை நிறுவுவதை முயற்சித்துப் பார்க்கலாம்.

**7.9.** தரமுள்ள பொருட்களை உற்பத்தி செய்வது தொழில் முனைவர்களின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி ஒட்டு மொத்தமாக நாட்டின் வளர்ச்சிக்கும் மிக முக்கியமானதாகும். எனவே, சுய வேலைவாய்ப்பு வாய்ப்பாளர்களுக்குத் தரக்கட்டுப்பாட்டு பயிற்சி அளிக்கவேண்டியது சந்தை மற்றும் விற்பனை முகமைகளின் கடமையாகும். விற்பனைக்கு வைக்கப்படும் பொருள்களை அவைகளின் விற்பனை மதிப்பை மேம்பாடு செய்வதின் பொருட்டு குறைந்தபட்ச சீரான தரக்கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். உள்ளூர் தேவைகளுக்காக உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கும் இது அவசியம். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் குறிப்பிட்ட கால அளவில் சுயவேலை வாய்ப்பாளர்களின் கூட்டத்தை நடத்தி தரக்கட்டுப்பாடு தொடர்பாக அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும். உற்பத்திப் பொருள்களின் துறைகளில் வல்லுநர்கள் பொருள்கள் உற்பத்தியாகும் இடங்களை அடிக்கடி பார்வையிட்டு சுயவேலை வாய்ப்பாளர்களுக்கு வழிகாட்டுவதற்காக ஏற்பாடு செய்ய வேண்டும்.

## 8. திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்

**8.1.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தை வெற்றிகரமாக நிலைப்படுத்துவதில் மாவட்டத்தில் உள்ள பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களின் முழுமையான ஈடுபாடு மிக அவசியம். பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்கள், பிற ஊராட்சி அமைப்புகள், வங்கிகள், தொடர்புடைய துறைகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் முழுமையான ஈடுபாட்டுடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயல்படுத்துகிறது.

**8.2.** இத்திட்டத்தை செயல்படுத்துவதில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் முழுமையான ஒத்துழைப்பு மிக அவசியம். குறிப்பாக, சுய உதவி குழுக்களை அமைத்து அதன் உறுப்பினர்களின் திறமையை மேம்படுத்துவதோடு மட்டுமின்றி, தொழில்நுட்பம் மற்றும் பயிற்சியையும் அளிக்கத்தக்க பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெறுதல், திட்டமிடுதல் மற்றும் கடன் வசதியளித்தலுக்கு பொறுப்பான வங்கிகள் ஒத்துழைப்பைப் பெறுதல், கட்டமைப்பு வசதி மற்றும் நவீன தொழில்நுட்பத்தை தொடர்ந்து அளித்தலில் பொறுப்பான தொடர்புடைய பல்வேறு துறைகளின் ஒத்துழைப்பை பெறுதல் ஆகியவை மட்டுமின்றி, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உடனுக்குடன் தொய்வின்றி விற்பதற்குச் சந்தை வசதிகளை ஒருங்கிணைத்தல் போன்ற பொறுப்புகளும் உள்ளன.

**8.3.** பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட செயலாக்கத்தில் கிராம ஊராட்சிகள் முக்கியமான பங்கு வகிக்கும். கணக்கெடுப்பின்படி வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் பட்டியல்களுக்கு கிராம சபை முதலில் ஒப்புதல் வழங்கும். ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்தில், கிராம ஊராட்சி பகுதியில், தேர்ந்தெடுக்கப்பட்ட இலாபகரமாக செயல்பட கூடிய சில முக்கியமான செயல்களைக் கிராம ஊராட்சி தலைவரை கொண்ட மூன்று நபர் குழு தெரிவு செய்யும். வங்கிகளால் கடன் வசதி அளிக்கப்பட்ட சுயசெயல்புரிவோர்களின் பட்டியல் கிராமசபை முன் வைக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமான செயல்களுக்குத் தேவைப்படும் பொதுவான கட்டமைப்பு வசதிகளை கிராம ஊராட்சி அதற்களிக்கப்படும் ஜவஹர் கிராம வளர்ச்சித் திட்ட நிதி மூலமாகவோ அல்லது வேறு பிற திட்ட நிதி மூலமாக அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளும். கிராம ஊராட்சி சுயசெயல்புரிவோர்களின் செயல்பாட்டினை அதிலும் குறிப்பாக, அவர்கள் பெற்ற கடனை முறையாகத் திரும்ப செலுத்துகிறார்களா என்பதனைத் தொடர்ந்து கண்காணிக்கும்.

**8.4.** வட்டாரத்திற்கென முக்கியமான செயல்களின் பட்டியலை, வட்டார அளவிலான குழு முதலில் கண்டறிந்து, பின், இது வட்டார வளர்ச்சி அலுவலருக்கு மாவட்ட அளவிலான தொழில்நுட்ப குழுவின் மூலமாக அனுப்பப்படும். ஒவ்வொரு வட்டார அளவிலான பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டக் குழு மூலம் அனுப்பப்படும் அறிக்கையை ஊராட்சி அமைப்பு ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்யும். முக்கியமாக கடன் வசூல் செயல்பாட்டினை ஆய்வு செய்யும். மாவட்ட ஊராட்சி, அதன் ஆட்சி மன்ற கூடங்களில், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட செயலாக்கத்தை ஆய்வு செய்யும்.

**8.5.** பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை அமல்படுத்துவதில் வங்கிகள் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் என்பது கடன் மற்றும் மானியம் வழங்கும் திட்டமாகும். அதில் கடன் வழங்குதல் என்பது மிக முக்கியமான பகுதியாகும். மானியம் வழங்குவது என்பது, சுயசெயல்புரிவோரை ஊக்கப்படுத்துவதன் பொருட்டு குறைந்த அளவிலேயே இருக்கும். பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட செயல்பாட்டில் முக்கியமான செயல்களைத் தெரிவு செய்யும் ஆரம்ப கட்ட நடவடிக்கையிலிருந்து, அதாவது தொகுப்பான பகுதிகள், சுய உதவி குழுக்கள் தனிப்பட்ட சுய செயல்புரிவோர் ஆகியவர்களைக் கண்டறிவதிலும் மற்றும் முக்கிய செயல்களின் அனைத்துக் கூறுகளுக்காகத் திட்டமிடுதலிலும் வங்கியாளர்கள் நெருக்கமாகப் பங்கேற்க வேண்டும். சுயசெயல்புரிவோரை தேர்வு செய்வதில் வங்கிகள் முடிவே இறுதியானது. கடன் வழங்கிய பின்னர் திட்டத்தின் முன்னேற்றத்தைத் கண்காணிப்பதற்கும், அதே நேரத்தில் வாங்கிய கடனை திரும்பச் செலுத்துவதை மேற்பார்வையிடுவதற்கும், விரிவான புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**8.6.** பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் தொடர்புடைய துறைகளுக்கு முக்கியமான பங்கு உள்ளது. செயலாக்கத்தில் மற்றும் இத்திட்டத்தின் கீழ் தொடர்புடைய துறைகள் அவைகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளைக் கண்காணித்து செயல்படுத்துவதிலும் பொறுப்பு வகிக்கும். பொன்விழா கிராம சுய

வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், திட்ட செயலாக்கத்தினை மேற்கொண்டுள்ள முகமைகளுக்கு மற்றும் தொழில் துறைகளுக்கு இடையே நெருக்கமான ஒத்துழைப்பு அவசியமாகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், துவக்கப்படும் முக்கியமான செயல்களைக் கண்டறிவது மற்றும் திட்ட அறிக்கை தயாரிப்பது ஆகிய நிலையிலிருந்தே ஒருங்கிணைப்புப் பணிகள் தொடங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமான செயல்கள் வெற்றிகரமாக செயல்படுவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் தொடர்புடைய துறைகளின் பொறுப்பாகும். இது மட்டும் அல்லாமல் வங்கிக் கடன்களை அனுமதித்தவுடன் சுயசெயல்புரிவோருக்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதல் மற்றும் தேவையான பிற வசதிகள் உருவாக்கப்படுவதை தொடர்புடைய துறைகள் உறுதி செய்ய வேண்டும். இத்திட்டத்தில் பயன்பெறும் சுயசெயல்புரிவோர் மேற்கொண்டுள்ள செயலுக்குத் தேவையான போதிய தொழில் நுட்ப திறமை உள்ளதா என்பதைக் கண்டறிந்து, தொழில்நுட்ப திறமை குறைவாக இருந்தால் அவர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்க தொடர்புடைய துறைகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு பயிற்சி அளிக்கப்படும்போது தரமுள்ள பயிற்சி அளிக்கப்படுகின்றதா என்பதையும் தொடர்புடைய துறைகள் உறுதி செய்ய வேண்டும். சுயசெயல்புரிவோர் உரிய தொழில்நுட்பப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறச் செய்வதற்கு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு தொடர்புடைய துறைகள் உதவவேண்டும். சுயசெயல் புரிவோர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அனைத்து உதவிகளையும் கொண்டு, ஈடுபட்டுள்ள செயல்களின் மூலம் எதிர்பார்த்த அளவிலான வருமானம் கிடைக்கின்றனவா என்பதனை ஆய்வுகள் மற்றும் மதிப்பாய்வு மூலம் கண்டறிவதும் தொடர்புடைய துறைகளின் பொறுப்பாகும். சுயசெயல் திட்டங்களை செயல்படுத்துவதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், உள்ளாட்சி அமைப்புகள், வங்கிகள் ஆகியவை அவற்றின் அன்றாடப் பணிகளில் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும்.

8.7. அரசு சாரா நிறுவனங்களும் இத்திட்ட செயலாக்கத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். சுய உதவி குழுக்கள் அமைப்பதிலும் மற்றும் சுயசெயல்புரிவோரின் பொருளாதார முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்கும், அரசு சாரா நிறுவனங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். எங்கெல்லாம் வாய்ப்பு உள்ளதோ, அங்கெல்லாம் தரம் வாய்ந்த பொருள் உற்பத்தி செய்வதற்கும், தொழில்நுட்ப உதவிக்கும் அரசு சாரா நிறுவனங்களின் சேவையை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அரசு சாரா நிறுவனங்களின் திறமையையும், அவர்களின் பணியின் தன்மையையும் பொறுத்து அவர்களை இத்திட்டத்தில் பயன்படுத்துவது அமையும். எனவே, தகுதி வாய்ந்த அரசு சாரா நிறுவனங்கள் மட்டுமே இத்திட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். அதே சமயத்தில், மாவட்டத்தில் உள்ள அனைத்து வசதிகளையும் இத்திட்ட செயலாக்கத்திற்காக பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

8.8. இது போன்று, மாவட்டத்திலுள்ள தொழில்நுட்ப நிறுவனங்களில் உள்ள அனைத்து வகையான தொழில்நுட்பத் திறமைகளையும் இத்திட்டத்தில் பங்கு கொள்ள முயற்சிகள் செய்யவேண்டும். இத்திட்ட செயலாக்கத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மேலே கூறப்பட்டுள்ள தொழில்நுட்ப நிறுவனங்களால் உடனடியாகத் தீர்வு சொல்ல முடியாது என்றாலும், பிரச்சினைகள் சரியான முறையில் அவர்களுக்கு தெரியப்படுத்தினால், பல்வேறு நிலைகளில் அவ்வப்போது ஏற்படும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை அறிந்து அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் கூறுவர். திட்ட செயலாக்கத்தில், அவர்கள் முழுமையாக அங்கம் வகிக்கும்போது அவர்களின் திறன் அதிகமாவதுடன் நீண்டகாலப் பயன்களை அடையவும் உதவியாக இருக்கும். மாவட்ட அளவிலான பொன்விழா சுயவேலை வாய்ப்புத் திட்டக் குழு மேலே கூறப்பட்டுள்ள கருத்துக்களில் தனி கவனம் செலுத்த வேண்டும்.

## ஒருங்கிணைப்புக்கான அமைப்பு

8.9 மாவட்டத்திலுள்ள பல்வேறு வளர்ச்சித் துறைகள் மற்றும் முகமைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும். இத்திட்டத்தில் பங்கேற்கும் அனைத்து முகமைகளும் அவர்களுக்குரிய பொறுப்பான பங்கினை முழுமையாக உணர்ந்து திட்டத்தை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும். பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தைப் பல்வேறு துறையினரும், முகமைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதை உறுதி செய்யும் பொருட்டு பின்வரும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## வட்டார அளவில் கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டக்குழு

8.10. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் கீழ்க்கண்டவாறு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | தலைவர் |
| 2. | திட்ட அதிகாரி (சுயதொழில்) | உறுப்பினர் |
| 3. | வட்டாரத்தில் திட்டங்களை செயல்படுத்தும் வங்கிகளின் கிளைகளில் உள்ள மேலாளர்கள் | உறுப்பினர் |
| 4. | வட்டார நிலையில்/உப கோட்ட நிலையில் திட்டத்தை செயல்படுத்தும் துறைகளின் அதிகாரிகள் | உறுப்பினர் |

5. அரசு சாரா அமைப்பு நிறுவனத்தின் பிரதிநிதி (ஒருவர்) ............ உறுப்பினர்

6. வட்டார வளர்ச்சி அலுவலர் ............ கூட்டுநர்

இந்தக் குழுவின் கூட்டம் வட்டார வளர்ச்சி அலுவலரால் நடத்தப்படும். முன்னோடி வங்கி அதிகாரி, கோட்ட வளர்ச்சி மேலாளர், நபார்டு வங்கியின் பிரதிநிதி, ரிசர்வ் வங்கியின் மாவட்ட முதன்மை அதிகாரி ஆகியோர்களும் சிறப்பு அழைப்பாளர்களாக இக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். இவர்கள் ஒவ்வொரு வட்டாரத்திலும் எத்தனை கூட்டங்களில் வேண்டுமானாலும் அடிப்படைப் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காகக் கலந்து கொள்ளலாம்.

**இந்தக் குழுவின் முக்கியமான பணிகள் பின்வருமாறு:**

1. திட்டம் தொடங்குவதற்கான முக்கியமான நடவடிக்கைகளை முதலில் தேர்வு செய்யவும்.

2. ஒவ்வொரு வருடத்திலும் கூட்டத்தைச் செயல்படுத்துவற்காக கிராமங்கள் மற்றும் குழுக்களின் எண்ணிக்கையைத் தேர்வு செய்தல்.

3. கிளை வங்கிகளுக்கு வேலையைப் பிரித்தளித்தல்.

4. செயல்படுத்தும் பல முகமைகளின் செயல்பாட்டைக் கண்காணித்தல்.

5. அடிப்படைக் கட்டமைப்பு வசதி, கடன், தொழில்நுட்பம் மற்றும் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

6. சுயஉதவி குழுக்கள் பெறும் வருமானம் குறித்து மறுஆய்வு செய்தல்.

7. கடன் வசூல் பற்றிய மறு ஆய்வு மற்றும் கடன் வசூலுக்காக முகாம்கள் போன்றவற்றை நடத்துதல்.

8. சொத்துக்களைச் சரிபார்ப்பதற்காகச் சில மாதிரி சோதனைகள் செய்தல்.

9. மாத அறிக்கை தயாரித்தல் (இந்த மாத அறிக்கை வங்கிகள் அளிக்கும் விவரங்களில் இருந்து வட்டார வளர்ச்சி அலுவலரால் தயாரிக்கப்பட வேண்டும். இந்த அறிக்கையைப் பற்றி வட்டாரங்கள் குழுவின் மாதத் திட்டத்தில் மறு ஆய்வு செய்வது பிரச்சினைகளைக் கண்டறிவதற்கு உதவும். ஆனால் இந்த மாதக் கூட்டம் நடக்காவிட்டாலும் இந்த மாத அறிக்கை தயாரிப்பதை நிறுத்த வேண்டியதில்லை)

10. வறுமைக் கோட்டிற்கு மேல் சுய உதவி குழுக்கள் உயர்வதில் உள்ள முன்னேற்றம் குறித்து மறு ஆய்வு.

வட்டார நிலைக்குழு ஒவ்வொரு மாதமும் 5ஆம் தேதியிலிருந்து 10ஆம் தேதிக்குள் ஒரு நாளில் கூட வேண்டும். அந்தக் கூட்டங்கள் தொடர்ந்து நடப்பது உறுதிசெய்யப்பட வேண்டும். நிதிநிறுவனங்களின் கிளை மேலாளர்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் இத்திட்டத்திற்காக நிதி அளிப்பது குறித்தான அறிக்கையை அனுப்பி இந்த அறிக்கைகள் வட்டார வளர்ச்சி அலுவலரால் தொகுக்கப்பட வேண்டும். வட்டார நிலை கிராம சுயவேலைவாய்ப்புக் குழுவின் கூட்ட நடவடிக்கைகள் ஊராட்சி அமைப்புகளுக்குத் தகவலுக்காகவும், மேல்நடவடிக்கை தேவைப்பட்டால் எடுப்பதற்காகவும் அனுப்பப்படவேண்டும். இதனுடைய நகல் திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கும் மற்றும் முன்னோடி வங்கி அதிகாரிக்கும் அனுப்பப்படவேண்டும்.

**மாவட்ட அளவில் கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டக்குழு**

8.11 மாவட்ட அளவில் கீழ்க்கண்டவாறு உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட வேண்டும். இந்தக் குழு ஒவ்வொரு மாதமும் கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட முன்னேற்றம் குறித்து, மறு ஆய்வு செய்து தேவையான திருத்த நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யும்.

1. மாவட்ட ஆட்சித் தலைவர்/முதன்மை செயலாக்க அதிகாரி ................................ தலைவர்

2. நாபார்டு வங்கியின் கோட்ட வளர்ச்சி மேலாளர் ................................ உறுப்பினர்

3. ரிசர்வ் வங்கியின் முன்னோடி மாவட்ட அலுவலர் ................................ உறுப்பினர்

4. திட்டத்தை செயல்படுத்தும் வங்கிகளின் மாவட்ட நிலை ஒருங்கிணைப்பாளர்கள் .. உறுப்பினர்

5. திட்டத்தை செயல்படுத்தும் துறைகளின் மாவட்ட நிலையிலான அதிகாரிகள் ......... உறுப்பினர்

6. பொது மேலாளர், மாவட்ட சிறுதொழில் மையம் ................................ உறுப்பினர்

7. மாவட்ட காதி மற்றும் கிராமத் தொழில் வாரிய அலுவலர் ......................... உறுப்பினர்

8. திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ................................ உறுப்பினர்

9. 2 அல்லது 3 அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள் ................................ உறுப்பினர்

10. முன்னோடி வங்கி அதிகாரி ...................... கூட்டுநர்

**மாவட்ட நிலை கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டக் குழுவின் பணிகளில் கீழ்க்கண்டவையும் அடங்கும்**

1. கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை ஆய்வு செய்தல்.

2. திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிதி செலவு மற்றும் முடிக்கப்பட வேண்டிய இலக்கு குறித்து கண்காணித்தலும், ஆய்வு செய்தலும்.

3. திட்டத்தை செயல்படுத்தும் முகமைகளுக்குள் பிரச்சினைகள் எழுமானால் அவற்றை மாநில அளவிலான குழுவின் முன் தீர்வுக்காக வைப்பது.

4. இத்திட்டத்தில் சுயஉதவி குழுக்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான தேவைகளுக்காக உரிய நிறுவனங்களை தேர்வு செய்தல் மற்றும்

5. கடனாக வழங்கப்பட்ட நிதியை வசூல் செய்வதற்காக, வங்கி எடுக்கும் நடவடிக்கையை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஆய்வு செய்து கண்காணிப்பது மற்றும் தேவையான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது.

**மாநில அளவிலான குழு**

8.12 மாநில அளவில் ஊரக வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகத்தில் இத்திட்டத்திற்காக திட்டமிடுதல், செயலாக்கம், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு குறித்து ஆய்வு செய்ய வேண்டும். இதற்காக மாநில அளவிலான குழு கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.

1. தலைமைச் செயலாளர் .......................... தலைவர்
2. செயலர், ஊரக வளர்ச்சித் துறை .......................... உறுப்பினர்/ செயலர்
3. செயலாளர், நிதித்துறை .......................... உறுப்பினர்
4. செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை .......................... உறுப்பினர்
5. செயலாளர், (மகளிர் மேம்பாடு) சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை — உறுப்பினர்
6. அவ்வப்போது தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட இத்திட்டத்தைச் செயலாக்கும் துறைகளின் தலைவர்கள் .......................... உறுப்பினர்
7. செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை .......................... உறுப்பினர்
8. நாபார்டு வங்கியின் பிரதிநிதி .......................... உறுப்பினர்
9. ரிசர்வ் வங்கியின் பிரதிநிதி .......................... உறுப்பினர்
10. மாநில தலைமையிடத்தில் உள்ள இத்திட்டத்தை செயலாக்கும் வங்கிகளின் பிரதிநிதிகள் .......................... உறுப்பினர்
11. மைய அரசிற்காக, துணைச் செயலாளர் பதவிக்குக் கீழ் அல்லாத மத்திய அரசின் ஒரு பிரதிநிதி .......................... உறுப்பினர்
12. இயக்குநர், மாநில ஊரக பயிற்சி மையம் .......................... உறுப்பினர்
13. மாநில அளவிலான வங்கிகள் குழுவின் கூட்டுநர் .......................... உறுப்பினர்

**இந்தக் குழுவின் பணிகள் பின்வருமாறு :**

1. இத்திட்டத்திற்காக திட்டமிடுதல், செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் வழிகாட்டுதல்

2. மாவட்ட வாரியாக இத்திட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து , தேவையான தீர்வு நடவடிக்கைகள் மேற்கொள்வது.

3. இத்திட்டத்திற்கான நோக்கங்களின் அடிப்படையில், இத்திட்ட செயலாக்கத்தை கண்காணித்தலும் மற்றும் மதிப்பீடு செய்தலும்.

4. நற்பெயர் பெற்ற அரசுசாரா நிறுவனங்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்தி தேவையான கட்டளைகள் அளித்தல்.

5. இத்திட்டத்திற்காக மாநில அளவில் கொள்கையை வகுப்பவர்களுடனும், அடித்தளத்தில் செயல்படுத்தும் முகமைகளையும் மற்றும் வங்கிகளையும் இணைக்க வழிவகுத்தல்.

6. இத்திட்டத் தொடர்பான எந்தக் கொள்கை பற்றியும் கலந்தாய்வு செய்வது.

**மத்திய அரசு அளவிலான குழு**

8.13 மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தில் உள்ள ஊரக வளர்ச்சித் துறை இந்திய அளவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளை வரையறுப்பதற்கும், இத்திட்டத்திற்கான மத்திய அரசு நிதி பங்கீட்டினை விடுவித்தல், கண்காணித்தல், மற்றும் இத்திட்டத்தை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றிற்கும் பொறுப்பாக உள்ளது. மத்திய அரசு அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஊரக வளர்ச்சித் துறைக்கு உதவியாக இருக்கும். மத்திய அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கூடும். இக்குழு கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.

1. செயலர், ஊரக வளர்ச்சி அமைச்சகம் ....தலைவர்
2. துணை ஆளுநர், ரிசர்வ் வங்கி ..............உறுப்பினர்

3. செயலாளர், வேளாண்மை மற்றும் கூட்டுறவுத்துறை ........................................ உறுப்பினர்

4. செயலாளர், நிதித் துறை (செலவுகள்) ..... உறுப்பினர்

5. சிறப்புச் செயலாளர், நிதித் துறை (வங்கிப் பிரிவுகள்) ........................................ உறுப்பினர்

6. செயலாளர், மகளிர் மற்றும் சிறார் வளர்ச்சி ........................................ உறுப்பினர்

7. செயலாளர், சிறுதொழில்கள் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்கள் ......... உறுப்பினர்

8. செயலாளர், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை ........................................ உறுப்பினர்

9. செயலாளர், நலத்துறை அமைச்சகம் ........ உறுப்பினர்

10. மேலாண்மை இயக்குநர், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ........................................ உறுப்பினர்

11. ஆலோசகர், (ஊரக வளர்ச்சி) திட்டக்குழு ........................................ உறுப்பினர்

12. கூடுதல் செயலாளர் மற்றும் நிதி ஆலோசகர், ஊரக வளர்ச்சி அமைச்சகம் ........................................ உறுப்பினர்

13. மாநில ஊரக வளர்ச்சித் துறை செயலாளர்கள் ........................................ உறுப்பினர்

14. வர்த்தக வங்கிகளின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்கள் ........................ உறுப்பினர்

15. தலைமை இயக்குநர், கபார்ட் ........................ உறுப்பினர்

16. தலைமை இயக்குநர், தேசிய ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம் ........................ உறுப்பினர்

17. இந்திய வங்கிகளின் சங்கத் தலைவர் ........................................ உறுப்பினர்

18. இணைச் செயலர் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி) ஊரக வளர்ச்சித் துறை ........................................ உறுப்பினர்/ செயலாளர்

இக்குழுவிற்கு வேறு அலுவலர்கள்/அலுவலர்கள் அல்லாத தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவையெனக் கருதினால் அவர்களையும் இக்கூட்டத்திற்கு அழைக்கலாம்.

**மத்திய அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவின் பணிகள்**

1. திட்டத்தினை ஆய்வு செய்து செம்மையான செயல்பாட்டினை உறுதி செய்தல்

2. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கு உதவக்கூடிய தேவையான இணைப்புகளை ஆய்வுசெய்தல்

3. திட்டத்தின் முன்னேற்றத்தினை நிதி மற்றும் செயல் இலக்கின் அடிப்படையிலும் அதற்கு வழங்கப்படும் கடன் உதவி மற்றும் அதனை தரமாகப் பயன்படுத்துவது குறித்தும் ஆய்வு செய்தல்

4. திட்ட மதிப்பீட்டு அறிக்கைகளை ஆய்வு செய்தல்

5. மாநில அரசுக்கும், வங்கிகளுக்கும் இடையே தொடர்ந்த இணைப்பு ஏற்படுத்தும் அமைப்பாகச் செயல்படுதல்

6. கடன் வசதிக்கான ஏற்பாடுகள் குறித்து மறு ஆய்வு செய்து தேவையான மாற்றங்களை அவ்வப்போது பரிந்துரைப்பது.

**வங்கிகளில் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டப் பிரிவுகளை உண்டாக்குதல்**

8.14. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் நன்றாகச் செயல்பட வங்கிகளுடைய மண்டல அலுவலகம் மற்றும் அலுவலகங்களின் தனியான பிரிவு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இந்த அலுவலகங்கள் காலவரையிலான ஆய்வு செய்து பயனாளிகளுக்கு உரிய கடன் வசதி வழங்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். ரிசர்வ் வங்கி மற்றும் மத்திய அரசினால் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகள் செம்மையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்க வேண்டும். வங்கி கிளைகளிலிருந்து புள்ளி விவரங்களைப் பெற்று ஒருங்கிணைந்த அறிக்கையைத் தலைமை வங்கி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## 9. நிதி வழங்கும் முறையும் அதனைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளும்

**மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான அளவு கோல்கள்**

9.1. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் மத்திய அரசால் அமுல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும். இந்தத் திட்டத்திற்காக ஆகும் செலவை மத்திய மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. மாநிலங்களுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்வது அந்தந்த மாநிலங்களில் நிலவும் வறுமை நிலையைப் பொருத்ததாகும். இருப்பினும், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்காக மத்திய அரசு, மாநிலத்திற்கு ஒரு ஆண்டில் நிதியை விடுவிக்கும்போது, மேற்குறிப்பிட்டவை தவிர கூடுதலான அளவுகோல்களான அதாவது மாநிலத்தின் நிதியை உபயோகிக்கும் திறன், முந்தைய ஆண்டுகளில் இத்திட்டங்களுக்காக நிதியைப் பயன்படுத்திய விதம் மற்றும் சிறப்புத் தேவை ஆகியவற்றையும் கருத்தில் கொள்ளும். மாவட்டங்களுக்கு திட்டத்திற்கான நிதியை



வழங்கும் அளவை மாநில அரசு முடிவு செய்து, மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். அதன் பின்னர் மத்திய அரசு நேரடியாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு நிதியை விடுவிக்கும். வட்டாரங்களுக்கான நிதியை அவ்வட்டாரத்தில் நிலவும் வறுமை நிலை மற்றும் பிற உள்ளூர் நிலைமைகளைக் கணக்கில் கொண்டு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆட்சிக் குழு முடிவு செய்யும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மாவட்டத்திற்குள் நிதி ஒதுக்கீட்டை மாற்றி அளிக்கலாம். இவ்வாறு மாற்றி நிதி ஒதுக்கீடு செய்வதை அந்நிதியாண்டில் மீதியுள்ள மாதங்களுக்காக ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளலாம்.

**தகுதியான செலவினங்கள்**

9.2. ஒவ்வொரு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையும், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட – நிதியை கீழ்க்கண்ட செலவினங்களுக்கு மட்டுமே பயன்படுத்தலாம்.

1. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட பயிற்சி நிதி (திட்ட நிதி ஒதுக்கீட்டில் 10%)

2. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட கட்டமைப்பு நிதி (திட்ட நிதி ஒதுக்கீட்டில் 20%)

3. சுயஉதவி குழுக்களுக்கான சுழல்நிதி (நிதி ஒதுக்கீட்டில் 10%)

4. பொருளாதார நடவடிக்கைகளுக்கான மானியம்

நிருவாகச் செலவினங்களுக்குத் தனியாக மத்திய அரசால் "மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாகம்" என்ற தலைப்பின் கீழ், நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**நிதிகளை விடுவித்தல்**

9.3. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கான நிதியை மத்திய அரசு இரண்டு தவணைகளில் வழங்கும். கடுமையான குளிர் நிலவும் லாகுல், ஸ்பிதி, லேக் மற்றும் கார்கில் போன்ற பகுதிகளில் திட்ட செயல்பாட்டிற்கான காலம் மிகவும் குறைவாக இருக்கும் என்பதால் அத்தகைய பகுதிகளில் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ஒரே தவணையில் வழங்கப்படும். மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டினைத் தொடர்ந்து மாநில அரசுகள் அவர்களது பங்கு நிதியை உடனடியாக வழங்க வேண்டும்.

**பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்திற்கு மத்திய அரசின் நிதியை வழங்குவது தொடர்பான வழிமுறைகள்**

**அ. சாதாரண பகுதிகளில்**

**1) முதல் தவணை நிதியை விடுவித்தல்**

இத்திட்டத்திற்காக முதல் தவணை மானியத் தொகை எவ்வித கோரிக்கையும் இன்றி சென்ற ஆண்டில் 2ஆவது

தவணை நிதி எவ்விதமான நிபந்தனையின்றி ஏற்கெனவே விடுவிக்கப்பட்டிருப்பின், வழங்கப்படும். சென்ற நிதி ஆண்டின் 2ஆவது தவணை நிதி விடுவிக்கப்படாமல் இருந்தாலோ அல்லது நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டிருந்தாலோ நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த பிறகும் நிதி ஒதுக்கீடு மத்திய அரசு அளிக்காமைக்கான காரணங்கள் சரிசெய்யப்பட்ட பிறகும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிதி ஒதுக்கீடு கோரி விண்ணப்பிக்க வேண்டும்.



ஒவ்வொரு நிதியாண்டிலும் இரண்டாவது மாத இறுதிக்குள் சாதாரணமாக முதல் கட்ட தவணை நிதி விடுவிக்கப்படும்.

## 2) இரண்டாவது தவணை நிதியை விடுவித்தல்

மத்திய அரசின் 2ஆவது தவணை நிதியைப் பெறுவதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் குறிப்பிட்ட படிவத்தில், கீழ்க்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்து அனுப்பிய பின்னரே வழங்கப்படும்.

1. மாநில அரசின் நடப்பு ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இச்சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மாநிலத்தின் பங்குத் தொகைக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். மத்திய அரசு இந்த விகிதாச்சாரத்திற்கு அதிகமாக நிதி வழங்காது.

2. மாநில அரசு, இத்திட்டத்திற்கான முந்தைய ஆண்டின் பங்குத் தொகையை முழுமையாக வழங்கி இருக்க வேண்டும். குறைவாக வழங்கியிருப்பின், அந்த அளவிற்கு மத்திய அரசின் இரண்டாவது தவணையில் பிடித்தம் செய்யப்படும்.

3. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் ஆரம்ப இருப்புத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் 15 சதவிகிதத்திற்கு மிகக் கூடாது. (ஆனால் 1999–2000ஆம் ஆண்டில் இது 20 சதவீதத்திற்கு மிகாமலிருக்கலாம்.) இந்த ஆரம்ப இருப்புத் தொகை இந்த வரம்பை மீறுமானால், மத்திய அரசின் பங்குத்தொகை எந்த அளவிற்கு இந்த வரம்பு மீறப்பட்டுள்ளதோ, அந்த அளவிற்கு இரண்டாவது தவணை நிதியைக் குறைத்து விடுவிக்கும்.

4. நடப்பு ஆண்டின் ஆரம்ப இருப்பு மற்றும் நடப்பாண்டில் விடுவிக்கப்பட்ட நிதியையும் சேர்த்து மொத்த நிதியிருப்பில் 60%க்கு குறையாமல் பயன்படுத்தியிருக்கவேண்டும்.

5. முந்தைய ஆண்டின் தணிக்கை அறிக்கைகள், நிதியைப் பயன்படுத்தியதற்கான பயனீட்டுச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6. ஆண்டு செயல்திட்டத்திற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆட்சிக் குழு ஒப்பு தலளிருத்திருக்க வேண்டும்.

7. கடைசியாக தவணைத் தொகை வழங்கியபோது குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.

8. மாநிலங்கள், இரண்டாவது தவணைத் தொகையைக் குறைந்தபட்சம் டிசம்பர் மாத இறுதிக்குள் பெற வேண்டும். இரண்டாவது தவணைத் தொகையை விடுவிப்பது, இதற்கு முன்னர் பெற்ற தொகையை பயன்படுத்தியது குறித்து தெரிவித்ததற்கு ஏற்ப அதாவது பயனீட்டுச் சான்றிதழ்களை அனுப்பிய காலத்தைப் பொறுத்து அமையும். **இரண்டாவது தவணைத் தொகைக்கான கருத்துருக்கள் முழுமையான அளவில் உரிய காலத்தில் பெறப்படுவதைப் பொருத்து மானியத்தின் அளவு கீழ்க்கண்டவாறு அமையும்.**

### கருத்துருக்கள் பெறுவது

டிசம்பர் மாத இறுதியில்
பெற்றால் – ஒதுக்கீடு செய்த நிதியில் 50%

ஜனவரி மாத இறுதியில்
பெற்றால் – ஒதுக்கீடு செய்த நிதியில் 40%

பிப்ரவரி மாத இறுதியில்
பெற்றால் – ஒதுக்கீடு செய்த நிதியில் 30%

மார்ச் மாத இறுதியில்
பெற்றால் – ஒதுக்கீடு செய்த நிதியில் 20%

### ஆ. குளிரான மற்றும் பாலைவன மாவட்டங்கள்

குளிரான மற்றும் பாலைவன மாவட்டங்களுக்கு நிதி ஒரே தவணையில் வழங்கப்படும். ஆனால் கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த நிலையில் கருத்துருக்கள் இருக்க வேண்டும்.

1. கடந்த ஆண்டு நிதி வழங்கிய போது நடைமுறைப்படுத்திய விதிமுறைகளைக் கடைப்பிடித்திருக்க வேண்டும்.

2. மாநிலங்களின் ஆண்டு வரவு செலவு அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்திருக்க வேண்டும். மத்திய அரசின் பங்குத்தொகை இதனைவிட அதிகமாக இருக்காது.

3. கடந்த ஆண்டுக்கான தவணைத் தொகைகளை மாநில அரசு விடுவித்திருக்க வேண்டும். அவ்வாறான நிதி ஒதுக்கீட்டில் குறைவு ஏதும் இருந்தால் அதற்கேற்ப மத்திய அரசின் தற்போதைய நிதி ஒதுக்கீட்டின் போது குறைக்கப்படும்.

4. நடப்பு நிதியாண்டின் ஆரம்ப இருப்பு நிதி கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் 15%க்கு மிகக் கூடாது. (ஆனால் 1999-2000ஆம் ஆண்டில் இது 20%க்கும் மிகக் கூடாது). இந்த அளவை விட அதிகமான ஆரம்ப இருப்பு இருந்தால் அவ்வாறு அதிகமாக இருக்கும் தொகை மத்திய அரசின் நடப்பு ஆண்டின் தவணைத் தொகை விடுவிக்கும்போது பிடித்தம் செய்யப்படும்.

5. கையிருப்பில் இருக்கக் கூடிய ஆரம்ப இருப்பு நிதியைச் சேர்த்து செலவிடுவதற்குக் கிடைத்த மொத்த நிதியில் 75 சதவிகிதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

6. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆட்சிக் குழு ஆண்டு திட்ட அறிக்கையை அங்கீகரித்து இருக்க வேண்டும்.

7. கடந்த ஆண்டின் தணிக்கை அறிக்கை, பயனீட்டுச் சான்றிதழ் மற்றும் வங்கி ஒத்திசைவு (Reconcilation) சான்றிதழ் ஆகியவை பெறப்பட்டிருக்க வேண்டும்.

## 10. கண்காணிப்பு

10.1 சுயசெயல் செய்பவர் வறுமைக் கோட்டிற்கு மேலே வருவதற்கு, பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் வங்கிக் கடனும் மானியமும் மட்டும் வழங்குவது போதாது. சுயசெயல் செய்பவர் உருவாக்கிய சொத்துக்களை நன்கு பராமரிக்கவும் அவற்றின் மூலம் தொடர்ந்து கூடுதல் வருவாய் பெறவும் போதிய ஏற்பாடுகளைச் செய்து கண்காணித்து மதிப்பீடு செய்ய வேண்டும்.

10.2 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை/வட்டார அலுவலர்கள் மற்றும் வங்கியாளர்களும் சுயசெயல் செய்பவர்கள் தங்களது சொத்துக்களை நன்கு பராமரிக்கவும் அதன் மூலம் எதிர்பார்த்த வருவாய் தொடர்ச்சியாகப் பெறவும் வழிவகைகளைச் செய்ய வேண்டும். அவர்களுடைய முயற்சிகளில் அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளைக் களைய எல்லா உதவிகளையும் செய்யவேண்டும். எல்லா சுயசெயல் செய்பவர்களுக்கும் விகாஸ் பத்திரம் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும். இந்த ஆவணத்தின் இரண்டு நகல்கள் தயாரிக்கப்பட்டு ஒரு நகல் சுயசெயல் செய்பவர்களிடமும் மற்றொரு நகல் வட்டார தலைமை இடத்திலும் இருக்க வேண்டும்.

இந்த இரண்டு ஆவணங்களும் அவ்வப்போதுள்ள நிலவரங்கள் மற்றும் இந்த செயலின் தன்மை குறித்த விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

10.3 ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் உருவாக்கப்பட்ட சொத்துக்களின் உண்மையான நிலையை நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும். இத்தகைய நேரடியான ஆய்வின் போது கண்டறியப்பட்ட குறிப்புகளின் மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை அடுத்த ஆண்டின் திட்ட அறிக்கையில் சேர்க்க வேண்டும்.

10.4 தொடர் நடவடிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் பல நிலைகளில் அதாவது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, வட்டார வளர்ச்சி அலுவலர், கிராம ஊராட்சிகள், வங்கிக் கிளைகள், பிற உரிய நிறுவனங்கள் மற்றும் அலுவலர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

10.5 பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் செயல்பாட்டினை எல்லா நிலைகளிலும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் இதனை அறிக்கைகள் மற்றும் சொத்துக்களைச் சரிபார்த்தல் மூலம் நிறைவேற்றலாம். மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்று மத்திய அரசு இத்திட்டத்தினை கண்காணிக்கும். மாநில அரசு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளில் இருந்து பின்வரும் அறிக்கைகளைப் பெற்று, மத்திய அரசிற்கு அனுப்பும்.

### அ) மாதாந்திர முன்னேற்ற அறிக்கை

ஒவ்வொரு மாதமும் மாதாந்திர முன்னேற்ற அறிக்கையை அதற்கடுத்து வரும் மாதத்தின் 20ஆம் தேதிக்குள் மத்திய அரசுக்குக் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். மாதாந்திர முன்னேற்ற அறிக்கை மாதிரிப் படிவங்கள் மாநில அரசுகளுக்குப் பின்னர் தெரிவிக்கப்படும்.

### ஆ) ஆண்டு முன்னேற்ற அறிக்கை

ஒவ்வொரு நிதி ஆண்டிலும் கடைசி மாத அறிக்கை, அதாவது மார்ச் மாத முன்னேற்ற அறிக்கை அந்நிதியாண்டின் ஆண்டு முன்னேற்ற அறிக்கையாகக் கருதப்படும்.

இந்த ஆண்டு முன்னேற்றத் திட்ட அறிக்கையுடன் மாநிலத்தில் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட்டது என்று பகுப்பாய்வு செய்து, கீழ்க்கண்ட விவரங்களடங்கிய குறிப்பையும் சேர்த்து மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும்.

i) நடப்பு நிதியாண்டின் செயல் மற்றும் நிதித் திறன் முன்னேற்றம்

ii) இத்திட்டத்தின் கீழ் பல்வேறு சுயசெயல்களுக்காக, இணைப்புகளாகப் பெறப்பட்ட ஆதாரங்கள் குறித்த விவரங்கள்

iii) ஏதாவது, இத்திட்டத்தின் செயல்பாடு பற்றிய பொதுவான மதிப்புரைகளும் மற்றும் கருத்துக்களும்.

## வட்டார மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அளவில் பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட செயலாக்கத்தை, தரமான முறையில் கண்காணித்தல்

10.6 பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தினைச் செம்மையான முறையில் செயல்படுத்த கள ஆய்வுகள் செய்து செயல்திறனைக் கண்காணிக்க வேண்டும். திட்டத்தின் செயல்பாட்டினை மாநில தலைமையிடத்தில் உள்ள அதிகாரிகள் முறையாக மாவட்டங்களில் நேரடியாகத் திட்டம் செயல்படும் இடங்களுக்குச் சென்று திட்டங்கள் சரிவர வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின்படியும், வழிமுறைகளின்படியும் செயல்படுத்தப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். இதைப்போல் கள ஆய்வு மாவட்ட அளவில், உட்கோட்ட அளவில், வட்டார அளவிலான அதிகாரிகளால் அந்தந்தப் பகுதிகளில் திட்ட செயல்பாட்டினை உட்பகுதிகளில் கூர்ந்து கண்காணிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டும்.

| வஎண். | பார்வையிட வேண்டிய அலுவலர் | ஒவ்வொரு மாதமும் பார்வையிட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | 10 |
| 2. | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | 20 |
| 3. | திட்ட அதிகாரி மற்றும் பொருளாளர் | 40 |
| 4. | உதவி திட்ட அலுவலர்கள் | 20 |
| 5. | வட்டார வளர்ச்சி அலுவலர்கள் | 20 |
| 6. | கூடுதல் வளர்ச்சி அலுவலர்கள் | 20 |

10.7 பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட செயலாக்கத்தைக் கண்காணிக்க ஒரு முறையான ஏற்பாடு தேவை. இதன்படி, வட்டார மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளில் உள்ள அலுவலர்கள் கள ஆய்வுகள் மேற்கொண்டு நேரடியாக சொத்துக்களைச் சரிப்பார்ப்பதுடன் சுயசெயல் செய்பவர்களுடைய குடும்ப வருமானம் அதிகமாகி உள்ளதா என்பதையும் சரிபார்க்க பின்வரும் கால அட்டவணையின்படி பலநிலை அலுவலர்கள் சுயசெயல் புரிபவர்களின் குடும்பங்களைப் பார்வையிடவேண்டும்.

10.8. மாவட்டத்தில் இத்திட்டத்துடன் தொடர்புடைய துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகள் எண்ணிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நிர்ணயிப்பார். அவ்வாறே மேற்படி அலுவலர்கள் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இந்த ஆய்வு அறிக்கைகளின் அடிப்படையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் உள்ள கணிப்பாய்வு பிரிவு அனைத்து விவரங்களையும் தொகுத்து அறிக்கை தயாரிக்கும். எங்கெங்கு குறைகள் உள்ளனவோ அவற்றை சரிசெய்ய உரிய நடவடிக்கைகளை எடுக்கும். இந்த ஆய்வறிக்கைகளைப் பற்றி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆளுகை குழுவில் விவாதிக்கப்பட வேண்டும். இந்த ஆய்வு அறிக்கையுடன் அதில் காணப்படும் முக்கிய கருத்துக்கள் மற்றும் அவற்றின்மீது எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை மற்றும் பொதுக் குறிப்புடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மாநில அரசுக்கு காலாண்டு அறிக்கையை அவர்களது மதிப்புரைகளுடனும் அனுப்பவேண்டும்.

10.9 மாவட்டங்களில் இருந்து பெறப்படும் அறிக்கைகளின் வாயிலாகக் கண்டறியப்பட்ட விவரங்களை காலாண்டிற்கு ஒரு முறை நடைபெறும் மாநில அளவிலான பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டக் குழுவின் கூட்டப் பொருளாகச் சேர்த்து ஆய்வு செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பெருந்தலைவர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் இத்தகைய கூட்டங்களுக்கு அழைக்கப்பட வேண்டும்.

## மதிப்பாய்வு

10.10. மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் கால முறைப்படி திட்ட செயலாக்கம் குறித்து மதிப்பாய்வு செய்ய வேண்டும்.



10.11. மதிப்பாய்வு செய்வதற்கான பணியினை நல்ல நிறுவனங்களிடமோ அல்லது அமைப்புகளிடமோ விரிவான ஆய்விற்காக ஒப்படைக்கலாம். இத்தகைய நடவடிக்கைகள் மத்திய மற்றும் மாநில/யூனியன் பிரதேச அரசுகளால் மேற்கொள்ளப்படலாம். மாநில அரசுகளால் நடத்தப்பட்ட இத்தகைய மதிப்பாய்வு அறிக்கைகளின் நகல்கள் மத்திய அரசிற்கு அனுப்பப்பட வேண்டும்.

10.12. இவ்வித மதிப்பாய்வு அறிக்கைகள் மற்றும் மத்திய அரசால் உடனுக்குடன் நடத்தப்படும் மதிப்பாய்வு அறிக்கைகளின் அடிப்படையில், தேவையான நிவர்த்தி நடவடிக்கைகளை மாநில அரசுகளும்/யூனியன் பிரதேச அரசுகளும் மேற்கொள்ள வேண்டும்.

## 11. சிறப்புத் திட்டங்கள்

### அறிமுகம்

11.1. பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்ட நிதி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு அளிக்கப்பட்டு அந்த நிதி அந்தந்தப் பகுதிகளில் எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஏற்ப அது பயன்படுத்தபடுகின்றது. சில நேரங்களில். வறுமை நிலையினைக் குறைக்க திட்டத்தில் ஈடுபடுகின்ற பல்வேறு துறைகளின் கூட்டு நடவடிக்கை தேவைப்படுகிறது. இது ஒன்றிற்கும் மேற்பட்ட மாவட்டங்கள் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம். அதேபோல், சில சமயங்களில் தொடர்புடைய பல்வேறு துறைகளோ அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளோ அல்லது மாநில அரசோ வளர்ச்சிக்கான உயிர்த்துடிப்பைத் தூண்டும் விதத்தில் சில புதிய முயற்சிகளை முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்த விரும்பலாம். இத்தகைய திட்டங்கள் பெரும் மாறுதலை வெளிப்படுத்தும் முன்னோடி நடவடிக்கைகளாக அமையும். இதற்கென பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்ட நிதியில் 15 சதவீதத் தொகை மைய அரசால் ஒதுக்கப்படும். இதில் திட்டத்தில் ஈடுபடும் பல்வேறு துறைகள், அரசு சார்புடைய நிறுவனங்களான, காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம், கைவினைப் பொருட்கள் உற்பத்தித்துறை மற்றும் சர்வதேச நிறுவனங்கள் போன்றவை ஈடுபடுத்தப்படலாம். இதில் தனிப்பட்ட மாவட்டத்திலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களிலோ எடுக்கப்பட்ட தன் முயற்சிகளும் அடங்கும். ஓர் ஆண்டிற்குள் இந்த நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்றால், மீதம் உள்ள நிதி அடுத்த ஆண்டு மாநிலங்களுக்கு மைய அரசால் விடுவிக்கப்படும் திட்ட நிதியுடன் சேர்த்து வழங்கப்படும். இவ்வாறு மாநிலங்களுக்கு வழங்கப்படும் தொகையானது அந்தந்த மாநிலங்களின் நிதியைப் பயன்படுத்தும் திறனைப் பொருத்து அமையும்.

### நோக்கம்:

11.2. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் வறுமைக் கோட்டிற்குள் உள்ள குறிப்பிட்ட எண்ணிக்கை குடும்பங்களைச் சுய வேலைவாய்ப்பு மூலமாக வறுமைக் கோட்டிலிருந்து விடுபட உதவுவதே இந்தச் சிறப்புத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்ட விதிமுறைகளின்படி உதவி பெறும் ஒவ்வொரு குடும்பமும் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்குள் வறுமைக்கோட்டிற்கு மேல் கொண்டுவரப்பட வேண்டும். கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் பல்வேறு ஏழை மக்களைக் கொண்டு சுய உதவி குழுக்கள் அமைத்தல், கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல், தொழில் நுட்பம், தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் விற்பனை ஆகிய வசதிகளைத் தனித்தனியாகவோ அல்லது ஒருங்கிணைத்தோ ஏற்படுத்தித் தருதல் உள்ளிட்ட பல்வேறு அணுகுமுறைகளைக் கையாள்வதன் மூலம் நீடித்த சுய வேலைவாய்ப்புகளை இத்திட்டம் ஏற்படுத்தித் தரும்.

### சிறப்பு செயல் திட்டங்களுக்கான ஒப்புதல்

11.3. தேசிய மற்றும் சர்வதேச அளவில் மாநில அரசோ அல்லது அரசு சார்ந்த அமைப்புகளோ இத்தலைப்பின் கீழ் உதவி பெறுவதற்கான முன்மொழிவுகளை மைய அரசிற்கு அனுப்ப வேண்டும். இதற்கான கருத்துருக்களைப் பரிசீலிக்க கீழ்க்கண்டவாறு இரண்டு அடுக்குக் குழு முறை உள்ளது.

அ) திட்ட ஆய்வுக் குழு

ஆ) திட்ட ஒப்புதல் குழு

திட்ட கருத்துருக்களை திட்ட ஒப்புதல் குழு அங்கீகரிக்கும் முன் திட்ட ஆய்வுக் குழு நன்கு



பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், மத்திய அரசுக்கு அனுப்பப்படும் சிறப்புத் திட்டங்களுக்கான கருத்துருவில் கீழ்க்கண்ட விவரங்கள் இடம்பெற வேண்டும்.

1) சுய செயல் புரிபவர்கள்/சுய செயல் புரிபவர்களின் குடும்பங்களின் விவரங்கள் எதிர்பார்க்கப்படும் ஆண்டு வாரியான நீண்ட கால மற்றும் குறுகிய காலப் பயன்கள் (நிதி, உருவாக்கப்படும் சொத்துக்கள் மற்றும் சுயவேலைவாய்ப்பு)

2) உத்தேசிக்கும் செயல்கள் பற்றிய பகுப்பாய்வு மற்றும் இதனை பிற இடங்களில் செயல்படுத்தப்பட உள்ள வாய்ப்புகள்

3) சிறப்புத் திட்டத்தின் நோக்கத்தை அடைய உத்தேசிக்கப்படும் அணுகுமுறை மற்றும் முக்கிய தொழிலுக்கும் கிடைக்கக்கூடிய வள ஆதாரங்களும் உள்ள தொடர்பு.

4) பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை பிற ஊரக வளர்ச்சித் திட்டங்களோடு ஒருங்கிணைத்தல் மற்றும் பிற திட்ட நிதிகளை ஒருமுகப்படுத்துவதற்கான ஏற்பாடு.

இந்த சிறப்புத் திட்டங்கள் பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் வழக்கமான செயல்களில் இருந்து மாறுபட்டதாக இருக்க வேண்டும்.

பரிசீலனை செய்து தனது பரிந்துரையுடன் திட்ட ஒப்புதல் குழுவுக்கு அனுப்பும். இந்த திட்ட ஆய்வுக் குழுவின் அமைப்பு பின்வருமாறு இருக்கும்.

இணைச் செயலர் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி) ஊரக வளர்ச்சித் துறை .............................. தலைவர்

இயக்குநர்/துணை ஆலோசகர், (ஊரக வளர்ச்சி), திட்டக்குழு ................................................ உறுப்பினர்

துணைச் செயலர் (ஒருங்கிணைந்த நிதிப் பிரிவு) ஊரக வளர்ச்சித் துறை ........................................ உறுப்பினர்

சம்பந்தப்பட்ட இயக்குநர்/துணைச் செயலர்/இணை இயக்குநர் உறுப்பினர் ................................ கூட்டுநர்

இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் திட்டங்களின் செயலாக்கத்தை ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல் இந்த திட்ட ஆய்வுக் குழுவின் பொறுப்பாகும்.

### ஆ. திட்ட ஒப்புதல் குழு

இக்குழுவின் அமைப்பானது பின்வருமாறு இருக்கும் :

செயலர், ஊரக வளர்ச்சி அமைச்சகம் ............ தலைவர்

கூடுதல் செயலர்/நிதி ஆலோசகர், ஊரக வளர்ச்சி அமைச்சகம் ........................ உறுப்பினர்

ஆலோசகர் (ஊரக வளர்ச்சி), நிதிக் குழு .... உறுப்பினர்

இணைச் செயலர் (ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி) ......................................... உறுப்பினர்/ கூட்டுநர்

### திட்ட செயல்பாட்டிற்கான காலம்

11.4 சாதாரணமாக திட்ட செயல்பாட்டிற்கான கால அளவு மூன்று ஆண்டுகளுக்கு மிகக் கூடாது.

### சிறப்புத் திட்டங்களுக்கான நிதியை விடுவித்தல்

11.5 ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட அட்டவணைப்படி நிதி விடுவிக்கப்படும். புதிய பணி இடங்களை உருவாக்குதல், வாகனங்கள் வாங்குதல் மற்றும் அவற்றைப் பராமரித்தல் போன்ற தொடர் செலவினத்திற்கு இத்திட்டத்தில் அனுமதி இல்லை.

11.6 இந்த சிறப்புச் செயல் திட்டம் குறித்து முன்னேற்ற அறிக்கைகளை உரிய படிவத்தில், திட்டத்தைச் செயல்படுத்தும் துறைகள் மைய அரசுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். ★

# ஏன் வேண்டும் இனியத் தமிழ் அர்ச்சனை?

– நடன காசிநாதன், எம்.ஏ.,

மனித இனத் தோற்றத்தின் தொடக்கக் காலத்தில் இயற்கையின் சீற்றங்களான நில அதிர்வுக்கும் மலை வெடிப்புக்கும், அணை கடந்த வெள்ளத்துக்கும் அணைக்க இயலா நெருப்புக்கும், சுட்டெரிக்கும் வெப்பத்துக்கும், சூறாவளிக் காற்றுக்கும் பெரும் அச்சம் கொண்டிருப்பார்கள். தங்களால் தடுக்க இயலாது. அக்கொடுமைகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அவற்றையே தம்மை மீறிய சக்திகளெனக் கொண்டு வழிபடத்தொடங்கியிருப்பர். அவ்வாறு வழிபடப்பட்ட இயற்கைச் சக்திகளே பின்னாளில் பஞ்ச பூதங்கள் என்றழைக்கப்பெற்ற நிலம், நீர், தீ, காற்று, விசும்பு ஆகியவை ஆகும்.

பிறகு தாம் வாழ்ந்துவரும் நிலத்தின் பிரிவுகளுக்கேற்ப ஒவ்வொரு தலைவன் உருவாகி அப்பகுதி மக்களைக் காத்துவரும் நாளில் அவனை வழிபடத் தொடங்கினார். இக்கால கட்டத்தில் வைதீக வழிபாட்டுமுறையின் தூக்கம் தமிழகத்தில் ஏற்படவே மக்கள் தலைவன் இருந்த இடத்தை வைதீகத் தெய்வம் ஆக்ரமித்துக் கொண்டது. அதன் பயனாய்த்தான் குறிஞ்சி நிலத்துக்கு சேயோனும், முல்லைக்கு மாயோனும், மருதத்துக்கு இந்திரனும், நெய்தலுக்கு வருணனும், பாலைக்குக் காடுகளும் தெய்வங்களாக வழிபடபட்டனர்.

மேற்காணும் ஐந்து தெய்வ வழிபாடு மாறி மூன்று முழுமுதற் தெய்வங்கள் வழிபாடு ஏற்படலாயின. நிலத்தைச் சித்தரிக்கும் நிலமகளான தாய்த்தெய்வம், நீரைச் சித்தரிக்கும் திருமால், தீயைச் சித்தரிக்கும் சிவன் ஆகிய தெய்வங்கள் நாளடைவில் செல்வாக்குப் பெற்றன.

மூன்று முழுமுதற் தெய்வங்களை வழிபட முற்பட்டபோது தங்களுக்குத் தெரிந்த மொழியிலேயே மக்கள் வழிபாட்டை நடத்தியிருப்பர். உள்ளத்தால் கற்பனையாக வழிபட்டு வந்தத் தெய்வங்களுக்கு யாதோ ஒரு உரு அமைத்து வழிபடத் தொடங்கியபோதும் தங்களது மொழியாலேயே வழிபாடு செய்திருப்பர்.

இந்தியாவின் வடபகுதியில் நிலவிய வேள்வி வழிபாட்டு முறையில் உருவ வழிபாடு கிடையாது என்றும் இந்தியாவின் பண்டையக் குடியினர்தான், பெரும்பாலும் தென்னாட்டினர்தான் தங்கள் தெய்வ வழிபாட்டில் உருவம் அமைத்து வழிபடும் முறையை ஏற்படுத்தினார்கள் என்பது அனைத்து அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. ஆதலால் உருவ வழிபாடு எங்கு நிலவியதோ அங்குதான் உருவத்துக்குரிய கோயில் அமைப்பும் ஏற்பட்டிருக்க வேண்டும். கோயிலில் உருவத்தை வழிபடத் தொடங்கிய பின்னர் தான் வழிபாட்டு முறையில் சில நெறி முறைகள் வகுக்கப்பட்டிருக்கும். அவ்வாறு வகுக்கப்பட்ட நெறிமுறைகளை உள்ளடக்கியே நூல்கள் எழுதப்பட்டிருத்தல் கூடும். அந்நெறிமுறைகளைக் கூறும் நூல்களே ஆகமங்கள்

என்றழைக்கப்படுகின்றன. ஆதலால் ஆகமங்கள் தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப் பட்ட நூல்கள் என்பதே அண்மைக் காலக் கருத்து. அவ்வாறு இருப்பின் அவை திராவிட மொழிகளில் ஒன்றிலோ அல்லது தமிழிலோ எழுதல் பெற்றிருத்தல் வேண்டும்.

இன்றைக்கு 4500 ஆண்டுகளுக்கு முற்பட்ட மொஹஞ்சாதாரோ, ஹரப்பாவில் அகழ்ந்தெடுக் கப்பட்டுள்ள தொல்பொருட்களில் தெய்வங்களின் உருவங்களைக் களிமண் தகடுகளில் காண்கிறோம். இதுவும் ஒரு காரணம் அந்நாகரிகம் முந்தைய காலத் திராவிடர் களுடையது என்று சொல்வதற்கு தெய்வங்களுக்கு உருவங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கிறது எனில் அது உருவவழிபாட்டைத் தொடங்கியவர்களாலேயே அவை செய்யப்பெற்றிருக்க வேண்டும். ஆதலால் உருவ வழிபாட்டு நெறிமுறைகளை விளக்கும் ஆகமங்கள் அன்றி வேறு எவை அவ்வுருவங்களை வடிவமைப்பதற்கு ஆதாரமாக இருந்திருத்தல் கூடும். இது ஆகமங்களின் தொன்மைக்கு சிறந்த உதாரணமாக அமைகிறது. ஆகமங்கள் தோற்றம் பற்றி மொழி ஞாயிறு, பாவாணர் தமிழர் மதம் என்னும் தம் நூலால் எழுதியுள்ள கருத்துக்களை உற்று நோக்கினால் உண்மை புலப்படும்.

குமரி மலைத் தொடரின் வடமுடியான் ஆகிய மகேந்திர மலையில் இறைவனருள் பெற்ற குரவனிடம் தொல்காப்பியர் காலமாகிய கி.மு. ஏழாம் நூற்றாண்டிற்கு முன் பாடங் கேட்டவர் தமிழராகவேயிருந்தது மட்டுமின்றி அவர் பாடங் கேட்டதும் அதை நூலாக வரைந்ததும் தனித்தமிழ் வாயி லாகவே நிகழ்ந்திருத்தல் வேண்டும். அந்நூல் அல்லது நூல்களே பிற்காலத்து வடமொழியாக மக்கட்கு மூலமாயிருந்திருத்தல் வேண்டும். இதற்கு ஆதாரமாக மணிவாசகப் பெருமான் பாடியருளிய

***மன்னுமாமலை மகேந்திர மதனிற்***
***சொன்ன வாகமந் தோற்றுவித்தருளையும்***

என்ற வரிகளை எடுத்துக்காட்டி, ஆகமங்கள் தோற்றுவிக்கப் பெற்ற மகேந்திரமாலை மிகவும் உயர்ந்திருக்கிற பொதியமலைக்குத் தெற்காகிய மயேந்திரகிரியின் அடிவாரத்தில், அழகிய பொன்மயமாகிய இலங்கையென்னுந் தேசமும் பொருந்தும் என்று உரையாசிரியர் கூறியுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு தமிழில் தோற்றுவிக்கப் பெற்ற ஆகமங்கள் என்னதான் கூறுகின்றன என்று தெரிந்துகொள்வது இன்றியமையாததாகிறது. ஆகமங்கள் பற்றி முனைவர் கே.கே. வெங்கடாச்சாரி வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்துக் கீழ்த்திசைப் பருவ இதழில் (ஓரியன்டல் ஜர்னல்) எழுதியுள்ள கருத்துக்கள் தெளிவை ஏற்படுத்துகின்றன.

இந்து சமய வழிபாட்டில் இரு நெறிமுறைகள் மூல ஆதாரங்களாகப் பின்பற்றப்படுகின்றன. ஒன்று வேத அல்லது நிகம நெறிமுறை. மற்றொன்று அவைதீக அல்லது ஆகம நெறிமுறை. இதையே ஒரு சாரார் முறையே புறநாட்டு நெறிமுறை என்றும் உள்நாட்டு நெறிமுறை என்றும் கூறுவர். மேலும் வேதநெறி முறை பிற்காலப் பண்பாட்டுத் தாக்கம் என்றும், அவைதீக அல்லது ஆகம நெறிமுறை மிகப் பழங்காலம் தொட்டு வழிவழியாகத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவது என்றும் கருதப்படுகிறது.

இவ்விரண்டு நெறிமுறைகளுக்கும் ஒரு இணைப்பு ஏற்படுத்தி அவைதீக வழிபாட்டில் இருந்த தெய்வங்களோடு வேத வழிபாட்டுத் தெய்வங்களையும் சேர்த்து வழிபடப்படுவதற்குப் பின்னாளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வெற்றியும் கொள்ளப்பட்டது.

மேற்காணும் இருநெறிமுறைகளிலும் இருந்த அடிப்படை வேறுபாடுகள் வேதவழிபாட்டில் இருந்த யாகவழி வழிபாடும் ஆகம வழிபாட்டில் இருந்த பூசை வழிபாடும் ஆகும். மேலும் வேத நூல்களில் ஒரு இடத்தில் கூட உருவ வழிபாடு குறிப்பிடப்படவில்லை. ஆகம நூல்கள் தெய்வங்களுக்கு உருவங்கள் அமைத்து பூசை வழி வழிபடும் வழிபாட்டை மிகவும் வலியுறுத்திப் பேசுகின்றன. அத்தோடு வேதநெறிமுறை வழிபாட்டுப்படி யாகம் வளர்த்து வழிபட்டு வந்தவர்கள் ஆகம வேதநெறிமுறைகளை ஏற்றுக்கொள்ளாது புறக்கணித்தும் வந்துள்ளார்கள். அத்தோடு நில்லாமல் ஆகம முறையில் வழிபட்டு வந்தவர்களை வ்ராத்யாஸ் என்றும், கீழ்ச்சாதியினர் என்றும்

**தாயே உயிரே தமிழே நினைவணங்கும்**
**சேயேன் பெறற்கரிய செல்வமே - நீயே**
**தலைநின்றாய் இவ்வுலகில்**
**தாள்பணிந்தேன் நீயிங்**
**கிலையென்றால் இன்பமெனக் கேது?**

**– கவிஞர் முடியரசன்**

வெறுந்தொதுக்கியுள்ளனர். ஒரு சமயம் ஆகம நெறிமுறைக்கு ஈடான நெறிமுறைகள், வேதங்களிலும் உள்ளன என்று சிலர் வந்து வாதிட்டனர். இவ்வாறு ஏற்பட்ட சூழ்நிலையே கோயில்களால் உள்நாட்டு வழிபாட்டு முறை மரபு வழி வந்தவையாகும் என்பதைப் புலப்படுத்துகிறது என்றும் திரு வெங்கடாச்சாரி கூறியுள்ளார்.

இன்று வழக்கத்தில் உள்ள ஆகமங்கள் யாவும் வடமொழியில் (சமஸ்கிருதத்தில்) காணப்பெறுகின்றன. இவை கி.பி. 2ஆம் நூற்றாண்டு முதல் 5ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலகட்டத்தில் தமிழிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றிருக்க வேண்டும் என்றும் பாவாணர் கருதுவார். சிவஆகமங்களில் மூலமானவை ஒன்பது என்பதும் ஏனைப் பதினொன்பதும் அவற்றின் வழிப்பின்னர் தோன்றியது என்பதைத் திருமூலரின், கீழ்க்காணும் பாடலால் தெரியலாம்.

***பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்***
***உற்றநல் வீரம் உயர்சித்தம் வாதுளம்***
***மற்றவ் வியாமளம் ஆகும் – காலோத்தரம்***
***துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே***

தற்போது மூல சிவாகமங்கள் 28ம் உப சிவாகமங்கள் 207ம், சாக்த ஆகமங்கள் 64ம் (மேலும் உள்ளதாகக் கூறுவர்) வைணவ ஆகமங்கள் 2ம் உள்ளதாகக் கொள்ளப்படுகிறது. வைகானச ஆகமம் மற்றும் பாஞ்சராத்ர ஆகமம் ஆகியவை வைணவ மூல ஆகமங்களாகும். இவற்றின் வழி மேலும் சில வைணவ ஆகமங்களும் எழுந்துள்ளன.

பிருகு முனிவரால் எழுதப்பெற்ற ஆகம நூலின் க்ரியாதிகாரத்தில் உருவவழிபாடுதான் மற்ற அனைத்து விதமான வழிபாடுகளைக் காட்டிலும் உயர்ந்தது என்றும் அவ்வாறு கருதுவதற்குக் காரணம் தெய்வத்தின் உருவமானது கண்ணையும் மனத்தையும் குளிர வைக்கிறது என்றும், பக்தியை வளர்க்கிறது என்றும் கூறுகிறது. பக்தியினால் மட்டுமே ஹரியை அடைய முடியும் என்ற ஆகம கோட்பாட்டை இது உறுதிப்படுத்துவதாக நம்மப்படுகிறது.

ஆகம நூல்கள் அனைத்திலுமே நான்கு பெரும் குறிகள் உள்ளன. அவை ஞான பாதம், யோக பாதம், க்ரியா பாதம், சர்யா பாதம் என்று கூறப்படுகின்றன. க்ரியா பாதத்தில்தான் ஒவ்வொரு தெய்வத்துக்கும் உரிய மந்திரம் யந்திரம், (டையாகிராம்ஸ்) முத்திரைகள், யாக சாலை அமைப்பு, யாகமுறை, கோயில் அமைப்பு, விழாக்கள் நடத்துதல் மற்றும் வீடு, கோயில், அரண்மனை ஆகியவை அமைப்பதற்கான நிலம் தேர்ந்தெடுத்தல் மற்றும் அமைத்தல், பல வகை சிவலிங்கங்கள், தெய்வங்களை உருவாக்குவதற்கான விதிமுறைகள் ஆகிய அனைத்தும் விளக்கப்படுகின்றன.

சர்யா பாதத்தில் பூசை செய்வோனுக்கான நெறிமுறைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. உடலைத் தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் பல்வகைக் குளியல்கள், விடியற்காலைக் குளியல், திருநீறு தயாரிக்கும் முறை, திருநீற்றைப் பூசிக்கொள்வதற்கான விதிமுறைகள் தெய்வ மந்திரங்களைப் படிப்பதற்கான நெறிமுறைகள், தெய்வங்களை வழிபடும் முறை ஆகியவை இதில் அடங்கும்.

ஆதலால் ஆகமங்களில் கூறப்பட்டுள்ள நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றி எந்த மொழியில் வழிபட்டாலும் இறைவனது அருளைப் பெறலாம். இன்ன மொழியில்தான் வழிபாடு நடத்தப்படவேண்டுமென்று எந்த ஆகம நூலிலும் குறிப்பாகத் தெரியவில்லை. மேலும் தொன்மையான ஆகம நூல்கள் தமிழிலே எழுதப் பெற்றிருந்தன. பின்னாளில் அவை வடமொழியில் மொழியாக்கம் செய்யப் பெற்றுள்ளன. அந்நூல்களே தற்போதுள்ள ஆகம நூல்கள் என்பதால் சமஸ்கிருதத்தில்தான் வழிபாடு செய்யவேண்டும் என்று கூறுவது சரியாகுமோ? முதலில் தமிழில் தானே அந்நூல்கள் இருந்தன. ஆதலால் தமிழில் வழிபாடு செய்வது என்பது எந்தவிதத்திலும் நெறிமுறைகளுக்கு மாறானது ஆகாது. மாறாக இறைவனைத் தமக்குப் புரிந்த ஒரு மொழியால் வழிபடும்போது தமது உள்ளம் நெஞ்சுருகி இறையோடு இரண்டறக் கலக்கும் வாய்ப்பும் எழும் சமயக் குரவர்கள் அனைவரும் தங்களது தாய்மொழியாலேயேதான் கண்ணீர் மல்கக் கசிந்துருகி வழிபட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தம் திருவருளால் காட்சியளித்த இறைவன் சாதாரணப் பொதுமக்கள் உள்ளம் ஒன்றி வழிபடும்போது அம்மக்களுக்குத் தம் கருணையைக் காட்டாதொழுவாரா? ஒவ்வொருவரும் அவர்களுக்குத் தெரிந்த மொழியில் வழிபடுவது போன்றே இறைவனுக்கு வழிபாடு நடத்தும் முறையும் அவர்களுக்குத் தெரிந்த மொழியில் செய்வது தானே சிறந்தது.

அதற்கு வழிவகுத்த அரசைப் போற்றிப் பாராட்டுவதுதானே நம் அனைவரின் முழுமுதற் கடமையாகும். அதே நேரத்தில் தமிழ் அறியாதவர்கள் மற்றும் சமஸ்கிருதத்திலேயே வழிபாடு செய்யவேண்டும் என்று விரும்புவோர்க்கு சமஸ்கிருதத்தில் வழிபாடு நடத்துவதற்கும் அனுமதிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளதை மனமாரப் பாராட்ட வேண்டாமா? மாறாக சமஸ்கிருதத்தில் வழிபாடு நடத்தினால்தான் இறைவனின் சொற்பதும் கடந்த தொல்லோன் என்னும் மணிவாசகப் பெருமானின் கூற்றைப் பொய்யாக்குவது போலல்லவா ஆகிவிடும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி:5368926/5368927/5364906

**கோ-ஆப்டெக்ஸ் -ன் நல்வாழ்த்துகள்**

# அன்றும் இன்றும் என்றும்
# கோ-ஆப்டெக்ஸ்



கோ-ஆப்டெக்ஸ் ரகங்கள்:

- பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்
- லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்
- படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ் நாடு கைத்தறி

★ இன்றே அருகில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு வருகை தாரீர்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



